# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 23 சனிக்கிழமை [08 - 08 - 1998] SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்:10


# செம்மணிப் புதைகுழியை தோண்ட ஆயத்தங்கள்!

## சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது

கொழும்பு, ஓகஸ்ட் 8

செம்மணியில் உள்ளதாகக் கருதப்படும் மனித புதைகுழிகள் பெரும்பாலும் அடுத்தவாரத்தில் தோண்டப்படலாம். இதற்கான ஏற்பாடுகளை சட்டமா அதிபர் திணைக்களம் செய்துவருவதாகத் தெரிகிறது.

ஆரம்பத்தில் புதைகுழிகளை தோண்டும் பணிகளை ருகுணு பல்கலைக்கழக சட்ட மருத்துவத்துறை பேராசிரியர் சந்திரசிறி நிரியல்லவின் கண்காணிப்பில் செய்யலாம் என்றும் — பின்னர் அங்கு மனித சடலங்களின் சிதைவுகள் காணப்பட்டால் அது பற்றிய மருத்துவ ஆய்வுகளைச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட துறையில் சிறப்புத்தகுதி படைத்த வெளிநாட்டு நிபுணர்களின் உதவியைக் கோரலாம் என்றும்— சட்டமா அதிபர் கருதுவதாகத் தெரிகிறது.

இது தவிர— சட்டவைத்திய அதிகாரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கிருஷாந்தி கொலை வழக்கின்

## குற்றவாளிகளைச் செம்மணிக்கு கூட்டி வருவதில் பாதுகாப்பு சிக்கல்

கொழும்பு, ஓக. 8

செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுவதற்காக கிருஷாந்தி கொலைவழக்கின் ஐந்து குற்றவாளிகளையும் செம்மணிக்குக் கூட்டி வர வேண்டியுள்ளது. ஆனால் அதில் பெரும் பாதுகாப்புப் பிரச்சினை இருப்பதாகக் கூறப்படுகின்றது.

செம்மணியில் நானூறு சடலங்கள் வரை புதைக்கப்பட்டிருப்பதாகக் கூறிய — கிருஷாந்தி கொலை வழக்கின் முதலாவது குற்றவாளியான — சோமரத்ன ராஜபக்ஷ, தம்மைச் சிறையில் சந்தித்த மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகளிடம் செம்மணியில் புதைகுழி இருப்பதாக மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறி வருகின்றார்.

ஆனால் புதைகுழிகள் இருக்கும் இடத்தை அவர் தெளிவாகத் தெரிவிக்கவில்லை.

தம்மை அங்கே கூட்டிச் சென்றால் நேரில்தாம் இடத்தைக் காட்டுவதாக அவர் உறுதி கூறுகிறார்.

செம்மணிக்கு நேரில் செல்ல வேண்டும் என்று அவர் வற்புறுத்துவது அதிகாரிகளுக்குச் சில சந்தேகங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடிகள் அகற்றும் திட்டம் கைவிடப்படலாம் என எச்சரிக்கை

லண்டன், ஓக. 8

கண்ணிவெடிகளை அகற்றும் போது ஏற்படும் அவசரச் செய்திகளை உடனுக்குடன் தெரிவிப்பதற்குத் தேவையான தொலைத்தொடர்பு சாதனங்களை யாழ். எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி தராவிட்டால் அத்திட்டத்தை ரத்துச் செய்ய வேண்டி ஏற்படும் என ஐ. நா. அபிவிருத்தித் திட்டக்குழு அரசுக்கு எச்சரிக்கைவிடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் தொலைத் தொடர்புச் சாதனங்களை புலிகள் எடுத்துச் சென்றுவிடுவார்கள் என அரசு நினைத்தால் அக்கருவிகளில் முக்கியமானவற்றை இராணுவ முகாம்களுக்குள் வைப்பதிலும், அங்கேவைத்து அவற்றை இயக்குவதிலும் தமக்கு ஆட்சேபனை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பயங்கரவாத ஒழிப்புத் திட்டத்தின் கீழ்

## இலங்கைப் பொலீஸாருக்கு அமெரிக்கா சிறப்புப் பயிற்சி

கொழும்பு, ஓக. 8

பயங்கரவாத ஒழிப்பு ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் அமெரிக்கா இலங்கைப் பொலீஸாருக்கு நவீன — விசேட — பயிற்சிகளை வழங்க முன்வந்துள்ளது.

மேற்படி ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் லூசியானா மாநிலத்தில் 15 பொலீஸாருக்குத் தற்போது 3 வாரப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப் பயிற்சி நெறிக்காக ஆறு மொழி பெயர்ப்பாளர்களும் சென்றுள்ளார்கள்.

பல்வேறு ரக குண்டுகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் வழி தப்பிய மூன்று மீனவர் மீட்பு!

பருத்தித்துறை, ஓக. 8

பொலிகண்டியில் இருந்து மீன்பிடிக்க வள்ளம் ஒன்றில் நேற்று முன்தினம் சென்ற மூன்று இளம் மீனவர்கள் கடல் நீரோட்டத்தில் சிக்கி வள்ளத்தோடு திக்குத்திசை தெரியாது அள்ளுண்டுபோன போது, படையினர் அவர்களைத் தேடி மீட்டதாக வடமராட்சியில் உள்ள படையணியின் பிரிகேட் தளபதி கேணல் சனத் கருணாரட்ன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கடலுக்குச் சென்ற இம் மீனவர்கள் கரை திரும்பாதது குறித்து நேற்றுக் காலை பொலிகண்டியில் உள்ள இராணுவ முகாமில் அவர்களது உறவினர்கள் முறைப்பாடு செய்தனர்.

தகவல் கிடைத்ததும் — பிரிகேட் தலைமையகத்தின் பணிப்புரையின்படி — வல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பப் பெண் நேற்று மிதிவெடியில் காலிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்ப்பாணம்கஸ்தூரியார் வீதியில்—யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில்—உள்ள வீடொன்றில் நேற்று மாலை 4 மணியளவில் மிதிவெடியில் சிக்கிய குடும்ப மாது ஒருவர் தனது இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

வன்னியிலிருந்து ஆறு மாத காலத்துக்கு முன்னர் இங்கு திரும்பி, தனது சிறு பிள்ளைகளுடன் தனித்து வசித்து வந்த மகேந்திரன் சுசீலா (வயது 40) என்ற பெண்ணே இவ்வாறு காலை இழந்தவராவார்.

விளையாடிக் கொண்டிருந்த தமது பிள்ளைகளுக்கு பந்தை எடுத்துக் கொடுப்பதற்காக வீட்டு ஓடைக்குள் சென்ற சமயம் அவர் மிதி

(8 ஆம் பக்கம் பார்க்க )

## மன்னாரில் மற்றொருவர் நேற்று சடலமாக மீட்பு!

கொழும்பு, ஓக 8

மன்னார் காட்டுப்பள்ளி என்ற இடத்தில் இருந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக ஒருவர் நேற்றுக் காலை மீட்கப்பட்டார்.

மன்னாரில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு தடை செய்யப்பட்ட பொருள்களைக் கடத்த முயன்ற சமயம் நேற்று முன்தினம் இரவு இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் என்றும்— பெரியமடுவைச் சேர்ந்த இராசநாயகம் செல்வநாயகம் என்பவரே சுடப்பட்டவர் என பின்னர் அடையாளம் காணப்பட்டார் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவும் இதேபோன்று தடை செய்யப்பட்ட பொருள்களை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு எடுத்துச்சென்றதாகக் கூறப்படும் ஏழு பேர் சுடப்பட்டு உயிரிழந்தமை தெரிந்ததே. (உ-164-3)

## உடலில் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்ட மாணவன்

### அநுராதபுரத்தில் கொடுமை

கொழும்பு, ஓக. 8

அநுராதபுரம்நிவந்தகசைத்திய மத்தியமகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் பெற்றோல் ஊற்றி தீவைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளான்.

கடந்த 4 ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

அந்தப் பாடசாலை சிரேஷ்ட மாணவ முதல்வனாகவும் சிறந்த மாணவனாகவும் விளங்கிய இவன் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவன்.

பாடசாலையில் இருந்து 20 மைல் தூரத்தில் அந்த மாணவனின் வீடு இருந்ததால் அந்த மாணவன் பாடசாலைக்கு அருகில் ஒரு வீட்டில் தங்கி கல்வி பயின்று வந்தான்.

மாணவனின் ஏழ்மைநிலை கருதி பாடசாலை நிர்வாகம் பாடசாலை இரவு நேர காவலாளிப் பொறுப்பை அம் மாணவனுக்கு வழங்கி, அதற்

(8 ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்.

# ஒத்திவைக்கப்பட்ட தேர்தலுக்காக

# ஏற்கனவே ரூ.10 கோடி வரை செலவு!

கொழும்பு, ஓ‍ச. 8

திகதி நிர்ணயிக்கப்படா மல் ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலகள் தொடர்பான முன்னேற்பாடுகளுக்கு அரசு பத்துக் கோடி ரூபாவை செலவிட்டிருப்பதாகத் தெரி விக்கப்படுகின்றது.

இத்தேர்தல்கள் தொடர் பாக வாக்குச் சீட்டுகள் மற் றும் தொடர்புடைய ஆவ ணங்களை அச்சிடுவதற்கு மட்டும் சுமார் 9. கோடி 50 லட்சம் ரூபாவை அரசு செல விட்டுள்ளது என தேர்தல் ஆணையாளர் பணிமனை மற்றும் அரசாங்க அச்சக வட்டாரத் தகவல்கள் தெரி விக்கின்றன.

மாகாண சபைகளுக்கான தேர்தல் தொடர்பான அச் சுப் பணிகளுக்கு தேர்தல் ஆணையாளர் பணிமனை அரசாங்க அச்சகத்திற்கு 20 கோடி ரூபா வழங்கியுள்ளது. இந்த நிதியிலேயே நடை பெறவிருந்த தேர்தல்கள் தொடர்பான வாக்குச் சீட் டுக்கள் மற்றும் ஆவணங் களை அச்சிட ஒன்பதரைக் கோடி ரூபா செலவாகியுள் ளது எனத் தெரிவிக்கப்படு கிறது.

இதற்கு முன்னர் நடை பெற்ற மாகாண சபைகளுக் கான தேர்தல்களின் போது எம்பிலிப்பிட்டியவில் அமைந் துள்ள தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தால் தயா ரிக்கப்பட்ட விசேட கடதாசி யில் வாக்குச் சீட்டுக்கள் அச் சிடப்பட்டன. ஆனால் தற் போது நடைபெறவிருந்த மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்காக வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விசேட கட தாசியில் வாக்குச் சீட்டுக்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன. இந்த விசேட கடதாசி 'றோல்' ஒன்றின் விலை 40 ஆயிரம் ரூபா எனவும் இதற் காக 5 கோடி ரூபா செல விடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

# ஜனாதிபதித் தேர்தலில் ரத்வத்தை குதிப்பார்?

கொழும்பு, ஓகஸ்ட் 8

சிங்கள ஆணைக்குழுவுடன் தொடர்புடைய சில முக்கி யஸ்தர்கள்பாதுகாப்புப்பிரதி அமைச்சர் ஜெனரல் அனு ருத்த ரத்வத்தையை எதிர் வரும் ஜனாதிபதித் தேர்த லில் ஜனாதிபதி வேட்பாள ராக நிறுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரி விக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜென ரல் அனுருத்த ரத்வத்தைக்கு பிரதமர் பதவி வழங்கப்படா விடின் அமைச்சர் ரத்வத்தை பொது மக்கள் ஐக்கிய முன் னணியில் இருந்து வெளியேறு வார் என இம்முயற்சிகளில் ஈடுபடுவோர் நம்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது1

(உ-10)

## 50 முத்திரைகள் வெளியிடப்படும்

கொழும்பு, ஓக. 8

சுதந்திரப் பொன் விழாக் காலத்தில் 50 முத்திரைகள் வெளியிட நடவடிக்கை எடுக் குமாறு முத்திரைப் பணியகத் திடம் தபால், தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் மங்கள சமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

வழமையாக ஒரு வருடத் தில் 10 முதல் 20வரையிலான முத்திரைகளே வெளியிடப் படுவதாகத் தெரிவிக்கப்பட் டது.

(உ-3)

## கைது!

வவுனியா, ஓக. 8

வவுனியாவில் பொலீஸாரு டன் தொடர்புகளை வைத் திருந்த செல்வந்தர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கும் விடுதலைப்புலி களுக்கும் தொடர்பு உண்டா? என விசேட பொலீஸ்குழு ஒன்று விசார ணைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகின் றது.

(உ-21)


## தேவை

யாழ். நகரில் பிரபல்யமான புகைப்பட ஸ்தாபனத்திற்கு பெண் காசாளர் தேவை.

தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

15-08-1998 இற்கு முன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

326, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(58207)


## 22 மட்டக்களப்பு வாசிகள் நீர்கொழும்பில் கைது

கொழும்பு, ஓக. 8

நீர்கொழும்புப் பிரதேச நகைக் கடைகளில் தொழில் புரியும் — மட்டக்களப்பு வாசிகளான—22 பேர் பொலீ ஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார்கள்.

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச வாசிகளான இவர்கள், நகை தயாரிப்பு வேலை செய்பவர் களாவர்.

(உ-21)

## விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 8

ஜனசக்தி சனசமூகநிலைய விளையாட்டுக்கழக அறவழி மழலைகள் கல்விப் பூங்கா வின் விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மயிலணி முருகமூர்த்தி ஆலய மைதா னத்தில் அ. சந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந் நிகழ்வில் வலி. தெற்கு பிரதேச செயலர் ஆ. மகா லிங்கம் பிரதம விருந்தின ராகக் கலந்து கொள்வார்.

## பொது அறிவு போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 8

கைதடி தெற்கு சன சமூக நிலையத்தின் 43 ஆவது ஆண்டு விழாவையொட்டி தென்மராட்சி பிரதேச ரீதி யில் பொது அறிவு, பொது உளச்சார்பு பரீட்சை நாளை தென்மராட்சியில் 8நிலையங் களில் நடைபெறவுள்ளது.

(உ-5)

## செயலகத்தில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 8

இடம்பெயர்ந்த குடும்பங் களுக்கான உணவு முத்திரை விநியோகம் சம்பந்தமாக— பிரதேச செயலர்களும் பங்கு பற்றும்— கூட்டம் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு யாழ். செயலகத் தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்துக்கு யாழ். அரசாங்கஅதிபர் க. சண்முக நாதன் தலைமை வகிப்பார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### அரியகுட்டி சாமுவேல்

(சாம்)

தோற்றம் 06 – 09 – 1914 | மறைவு 09 – 07 – 1998

எதிலும் நிகரில்லாத உடுவைநகர் மேவும்
மதிமிகுந்தான் அரியகுட்டி சாமுவேல் ஐயா
பதிஉனையோ பார்த்தழைத்தாள் பத்தினி உம்
இரத்தினம்
இதிலுமொரு ஒற்றுமையோ உலகமிது அறியும்
கதியிழந்து வாடுகின்றோம் கடலனைய துயரால்.

மரணத்துயரில் கலந்து பங்கேற்ற அனைவருக்கும்
எம் நன்றிகள்!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மானிப்பாய் வீதி,
உடுவில்.

(58205)


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்றும் நாளையும்
முரளி - மீனா நடித்த
பொற்காலம்

திங்கள், செவ்வாய்
அருண்குமார், மந்தாரா
வடிவேலு நடித்த
ப்ரியம்

நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212223

(58135)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

இந்தியாவில்
200 நாள்களுக்கு மேல்
ஓடிய
சிவாஜி - ராதா
ஜனகராஜ்-வடிவுக்கரசு
சத்தியராஜ் நடித்த
முதல் மரியாதை
( குடும்பச் சித்திரம் )

தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/4489)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

இன்றும் நாளையும்
அரவிந்தசாமி,
மதுபாலா
நடித்த
ரோஜா
(இனிய பாடல்கள்
நிறைந்தது)
திரைப்படக் கூட்டுத்தா பன ( ரீல்ஸ் ) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30

(58191)


# மரண அறிவித்தல்கள்

## அன்ரன் கஸ்துல்மகான்

(மோகன்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் 27/2 புங்கங் குளம் வீதி, பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் கஸ்துல் மகான் (மோகன்) 07. 08. 98 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை மேரி யோசப், மேரியோசப்பின் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற திரு அன்ரனி, திருமதி அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், திருமதி வுளோறினா ஐறின் அவர்களின் பாசமிகு கணவரும், அகஸ்ரஸ் ஜெகான், அன்ரேசிகான் ஆகியோரின் அருமைத் தந்தையும், அருட்சகோதரி விஜயா (திருக் குடும்ப கன்னியர் சபை), அருட்தந்தைபோல் றொகான், லிகான், நித்தியா, அருட்சகோதரர் சௌகான் (நற்கருணை நாதர் சபை), றாஜகான் ஆகியோரின் சகோதரனும், செல்வின், கிளற்வின், ஜெஸ்லின், கொட்வின், மேளின், மேவின், ஸ்பெல் வின் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவரின் மரணச்சடங்குகள் பற்றிய விவரம் பின் னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
திருமதி ஐறின் மகான்
(மனைவி)

(58208)

## வெற்றிவேலு மாஸ்டர்

(பருத்தித்துறை)

ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்காக கல்வி பயிற்றுவித்துப் பல திணைக் களங்களிலும் பல் வேறு வகையான உத்தியோகத் தர்கள், கல்விமான்களை உருவாக்கிய அறிவு மேதை எமது ஆசான் வெற்றிவேலு மாஸ்டர் 5-08-98 இல் அமரத்துவம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மறுநாள் பருத் தித்துறையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை அவரது சகல மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வெற்றிவேலு மாஸ்டர் பழையமாணவர்
நலன்புரிச் சங்கம்.

பருத்தித்துறை.

(சி/4496)


## நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு!

## 'ராகம்ஸ்' பட்டுச் சோலை

தற்காலிக விற்பனை கிளை நிலையம்

அன்பர்கள், ஆதரவாளர்கள் நலன்கருதி நல்லூர் ஆலய முன்வீதியில் கொட்டகைக்கருகே திறந்து வைக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும முருகன் அருள் வேண்டிநிற்கும்:

ராகம்ஸ் பட்டுச் சோலை
24, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

கிளை
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(சி/4491)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று சூரியகந்த...

# இன்று செம்மணி!

**செம்மணியில் மனிதப் புதைகுழிகள் இருப்பதாக வெளியான செய்திகள் குறித்து சிங்கள மக்களின் உணர்வலைளைப் பிரதிபலிக்கும் விதத்தில் உபுல் ஜோசெப் பெர்னான்டோ எழுதிய கட்டுரை "லங்காதீப" வார இதழில் வெளியானது. அக்கட்டுரையின் தமிழாக்கம் இது.**

**தமிழில்: கஜனி**

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தில் குட்டிமணி முன்னணியில் திகழ்ந்தவர். நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனையை வழங்கிய போது அவருக்கும் எடுத்துக் கூற சில விடயங்கள் இருந்தன. அரசியல் வேறுபாடுகள் காரணமாக — பழிவாங்கல்கள் காரணமாக — எதிர்காலத்தில் எப்போதாவது ஒருநாள் சிங்கள மக்கள் எதிர்கொள்ள விருக்கும் வன்முறைகளைக் காண்பதற்காகத் தனது மரணத்தின் பின்னர் தனது இரு கண்களையும் சிங்களவர் ஒருவருக்கு வழங்கத் தான் விரும்புவதாக குட்டிமணி தெரிவித்தார்.

இவை குட்டிமணி நீதிமன்றில் தெரிவித்தவை. குட்டிமணி இவ்வாறு கூறி அதிக காலம் எடுப்பதற்கு முன்னர் நாடெங்கும் வெடித்த வன்முறைகளைக் காண குட்டிமணியும் இல்லை; அவரது இருகண்களும் எஞ்சியிருக்கவில்லை.

அந்தக் கண்கள் சிங்களவர்களாலேயே தோண்டப்பட்டன.

1983 ஜூலை மாதத்தில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் அத்துமீறி நுழைந்த காடையர்கள் குட்டிமணியின் இரு கண்களையும் தோண்டியதுடன் குட்டிமணியை துடிக்கத் துடிக்கக் கொன்றனர். இருப்பினும் குட்டிமணி கூறியது சரியே. தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை ஒத்த வன்முறைகளை 1988 இல் தென்பகுதியில் சிங்கள மக்கள் எதிர்கொண்டனர்; தங்களது கண்களால் நேரடியாகக் கண்டனர்.

### சூரியகந்த யாத்திரை

தென்பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைகளின் எதிரொலியாகவே சூரியகந்தவில் மனித சடலங்கள் குவிந்தன. சூரியகந்த மனிதர்கள் வாழமுடியாத தனிமையான இடமாகும்.

ஒற்றையடிப் பாதை வழியாக அங்கு சென்றடைவது சுலபமான காரியமல்ல. இருப்பினும் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையிலான முன்னணியினர் சூரியகந்தவுக்கு விஜயம் செய்தனர். அவர்கள வெறும் கைகளுடன் சூரியகந்தவுக்குச் செல்லவில்லை. சவள், மண்வெட்டி ஆகியனவற்றை எடுத்துச் சென்று சூரியகந்தவை அகழ்ந்தனர். இச்செய்தி காணாமற் போனோரின் பெற்றோர் மற்றும் உறவினர்களின் செவிகளுக்கு எட்டியது. அவர்களும் சூரியகந்த நோக்கி ஓடினர். "இது எனது மகனின் காற்சட்டைத் துண்டு" என ஒரு தாய் ஓலமிட்டாள்.

### புதைகுழி தோண்டும் படலம்

மனிதப் படுகுழிகளைத் தோண்டும் அரசியல் படலம் அன்று ஆரம்பமானது. 1994 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இருந்து 1994 டிசம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் வரையான காலஎல்லைக்குள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர் நாடெங்கும் மனிதப் புதைகுழிகளைத் தோண்ட ஆரம்பித்தனர்.

"உந்தப் புதைகுழிகளை கவனமாகத் தோண்டுங்கோ. 1971 கலவரத்தின்போது புதைத்த சடலங்களும் அகப்பட்டாலும் அகப்படும்" என அப்போது ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட காமினி திஸநாயக்கா இருபொருள்படக் கூறினார். நாடெங்கும் மனிதப் புதைகுழிகள் தோண்டத் தோண்ட, காணாமற் போனோரின் பெற்றோரும் உறவினரும் மனிதப் புதைகுழிகளைத் தேடி அலைந்தனர். தோண்டப்பட்டது அவ்வளவே. தோண்டுவதற்கு மண்வெட்டிகள் மற்றும் குசினி உபகரணங்கள் ஆகியனவும் பயன்படுத்தப்பட்டன. மனித எலும்புக்கூடுகளை வைத்து அடையாளங் காண எவராலும் முடியவில்லை. இருப்பினும் புதைகுழிகளைத் தோண்ட வேண்டிய அவசியம் சிலருக்கு இருந்தது. தொலைக் காட்சிப் படப்பிடிப்பாளர்கள், செய்தியாளர்கள் மற்றும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதேசத் தலைவர்களுக்கே அத் தேவை இருந்தது.

### பழைய பாவங்கள்

ஐ.தே. கட்சியினர் தங்களது பழைய பாவங்களை மூடி மறைக்க வழியின்றி முணுமுணுத்தனர். இந்த எலும்புகள் சில வேளைகளில் மிருகங்களின் எலும்புகளாக இருக்கக் கூடும் என்ற விதத்தில் பலவீனமான சமாதானங்களைக் கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். புதைகுழிகளைத் தோண்டும் அரசியல் குறித்து எவரும் எதைக் கூறினாலும் அது அப்போது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பழைய பாவங்கள் நினைவுக்கு வரும்போது மீண்டும் மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு வாய்ப்புக்களை உருவாக்கக் கூடாது என்ற பாடத்தையும் ஐ.தே. கட்சியினர் படித்தனர்.

காணாமல் போனோரின் உறவினர்கள் இத்துடன் திருப்தியடையவில்லை. இந்தப் படுகொலைக்குப் பொறுப்பானவர்களுக்குத் தண்டனை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். காணாமற் போனோரின் தோள்மீது ஏறி ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு இக் காரணத்தினாலேயே காணமற் போனோர் தொடர்பாக விசாரிக்க ஆணைக் குழுக்களை அமைத்தது.

### நீதிமன்றில் பிரிகேடியர்

இந்த விசாரணை ஆணைக்குழுக்களின், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரிகேடியர் ஒருவர் களுத்துறை நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். காணாமற் போனோரின் உறவினர்கள் தொடுத்த வழக்கு விசாரணை தொடர்பாகவே இந்த பிரிகேடியர் அழைக்கப்பட்டிருந்தார்.

"நாட்டைக் காப்பாற்றப் பிறந்த தங்களைப் போன்ற ஒரு போர் வீரன் இந்த நீதிமன்றத்தின் முன் அழைக்கப்பட்டது குறித்து நான் மனவேதனை அடைகிறேன். தங்களின் நேரத்தை மேலும் வீணாக்க நான் விரும்பவில்லை. செல்லுங்கள். நாட்டுக்காக ஆற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுங்கள்" — என நீதிவான் தெரிவித்தார்.

இந்த அதிகாரி யாழ்ப்பாணத்தை விடுவிக்க மேற்கொள்ளப்பட்ட "ரிவிரச" இராணுவ நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியவராவர். இந்த அதிகாரி மாத்திரமல்ல வடபகுதி இராணுவ நடவடிக்கைகளில் பொறுப்பாகப் பணியாற்றும் இராணுவம் மற்றும் பொலீஸ் அதிகாரிகள் மீது தென்பகுதி வன்முறைகள் தொடர்பாக அப்போது குற்றஞ்சாட்டப்பட்டது. வன்முறைக் குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்பான பாதுகாப்பு அதிகாரிகள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்படவேண்டும் என மனித உரிமை அமைப்புகள் எவ்வளவு எடுத்துக்கூறியுள்ள போதிலும் அரசு மெல்லவோ விழுங்கவோ முடியாத நிலையில் உள்ளது.

### கிடப்பில் போடப்பட்ட அறிக்கை

காணாமற் போனோர் குறித்து விசாரணைகளை மேற் கொண்ட ஆணைக் குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்ட போதிலும் அது பெட்டகத்தில் வைத்துப் பூட்டி வைக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இந்த அறிக்கை தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதாயின் வடக்கு— கிழக்குப் போர் முனைகளில் பணியாற்றும் பெரும் எண்ணிக்கையிலான இராணுவ, பொலீஸ் அதிகாரிகளை சிறைக் கூடங்களில் அடைக்க நேரிடும் என்பதாலேயே ஆகும். இதனால் காணாமற் போனோர் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் ஆயுட்காலம் மேலும் மேலும் நீடிக்கப்படுகிறது. இவ்வாறு நீடிக்கப்படுவதன் மூலம் தண்டனை வழங்கும் வாய்ப்புகளும் ஒத்திவைக்கப்படுகின்றன. காணாமற் போனோரின் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு மேற்கொண்டு எதையும் செய்ய முடியவில்லை. அவர்களது சோகக் கதைகளை அரங்கேற்றும் மேடைகளாக மாத்திரமே இந்த விசாரணை ஆணைக் குழுக்கள் அமைந்தன.

### புலிகள் அனுப்பிய செய்தி

காணாமற்போனோரின் பெற்றோரின் சங்கம் தென்பகுதியில் அமைக்கப்பட்ட போது விடுதலைப்புலிகளிடமிருந்தும் செய்தி ஒன்று கிடைக்கப்பெற்றது. சிறிமாவோ பண்டாரநாயக்கா, தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா ஆகியோர் பங்குபற்றிய இச் சங்கத்தின் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் அனுப்பியிருந்த செய்தி வாசிக்கப்பட்டது. இந்தச் சங்கம் அமைக்கப்பட்டதை அடுத்து பிரச்சினைகளை எதிர்நோக்கிய பிரேமதாசா அரசு விடுதலைப் புலிகள் அனுப்பிய இந்தச் செய்தியை ஆயுதமாகப் பயன்படுத்தியது. விடுதலைப் புலிகளுக்காக சிறிமாவோ பண்டாரநாயக்கா முதலைக்கண்ணீர் வடிப்பதாக பிரேமதாஸ அரசு அரச தொடர்பு சாதனங்கள் மூலமாக பெரிய அளவில் பிரச்சாரத்தை மேற்கொண்டது. இருப்பினும் காணாமற்போனோருக்காக பண்டாரநாயக்கா குடும்பத்தினர் பாடுபட்டனர்.

இருந்தபோதிலும் பண்டாரநாயக்காவின ஆட்சிக் காலத்தில் காணாமற்போனவர்களின் குடும்பத்தவர்கள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவைத் தேடி ஈ.பி.டி.பி. அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் அனுசரணையுடன் கொழும்பு வந்தனர். டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியை தனிப்பட்ட முறையில் சந்தித்து பலமுறை வேண்டுகோள் விடுத்த பின்னரே காணாமற்போனோரின் உறவினர்களைச்சந்திக்க ஜனாதிபதி உடன்பட்டார். ஜனாதிபதியைச் சந்திக்க காணாமற் போனோரின் உறவினர்களில் 12 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

டிசம்பர் மாதம் நத்தார் பண்டிகையின் போது இப்பிரதிநிதிகள் கொழும்பு வந்து "அலரி மாளிகையில்" ஜனாதிபதியைச் சந்தித்து தங்கள் துயரங்களைமுன்வைத்தனர். தமது கணவர்மார்களை, தமது பிள்ளைகளை மீட்டுத் தரும்படி ஜனாதிபதியிடம் கண்ணீர் மல்க வேண்டினர்.

### அன்றைய சந்திரிகா

சரியாக சில ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற காணாமற் போனோரின் பெற்றோர் மற்றும் உறவினரின் சங்கக் கூட்டத்திற்கு இப்போதைய ஜனாதிபதி- பதவிகள் எதுவுமற்ற — வெறும் சந்திரிகாவாகவே வந்திருந்தார். சுருங்கக் கூறின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினர் என்ற விதத்தில் மாத்திரம் வந்திருந்தார்.

தனது தந்தை மற்றும் தனது கணவன் ஆகியோரை இழந்த சோகத்திற்கும் ஆள்கள் காணாமற்போனதால் உருவாகியுள்ள சோகத்திற்கும் வேறுபாடு இல்லை என சந்திரிகா தெரிவித்தபோது அந்தக் கூட்ட மண்டபமே சோகத்தில் மூழ்கியது. தனது மகன் காணாமற் போனதால் சோகம் தாளாது உணர்ச்சி வசப்பட்ட தாய் ஒருத்தி மேடையை நோக்கி வந்தார். அவரது கையில் அவரது மகன் இறுதியாக அணிந்திருந்த உடையின் ஒரு துண்டு இருந்தது. ஆவேசமாக மேடைக்கு வந்த அவர் அப்போது பதவிகள் எவையுமில்லாத — தற்போது ஜனாதிபதியாக இருக்கும் — சந்திரிகாவைச் சந்தித்து தனது மகன் காணாமற் போன சோக வரலாற்றை எடுத்துரைத்தார்.

### மன்னிப்பு கோரினார்

டிசம்பர் மாதத்திலும் அவ்வாறான பெற்றோர்களே, மனைவிமார்களே (வடபகுதி) ஜனாதிபதியின் முன்னிலையில் ஓலமிட்டனர். ஒரே ஒரு வித்தியாசம். அவர்கள் தமிழர்கள். அதற்கு முன்னர் ஓலமிட்டவர்கள் சிங்களப் பெற்றோர்கள். அன்று கொழும்பு நவரங்ஹல லேயில் இருந்து சிங்களப் பெற்றோரின் சோகக்கதைகளைச் செவிமடுத்தார். இன்று அலரிமாளிகையில் இருந்து தமிழ்ப்பெற்றோரின் சோகக் கதைகளைச் செவிமடுத்தார். அன்று பதவிகள் எவையுமற்ற வெறும் சந்திரிகா இன்று நாட்டில் ஜனாதிபதி. பெற்றோரின் சோகக் கதைகளைச் செவிமடுத்த ஜனாதிபதி அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கும் வகையில் மன்னிப்புக் கோரினார். நாட்டின் பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதியே. பிரதம கட்டளை அதிகாரியும் அவரே. அவரது தலைமைத்துவத்தின் கீழ் நடைபெறும் யுத்தத்தின் போது காணாமற் போனோருக்காக ஜனாதிபதி மன்னிப்புக் கோரினார்.

"இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்திற்கு வருமாறு உங்களுக்கு நாங்கள் அழைப்பு விடுத்தபோது நீங்களும் ஓர் எதிர்பார்ப்போடு அங்கு வந்தீர்கள். ஆனால் அந்த எதிர்பார்ப்பு சிதைந்துவிட்டது" என ஜனாதிபதி ஒளிவு மறைவின்றித் தெரிவித்தார். ஜனாதிபதியின் வார்த்தைகளில் திருப்தியடைந்த பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து திரும்பி யாழ். சென்றனர்.

இந்த எதிர்பார்ப்புகளின் குறியீடாக கிருஷாந்தி கற்பழிப்பு படுகொலை வழக்கில் காவலரண் கடமையிலிருந்த சிப்பாய்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. நீதிமன்றத்தில் தீர்ப்பினை ஏற்பதற்கு முன்னர் எதிரிகளுக்கும் கூற வேண்டிய விடயங்கள் சில இருந்தன.

"யாழ்ப்பாணத்தில் செம்மணியில் மனிதப் புதைகுழிகள் உள்ளன. அந்தப் புதைகுழிகளில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் புதைக்கப்பட்டுள்ளனர். அதற்குப் பொறுப்பானவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள்" எனக் குற்றவாளி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ளோர் அனைவருக்கும் கேட்கும் விதத்தில் அவர்இவ்வாறுதெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் காணாமற்போனோரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் மாத்திரமின்றி சர்வதேச சமூகத்திற்கும் இது கேட்டது. இந்த வழக்கின் தீர்ப்பைக் கூர்ந்து அவதானித்து வந்த விடுதலைப் புலிகளுக்கும் இது எட்டியது. இதை அடுத்தே மனித உரிமை இயக்கங்கள் புதைகுழிகளைத் தோண்டுமாறு குரல்கொடுத்தன. இந்த மனிதப் படுகுழிகள் குறித்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்ஒருவரும் நாடாளுமன்றத்தில் வினா எழுப்பினார். இது ஓர் எதிர்பாராத நிகழ்வாகும். இவை யாவற்றினதும் பிரதிபலிப்பாகவே இந்த மனிதப் புதைகுழிகள் தொடர்பான உண்மை கண்டறியப்படும் என அரசு அறிக்கை விடுத்தது.

### வேறுபாடு என்ன?

சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே மனிதர்கள் வாழமுடியாத இடமே செம்மணியாகும். இராணுவ முகாம்கள் அமைந்துள்ள பகுதியாகும். சூரியகந்தவுக்கும் செம்மணிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் என்னவெனில் சூரியகந்த தெற்கில் அமைந்துள்ளது. செம்மணி வடக்கில் அமைந்துள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

மட்டுவில் கிழக்கு புத்தூர் வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடும் அருகிலுள்ள வளவும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி வேல்நாயகம், மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

[57854]

### வீடுகள் விற்பனைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் பிரதான குடியிருப்புப் பகுதிகளில் பிரபல பாடசாலைகளுக்கு, கோயில்களுக்கு அண்மையாக ஐந்து (5) வீடுகள் விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு இல. 61, மணல் தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(58150)

### விண்ணப்பப்படிவம்

அதிபர் சேவையின I, II, III, பதவிக்கான படிவமும், கல்வி நிருவாக சேவை பதவிக்கான படிவமும், விவரமும் விற்பனை ஆகின்றன. விவரம்: 17-7-98 வர்த்தமானியைப் பார்க்கவும். தபாலில் பெறுவதாயின் ரூபா: 10. அனுப்பவும். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

[58124]

### மணமகன் தேவை

இந்து உயர்குல குடும்பத்தைச் சேர்ந்த 39 வயது சுவாதி 2 ஆம் பாதம் 8 இல் செவ்வாய் உள்ள அரச நிரந்தர உத்தியோகத்திலுள்ள (மாதாந்த ஊதியம் 6000/-க்கு மேல்) மணமகளுக்கு தகுந்த மணமகனை சகோதரன் எதிர்பார்க்கின்றார். சீதனம் வழங்கப்படும். கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 768, C/O உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (58061)

### மணமக்கள் தேவை

அரசாங்க உத்தியோகம், மாஸ்ரர், போஸ்ட்மாஸ்ரர், சுப்பிறின்டன் தொழில் புரியும் மணமக்களும், வெளிநாட்டு மணமக்களும் உண்டு. தொடர்பு: சத்தி திருமண சேவை, 44/16A, மணல்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(58169)

### O/L MATHS 98

அவட சராசர முறையில ஆரம்ப அறிவினை 2 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். தொடர்ந்து அம்முறையைப் பயன்படுத்தி 31 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன். 10, கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.

[58185]

### இலகு திருமணசேவை

கனடா வாழ். Sponser செய்யக்கூடிய படித்த மணப்பெண்கட்கு வயது 24, 27, 29, 41 பட்டதாரி தரத்தில் மணமகன்கள் தேவை. மணமக்கள் தேர்வுக்குதொடர்பு: ஞாயிறு காலை துரை விமலா, 958/8, K. K. S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

[58197]

## 'மாஹோ' பருத்தித்துறையில்

உருளைக்கிழங்கு, தார், மோட்டார் சைக்கிள்கள் உட்பட பல்வேறு பொருள்களுடன் 'மாஹோ' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது.

(ஐ-173)

---

தரமான பிரதிகள்!

துரித சேவை!

உங்கள் கலர்ப் படச் சுருள்களை கொழும்பிலுள்ள அதிநவீன கலர் லாபில் (Colour Lab) கழுவிப் பெற்றிட

## சுனில் ஆட்ஸ்

SUNIL ARTS

272, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

24. 07. 98 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட றோல்களுக்கான படங்கள் வந்து விட்டன.

(சி/4499)

---

## யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க விசேட பொதுக்கூட்டம்

இடம்: நியூட்டன் கல்வி நிலையம்
(யாழ். ஆரியகுளம் சந்தி)

காலம்: 09 - 08 - 98 காலை 10 மணி
(ஞாயிறு) (O. T.)

அனைத்து (1997 உட்பட) வேலையற்ற பட்டதாரிகளையும், பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சி. இளங்கோ
செயலாளர்

ந. விஜயசுந்தரம்
தலைவர்

(சி-4998)

---

உ

## ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம் தீர்த்த உற்சவமும் பாராட்டு விழாவும்

இன்று சனிக்கிழமை தேவஸ்தானத்தில் 5. 30 மணிக்கு நடைபெறும்.

தேவஸ்தானத்தால்
பாராட்டிக் கௌரவிக்கப்படுபவர்.
'கலாரத்னம்', 'கலாபூஷணம்', 'மகாவித்வான்'
யாழ்ப்பாணம்
பிரம்மஸ்ரீ
**மா. த. ந. வீரமணிஐயர்**
அவர்கள்

### நிகழ்ச்சி நிரல்

(5 30 — 7-30)

இறை வணக்கம்: திருப்புகழ்

வரவேற்புரை; திரு. தி. செல்வமனோகரன்
(தூண்டி இதழ் ஆசிரியர்)

அறிமுகவுரை: பிரம்மஸ்ரீ இரா. சந்திரசேகர சர்மா

அருளுரை;
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

தலைமையுரை;
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)

வாழ்த்துரை:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கலாநிதி. சபா. ஜெயராசா
திரு. க. கனகரத்தினம் J. P.
(தலைவர், திவ்ய ஜீவன சங்கம்)
கலாநிதி நா. ஞானகுமாரன்
திரு. பொ. பாலசிங்கம்
(மாநகரசபை ஆணையாளர்)
திரு. அ. ஸ்ரீகுமரன்
(அதிபர், யாழ். இந்துக்கல்லூரி)

பாராட்டுரை;
பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணஐயர்
திரு. ஆ. மகாலிங்கம் (A. G. A.)
லயன் வ. பரமசிவம் J. P.
திரு. கு. இராமச்சந்திரன்
(பொறியியலாளர்)
பிரம்ம ஸ்ரீ ந. சதாசிவஐயர்
(செயலர், 'நியந்தீர்')

பட்டம் வழங்கல்: 'சம்வாதீஸ்வரர்'

7. 05 தேவஸ்தானம் சார்பாக மகா வித்துவான் பிரம்ம ஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்களுக்கு "சம்வாதீஸ்வரர்" எனும் பட்டம் வழங்கி கௌரவிப்பவர்.
வைத்திய கலாநிதி க. சிவநேசன்
(யா / போதனா வைத்தியசாலை)

7. 10 பதிலுரை: விழா நாயகன்

7. 15 நன்றியுரை: பிரம்மஸ்ரீ சௌ. சசிகுமாரசர்மா
(தேவஸ்தானம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

தேவஸ்தானம்

(58156)

---

# ஈழத் தமிழர் இன்னல்: ஜெனிவாவில் அறிக்கை

ஜெனிவா, ஓக. 8

இலங்கையில் தமிழர்கள் அனுபவித்து வருகின்ற இன்னல்கள் தொடர்பாகவும் —

மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் —

பல விடயங்களை உள்ளடக்கி தமிழர் மனித உரிமை மையத்தின் தலைமைக் காரியாலயம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

3 ஆம் திகதி ஆரம்பமான ஜெனிவாவில் உள்ள ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 50 ஆவது கூட்ட தொடரிலேயே இந்தஅறிக்கைகயை அது சமர்ப்பித்துள்ளது.

சட்ட விரோதமாகக் கொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சடலங்கள் பற்றி விசாரணைகளை மேற்கொள்வதற்கு குழுஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் வாழும் மக்கள் கல்வி, உணவு, மருத்துவம் போன்ற விடயங்களில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கிருஷாந்தியின் கொலை வழக்குடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு ஒரு கண் துடைப்பு நடவடிக்கை.

இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(இ-8-9)

## தேங்காய் விலையேற்றம்

வடமராட்சி, ஓக. 8

யாழ். குடாநாட்டில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது.

ஒரு தேங்காய் 20 ரூபா முதல் 24 ரூபா வரை தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தென்னை மரங்கள் பரவலாக அழிக்கப்பட்டமையால் தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியடைந்ததே இவ் விலை உயர்வுக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

(ஐ-173)

---

## டி. ஏ. எம். பட்டதாரிகள் சங்க பொதுச்சபைக் கூட்டம்

நாள்: 09 - 08 - 98 ஞாயிறு

இடம்: யா/ லங்கா ஆயுள்வேதக் கல்லூரி மண்டபம்.

நேரம்: காலை 11-30 மணி (பழைய நேரம்)

விடயம்: i சங்கயாப்பு தயாரித்தல்
ii பிற விடயங்கள்

அங்கத்துவம் பெற விரும்பும் சகல டி. ஏ. எம். பட்டதாரிகளையும் அழைக்கின்றோம்.

தலைவர்
DR. கு. ஸ்ரீ கணநாதன்

செயலாளர்
DR. ஈ. சுந்தரேஸ்வரன்

(58202)

---

## உடன் விற்பனைக்கு

### பாவிக்காத புத்தம் புதிய பொருள்கள்

மின்சார உபகரணங்கள், நாஷனல் இரண்டு கதவு குளிர்சாதனப்பெட்டி, நாஷனல் வாக்கூம் கிளீனர், நிலக்கம்பளம், எலெக்றிக் குக்கர் (OVEN), மேசை விசிறி, சிங்கர் Zig - Zog "Juki" தையல் மெசின்கள், பயனியர் ஸ்ரிறியோ செற்றின கபினெற் -றைக்கோட் பிளேயருடன், டபிள் குஷன் செற்றி, எலெக்றிக் ட்ரில்லர். இன்னும் பல.

திரு P. சின்னத்துரை
கார்த்திகேசு வீதி,
மீசாலை தெற்கு
(புதிய ஸ்ரேசன் முன் றோட்டில் ¼ மைல்)

(58203)

---

## ஹாட்லிக் கல்லூரி

பருத்தித்துறை

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### வருடாந்த பொதுச் சபைக் கூட்டம்

மேற்படி பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 16 - 08 - 1998 ஞாயிறு மு. ப. 10-00 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற உள்ளது. பெற்றோர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் தவறாது சமுகந் தரவும்.

**நிகழ்ச்சி நிரல்**

1. இறை வணக்கம்
2. தலைமை உரை
3. செயலாளர் அறிக்கை/ ஆண்டறிக்கை
4. பொருளாளர் அறிக்கை
5. புதிய செயற்குழுத் தெரிவு
6. நன்றி உரை

தலைவர் செயலாளர்

(சி-4488)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு அருந்துவோரில் பலருக்கு
# கண் பார்வை பாதிக்கும் ஆபத்து

யாழ்ப்பாணம் ஓக. 8

கசிப்பு அருந்தும் யாழ். குடாநாட்டு மக்களில் 90 சதவீதமானவர்களுக்கு கண் பார்வை முற்றாக பாதிக்கப்படும் நிலை தோன்றியுளத்தாக மதுவரித் திணைக்களத்தினர்கண்சிகிச்சை நிபுணரின் துணையுடன் நடத்திய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக தென்மராட்சி பிரதேச மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரி றொகான் சஞ்சேராஜீ உதயனுக்குத் தெரிவித்தார்.

கசிப்பு உற்பத்தி குடாநாட்டில் பரவலாக சட்ட விரோதமான முறையில்மேற்கொள்ளப்படுகின்றது. முறையற்ற வகையில் இந்தக்கசிப்பு வடிக்கப்படுவதால் ''மெதனோல்'' என்ற நச்சுப் பொருள் இந்த கசிப்பில் அதிகளவில் செறிந்து காணப்படுகின்றது. இதனால் கசிப்பு அருந்துவோர் குடற்புண், குடல்அழற்சி போன்றஅபாயகரமான நோய்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

அண்மையில் நாம் கண் சிகிச்சை நிபுணர்களின் துணையுடன் கசிப்பு பாவனையாளர்கள் பலரைஆய்வு செய்தோம் அதன் மூலம் கசிப்பு பாவனையாளர்களில் 90 சதவீதமானவர்கள் விரைவில் கண்பார்வையை முற்றாக இழக்கும் நிலையில் உள்ளனர் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை நீடித்தால் விரைவில் குடாநாட்டில் பலர் கண் பார்வையற்றவர்களாக மாறிவிடுவார்கள்.

இப்படி அவர் கூறினார்.

இவற்றை உணர்ந்தாவது கசிப்பு பாவனையாளர்கள் தமது பழக்கத்தை விட்டுவிடமுன்வர வேண்டும் எனவும்—

கசிப்பு தயாரிப்பவர்கள் மனிதாபிமான அடிப்படையில் அவற்றை தயாரிக்காமல் விட்டுவிட வேண்டும் எனவும்—

அவர் கேட்டுக் கொண்டார். (இ-9)

## உள்ளூர்ப் பொருள்கள் கப்பலில் கொழும்புக்கு

வடமராட்சி. ஓக. 8

புகையிலை, வெங்காயம், கடலட்டை, பனை உற்பத்திப் பொருள்கள், வெற்றுச் சோடாப் போத்தல்கள் என்பன கொழும்புக்கும், நாட்டின் தென்பகுதிக்கும் எடுத்துச் செல்வதற்காகக் கடந்த வியாழன் முதல் 'மெக்ஸ் ஹண்டி' என்ற கப்பலில் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து ஏற்றப்பட்டு வருகின்றன.

தனியார் முகவர்கள் இப் பொருள்களை எடுத்துச் செல்கின்றனர்.

இக் கப்பலில் வெங்காயம் கட்டணம் எதுவுமின்றியும், ஏனைய பொருள்கள் அரைக் கட்டணத்துடனும் எடுத்துச் செல்லப்படுகின்றன. (ஐ-173)

## முட்டை விலை வீழ்ச்சி

வடமராட்சி, ஓக. 8

யாழ்ப்பாணத்தில் முட்டையின் விலை குறைந்துள்ளது. முன்னர் 6 ரூபாவாக விற்கப்பட்டு வந்த முட்டை தற்போது 4ரூபா 50 சதமாக குறைந்துள்ளது. (ஐ-173)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 5. 30 மணி முதல் 7 மணிவரை ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை எஸ். குமாரசாமியின் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது.

துர்க்காதேவி மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும். (ஐ-8-30)

## மூக்குக்கண்ணாடி வழங்கல்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் கடந்த மாதங்களில் நடத்தப்பட்ட இலவச கண் பரிசோதனை முகாமில் மூக்குக்கண்ணாடி பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 100 பேருக்கு இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு கழகச்செயலகத்தில் தலைவர் லயன் டாக்டர் பீ. வி. தம்பித்துரை தலைமையில் நடைபெறும்.

இவ் வைபவத்திற்கு முதன்மை விருந்தினராக லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் (பார்வைக்கு முதலிடம்) லயன் பா. விஜயகுமாரும், சிறப்பு விருந்தினராக பிராந்திய தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ் அருளானந்தமும் கலந்து கொள்வர்.

மூக்குக்கண்ணாடி வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கழகத்தினால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக கழகச் செயலாளர் லயன் அ. பொ. செல்லையா தெரிவித்தார். (ஐ-117)

## விவசாயிகளுக்கு உபகரண உதவி

தொண்டமானாறு கெருடாவில் பகுதி விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரம், தெளிகருவி ஆகியவற்றுக்கான உதிரிப்பாகங்கள் உலக உணவு விவசாய நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதி விவசாயிகளுக்கு 61நீரிறைக்கும் இயந்திரங்கள் 61 தெளிகருவிகள் இந் நிறுவனத்தால் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன. இவை ஒவ்வொன்றையும் 5 விவசாயிகள் கூட்டாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது இவற்றை திருத்துவதற்கு வசதியாகவே இவற்றிற்கான உபகரணங்கள்வழங்கப்பட்டுள்ளன. (ஐ-173)

## வரந்தருவாய் கந்தா!

அற்புதனே அன்பு நிறை கந்தா கந்தா
ஆறுமுக நற்பொருளே கந்தா கந்தா
இறையனார் திருமகனே கந்தா கந்தா
ஈழநல்லைப் பதியமர்ந்த கந்தா கந்தா
உபதேச மெய்ப்பொருளே கந்தா கந்தா
ஊராறு படையமர்ந்த கந்தா கந்தா
எழில்வடி வானவனே கந்தா கந்தா
ஏந்தலே எமையாளும் கந்தா கந்தா
ஐயாவுனைத் தொழுதோம் கந்தா கந்தா
ஒப்பற்ற வரந்தருவாய் கந்தா கந்தா
ஓடிவந்தோம் நின்பதமே கந்தா கந்தா
ஔடதமே எமக்கருள்வாய் கந்தா கந்தா!

- அரியாலையூர் சி. சிவதாசன்

## இணங்கியே அருள்வாய்!

தங்கவேல் கையிலெடுத்து தோகை மயிலேறிடும் குமரா
அரனார்க்கு உறுபொருள் வேதம் உபதேசித்த குகனே
அகத்திய மாமுனிக்கு நற்றமிழ் செப்பிய தலைவா
திருவருணகிரியைத் திருப்புகழுதளிக்க அருளிய நிமலா
சீர் வள்ளி தெய்வயானையை மருங்கிலமர்த்திட்ட
கோவே
கயமுகசூரன் குலமதை வதைத்திட்ட கோழிக்
கொடியுடைச்சண்முகா
அல்லும் பகலும் செந்தமிழ் ஞானகுரு உன்னையே
மனமுருகித் துதிக்கின்றோம் நல் வரங்கள் தன்னை நீ
இணங்கியே அருள்வாய் நல்லூர்ப்பதியுறை
செந்தில் வேலவனே

= நயினை விஜயன்



## குழந்தை வேலன்!

குழந்தை வேலா குமரகுருபர அரகர சிவசிவ
தொழும் தெய்வமும் நீ சுற்றம் நீ துணை நீ
துன்ப இன்பமும் நீ

எழுந்து என்னிடம் விரைந்து வந்து
இடர்களைந்து காத்திடுவாய்

பழந் தமிழர்கள் பரிந்து செந்தமிழ்
அறைந்து சிந்தை நொந்து உருகலந்திடு
வளைந்த சூரர்கள் தளங்கெடக் கிரி உடைந்து
போகவே
சிவந்த வேல்விடு

—யோகர் சுவாமிகள்

# செய்திக் கொத்து

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 8

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீபால கதிர்காம தேவஸ்தான தீர்த்தோற்சவ தினமாகிய இன்று சனிக் கிழமை மாலை 5. 30 மணிக் குமகாவித்துவான் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயருக்கு ''சம்வாதீஸ்வரர்'' என்னும் பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளார்.

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரம்மஸ்ரீ இராமசந்திரசேகர சர்மா அறிமுகவுரையையும் நல்லை ஆதீன முதல்வர் அருளுரையையும் வழங்குவார்கள்.

வாழ்த்துரைகள், பாராட்டுரைகளைத் தொடர்ந்து வைத்திய கலாநிதி க. சிவநேசன் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயருக்கு தேவஸ்தானம் சார்பாக பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் அணிந்து சம்வாதீஸ்வரர் என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிப்பார். (ஐ-8)

## புலமைப்பரிசில் திட்டம்

வடமராட்சி, ஓக, 8

பருத்தித்துறை மெதடிஸ்தபெண்கள் உயர்தரப் பாடசாலையில் நெல்லியடியைச் சேர்ந்த பாஸ்கரன் இந்திராணி என்பவரின் பெயரில் புலமைப் பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கென ஓர் இலட்சம் ரூபாய் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில் கிடைக்கும். (ஐ-173)

## துறைமுக ஊழியர் காயம்

வடமராட்சி, ஓக. 8

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த ஊழியர் ஒருவர் மூடைகள் விழுந்து காயமடைந்தார்.

கெருடாவிலைச் சேர்ந்த எஸ். குணரத்தினம் என்பவரே காயமடைந்தவராவர். இவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-173)

## ஒப்பந்தம் வழங்க குழு நியமனம்

நெல்லியடி, ஓக. 8

வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச சபைக்குட்பட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு ஒப்பந்தம் வழங்கவென தலைவர் உட்பட ஏழு பேர் கொண்ட குழுவினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான முதலாவது அமர்வு கடந்த 30 ஆம் திகதி காலை நெல்லியடி பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திலேயே இக்குழுவினர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஈ. பி. டி. பி. சார்பில் (தலைவருடன்) நால்வரும், ரெலோ சார்பில் ஒருவரும், புளொட் சார்பில் ஒருவரும், ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் ஒருவருமாக மொத்தம் ஏழு பேர்கள் சபை உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்பட்டனர். (இ-109)

## புலமைப்பரிசில் கொடுப்பனவு கிடைக்கவில்லை

வடமராட்சி, ஓக. 8

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பருத்தித்துறையைச் சேர்ந்த பிரேமரத்தினம் துஷ்யந்தினி என்ற மாணவிக்கு இன்னமும் புலமைப்பரிசிலுக்குரிய கொடுப்பனவு கிடைக்கவில்லை.

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்திலிருந்து 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய இம் மாணவி தற்போது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் பயின்று வருகிறார். (ஐ-173)

## மதகு திருத்தம்

உரும்பராய், ஓக. 8

உரும்பராய் கோப்பாய் பிரதான வீதியில் மினக் கட்டான் வேம்படியிலுள்ள மதகு புனரமைக்கப்படுகிறது. இவ்விடத்தில் வீதி போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் அருகில் அமைந்திருக்கும் ஒழுங்கையைப் பயன்படுத்தும்படி பயணிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஐ-154)

## தொலைபேசி செயலிழப்பு

வடமராட்சி, ஓக. 8

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இணைக்கப்பட்டுள்ள தொலைபேசி கடந்த சில தினங்களாகச் செயலிழந்துள்ளது. (ஐ-178)

## குளிர்சாதனப் பெட்டி அன்பளிப்பு

உரும்பிராய், ஓக. 8

கோப்பாய் கால்நடை வைத்திய நிலையத்திற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் குளிர் சாதனப்பெட்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. மருந்து வகைகள் கெட்டுப்போகாது பாதுகாக்கவும், செயற்கை முறைச்சினைப்படுத்தலுக்கு உபயோகிக்கும் விந்துக்களைப் பாதுகாக்கவும் இதன் மூலம் வழியேற்பட்டுள்ளது. (ஐ-154)

## வீதி திருத்தம்

தென்மராட்சி, ஓக. 8

நீண்டகாலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்பட்ட சாவகச்சேரி யிலிருந்து தனங்களப்பு ஊடாக நாவற்குளி வரையிலான ஏழுமைல் நீளமான வீதி யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் திருத்தப்பட்டு வருகிறது.

இவ் வீதியில் சேதமடைந்திருந்த மூன்று மதகுகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன, (ஐ-117)

## மீண்டும் மண்வெட்டி விநியோகம்

வலிகாமம் பிரதேச செயலர் பிரிவுகளில் தவறவிடப்பட்டவர்களுக்கான இலவச மண்வெட்டி விநியோகம் மீண்டும் நடைபெறவுள்ளது.

தவற விடப்பட்டவர்களின் பட்டியல்களை கிராம அலுவலர்கள் ஊடாக பிரதேச செயலர்கள் தயாரித்து வருகின்றனர். (ஐ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விசேட நீதிமன்ற விசாரணை ஆரம்பம்

# கிளின்ரனுடனான பாலியல் உறவு; மொனீக்கா உண்மை கூறினாரா?

## அடுத்த மாதமே முடிவு தெரியும்

வாஷிங்டன், ஒக் 8

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுடன் பாலியல் தொடர்பு வைத்திருந்ததாக கூறப்படும் முன்னாள் வெள்ளை மாளிகை பெண் உதவிப் பணியாளர் மொனீக்கா லுவின்ஸ்கி விசேட நீதிமன்ற விசாரணையில் சாட்சியமளிக்கத் தொடங்கியுள்ளார்.

வாஷிங்டனில் நேற்று முன் தினம் சுமார் 8 மணிநேரம் அவர் சாட்சியமளித்தார்.

தம் மீது வழக்குத் தொடரப்படமாட்டாது என உத்தரவாதம் அளிக்கப்பட்டால் கெனத் ஸ்ரார் தலைமையிலான சட்ட நிபுணர்கள் நடத்தும் விசாரணைக்கு உதவத்தயார் என மொனீக்கா அண்மையில் அறிவித்திருந்தார்.

தற்போது ஆரம்பமாகியுள்ள விசாரணையின் போது அதிபர் கிளின்ரனுடன் ஒரு சில விதமான பாலியல் தொடர்புகளை கொண்டிருந்ததை மொனீக்கா ஒப்புக்கொள்வார் என கோடி காட்டப்பட்டிருப்பதால் அமெரிக்க மக்களின் கவனம் இந்த விவகாரம் மீது மீண்டும் திரும்பியிருக்கிறது.

ஆனால் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து சாட்சியமளிக்கும் போது பொய் கூறுமாறு கிளின்ரன் தன்னை வற்புறுத்தினாரா என்பதை மொனீக்கா தெரிவிப்பாரா என்பது பெரும் கேள்விக் குறியாகவே உள்ளது.

அமெரிக்க அதிபரின் தனிப்பட்ட மற்றும் அரசியல் வாழ்க்கையை மாற்றியமைத்து விடலாம் என எதிர்பார்க்கப்படும் இந்த விவகாரம் தற்போது சூடுபிடித்திருக்கிறது.

வாஷிங்டனில் ஆரம்பமாகியுள்ள தற்போதைய விசாரணை மிகவும் அந்தரங்கமான முறையில் நடத்தப்படுவதால் முடிவுகள் உடனடியாகத் தெரியவர வாய்ப்பில்லை.

சுதந்திர வழக்கறிஞர் கெனத் ஸ்ரார் தமது விசாரணை அறிக்கையை அடுத்த மாதம் வெளியிடவுள்ளார். அதன் பின்னரே இந்த விவகாரத்தின் உண்மைகள் வெளிவரும்.

(ஐ)

# வெள்ள அழிவுகள்

பேய்ஜிங், ஒக.7

தென் கிழக்கு ஆசியாவை கடும் மழை பாதித்துள்ளது. சீனா, தென் கொரியா, ஜப்பான், தைவான், இந்தோனேசிய நாடுகளில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது.

சீனாவில் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

(ஐ)

## அன்று சூரிய கந்த....

(மூன்றாம் பக்கத் தொடர்)

சூரியகந்தவில் சிங்கள இளைஞர்கள், யுவதிகளின் எலும்புக்கூடுகள் உள்ளன. செம்மணியில் தமிழ் இளைஞர்கள் யுவதிகளின் எலும்புக்கூடுகள் உள்ளன. சூரியகந்தவில் சிங்கள இளைஞர், யுவதிகளின் பெற்றோர்களின் அழுகுரல் கேட்கிறது. செம்மணியில் தமிழ் இளைஞர்கள் யுவதிகள், பெற்றோரின் அழுகுரல் கேட்கிறது.

இந்தக் கண்ணீர்களில் உள்ள வேறுபாடுகள் எவை? இந்த மனித எலும்புக்கூடுகளிடையே என்ன வித்தியாசம்? இந்த இரத்தங்களில் என்ன வேறுபாடுகள்?

### செம்மணி செல்ல மறுக்கும் பாதங்கள்

வேறுபாடுகள் எவை இருப்பினும் ஒன்று பொதுவானது. இழைக்கப்பட்ட அநீதி பொதுவானது. அதாவது சூரியகந்தவைப் போலவே செம்மணியும் மனித நேயம் புதைக்கப்பட்டு அநீதி மோலோங்கிய களமாய் விளங்குகிறது. அன்று சூரிய கந்தவுக்கு விஜயத்தை மேற்கொண்டோரின பாதங்கள் இன்று செம்மணிக்குச் செல்ல மறுக்கின்றன. அன்று சூரிய கந்தவில் அகழ்வுகளுககுப் பயன்படுத்தப்பட்ட மண்வெட்டிகள் இன்று செம்மணியில் கூர் மழுங்கிக் கறன்பிடித்துள்ளன. அன்று சூரியகந்தவில் கூக்குரலிட்ட குரல்கள் இன்று செம்மணியில் ஊமைகளாகி விட்டன. சூரியகந்த சம்பவங்களுக்கு முன்னுரிமை அளித்த செய்தியாளர்கள் கூட இன்று செம்மணி விடயத்தில் அமைதி பேணுகின்றனர்.

இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்?

குலமாக இருக்கலாம், மதமாக இருக்கலாம், இனமாக இருக்கலாம், இல்லையேல் கட்சியாக அல்லது அரசாங்கமாக இருக்கலாம்.

''அவர்கள் தமிழர்கள்; அவர்கள் விடுதலைப் புலிகள்; அவர்கள் கொலைகாரர்கள்; அவர்களைக் கொல்ல வேண்டும்; கொன்று புதைக்க வேண்டும்'' என சிலர் கூறக்கூடும். மக்கள் மாத்திரமின்றி பத்திரிகையாளர்களும் கூறக்கூடும்.

தென்பகுதியில் இடம்பெற்ற அடக்கு முறைகளிலும் பார்க்க வடபகுதியில் இடம்பெற்ற அடக்கு முறைகள் நியாயமானவை என்ற சிங்கள மக்களின் வாதத்தில் நியாயம் இருக்கக் கூடும். இருப்பினும் வன்முறைகள் வடக்கில் இடம்பெற்றாலும் தெற்கில் இடம்பெற்றாலும் வன்முறைகளே. இந்த வன்முறைகள் வடக்கிலாவது தெற்கிலாவது இடம்பெற வாய்ப்பளிக்கப்படுமாயின் மனித நேயம் கொல்லப்படும்; நீதிக்கு இடமில்லாமல் போகும். 1983 ஜூலையில் செய்த பாவங்களுக்காக தற்போது நாங்கள் பட்டலைகிறோம். இருப்பினும் கறுப்பு ஜூலை தவறானது எனக் கூறினும் அதற்குப் பொறுப்பானவர்கள் யார்? இராணுவத்தினர் சிந்திய இரத்தத்திற்குப் பழிவாங்கப்படும் வரை மக்கள் கதவுகளைப் பூட்டி வீடுகளுக்குள் அமைதியாக இருந்தனர். அன்று நாட்டில் உருவாகியிருந்த இனவாத அலைகளை எதிர்த்து நீச்சலடிக்க விரும்பாத அப்போதைய எதிர்க்கட்சி கூட கறுப்பு ஜூலைச் சம்பவங்களைக் கண்டிக்கவில்லை. இருப்பினும் வன்முறைகளுக்கு இடமளிப்பின், அழிவுகளுக்கு இடமளிப்பின், மனித நேயத்திற்கு இடமில்லாமல் போய் விடும் என்பதை சிங்களவர்களுக்கு நினைவூட்டியவர் குட்டிமணி ஆவார்.

### வரலாறை களங்கப்படுத்த தயாரா?

அவர் தீவிரவாதி என்பது உண்மையே. இருப்பினும் சிங்கள மக்களுக்கு எதிராக சிங்களமக்களின்வன்முறைகளை சிங்கள மக்கள் காண்பதற்கு தனது இரு கண்களையும் தானம் வழங்கத் தயாராய் இருந்தார். 1983 ஜூலையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் அவரது இரு கண்களையும் சிங்களவர்களே தோண்டி வீசினர். ஆனால் 1988 இல் சிங்களவர்களின் கண்கள் திறந்தன. இருப்பினும் சூரிய கந்தவில் திறந்த கண்களை செம்மணியில் மூடுவதற்கு இடமளித்து மீண்டும் வரலாற்றைக் களங்கப்படுத்த நாம் தயாரா?

# சிவசேனையே பொறுப்பு!

மும்பாய், ஒக. 9

1992, 93 ஆம் ஆண்டில் மும்பாயில் நடைபெற்ற கலவரங்களுக்கு சிவசேனையும் அதன் தலைவர் பால் தக்கரேயும் தான் பொறுப்பு என ஸ்ரீகிருஷ்ணா ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

இக் கலவரங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

கலவரங்கள் ஆரம்பித்த போது நிலைமை மேலும் மோசமடையும் வகையில் நடவடிக்கை எதனையும் எடுக்காதிருந்ததாக பொலீஸார் மீதும் அந்த அறிக்கை குற்றஞ் சுமத்தி உள்ளது.

மும்பாயில் நடந்த இந்து, முஸ்லீம் கலவரங்களில் பலர் உயிரிழந்ததும் உடைமைகள் நாசமாக்கப்பட்டதும் தெரிந்ததே.

ஸ்ரீ கிருஷ்ணா ஆணைக்குழுவின் அறிக்கை பாரபட்சமானது; இந்துக்களுக்கு எதிரானது; முஸ்லீம்களுக்கு சாதகமானது என்று தெரிவித்து மஹாராஷ்டிரா அரசு அதை நிராகரித்துள்ளது.

இந்த அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து மனோகர் ஜோஸி அரசு பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது.

கலவரங்களுக்குப் பொறுப்பான சிவசேனை கட்சிக்கு தொடர்ந்து ஆட்சி நடத்த உரிமை இல்லை என்று இந்தியக் மார்க்ஸிக கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீ கிருஷ்ணா ஆணைக்குழு அறிக்கை வெளியான பிறகும் சிவசேனை கட்சி ஆட்சியில் நீடிப்பதை காங்கிரஸ் கட்சியும் கண்டித்துள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் மாநில அரசு அதனை நிராகரிப்பது வெட்கக்கேடானது என காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(ஐ)

## அதிரடி அரங்கு

யாழ். குடாநாட்டில் மனிதர் மற்றும் விலங்குகள், மிதிவெடிகளில் சிக்குவதால் கால் மற்றும் அவயவங்களை— சில சமயங்களில் உயிரைக்கூட— இழப்பது எமக்குத்தெரிந்ததுதான். ஆனால் மிதிவெடியில் சிக்கியதற்காக மிதிவெடியின் பெறுமதிக்கு நஷ்டஈடுசெலுத்த வேண்டி ஏற்பட்டிருப்பது குறித்துக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா?

நாவற்குழி கோயிலாக்கண்டி முகாம் பாதுகாப்பு எல்லைப் பகுதிக்குள் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளில் கட்டாக்காலி கால்நடைகள் சிக்கும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

இதனால் கட்டாக்காலிகளைக் கட்டி வளர்க்குமாறும்—

இனிமேல் மிதிவெடிகளில் கால்நடைகள் அகப்பட்டால், சம்பந்தப்பட்ட கால்நடையின் உரிமையாளர், மிதிவெடியின் பெறுமானத்துக்குரிய கட்டணத்தைச் செலுத்திய பின்னரே காயமடைந்தகால்நடையை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்த அனுமதிக்கப்படுவார் எனவும்—

அப்பகுதி மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

★ ★ ★ ★ ★

''கண்டிக்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்'' — என்று கூறுவதை ஊர்ஜிதப்படுத்த வேண்டுமானால் ஒரு தடவை மாலை வேளையில் நல்லூருக்குப் போய்ப் பாருங்கள். அங்கு தம்பிமார் செய்யிற சண்டித்தனங்கள்! அப்பப்பா...!

அவர்களின் கேலியும், கிண்டலும், சேஷ்டைகளும், சண்டித்தனங்களும், கோஷ்டி மோதல்களும், அட்டகாசங்களும் தமிழர் பண்பாடு, கலாசாரம், நாகரிகம் போன்றவற்றுக்கு சிறிதும் உகந்தவையல்ல; ஏற்றுக்கொள்ளத் தக்கவையல்ல.

மஞ்சத் திருவிழாவன்று — மக்கள் கூட்டத்துக்கு மத்தியில் பருத்தித்துறை வீதி முருகன் தண்ணீர்ப் பந்தலுக்கு அருகில் — இரு இளைஞர் குழுக்களின் கோஷ்டி மோதல். நல்லை ஆதீன மூலையில் 'பொடிசுகள்' சில கூட்டம் சேர்ந்து அடிபிடி; இழுபறி. கோயிலைச் சுற்றியிருக்கும் வீதிகளில் ரோமியோக்கள் வீசும் கணைகளோ சொல்லில் வடிக்க முடியாதவை.

''அட! எங்கடை காலத்தில் இப்படி அட்டகாசம் செய்யவிடாமல் பொடியள் பண்ணிப்போட்டாங்களே!'' என்று ஏக்கப் பெருமூச்சு விட்டபடி 'டீன் ஏஜ்' வேலைகளை இப்போது செய்ய முற்படும் சில முப்பதுகளும்...ஒருபுறம்.

தெய்வத்தின் பேரால் நடக்கும் திருவிழாவை அளவுக்கு மீறி அசிங்கப்படுத்த முயலும் இந்தப் 'பக்தகேடி'களின் கொட்டத்தை அடக்குவதற்கு பழைய நிலைமைதான் திரும்ப வரவேண்டும் போலை...!

★ ★ ★ ★ ★

செம்மணிப்புதைகுழி விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் ஒய்ந்து போயிருப்பதை வேதனையுடன் சுட்டிக்காட்டி வாசகர் ஒருவர் வரைந்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ள ஒரு விடயம் தமிழ்க் கட்சிகளின் கவனத்துக்கு முன்வைக்கப்படுகின்றது!—

''நமக்கு ஏன் பொல்லாப்பு என்று கருதி வெறும் அறிக்கைகளுடன் தமிழ்க் கட்சிகள் ஒய்ந்து விட்டன. ஆனால் வடக்கில் திடீர் தேர்தல் ஒன்றை அரசு அறிவித்துப் பார்க்கட்டும். ஒய்ந்து கிடக்கும் தமிழ்க் கட்சிகள் கொடுக்கைச் செருகிக்கொண்டு— மண்வெட்டி, அலவாங்குகளைத் தோளில் தூக்கிவைத்துக்கொண்டு— தாங்களே செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டப் போகும் வீரர்கள் என்று காட்டிக் கொண்டு— செம்மணிக்கு எழுச்சிப் பேரணி ஆரம்பித்து விடுவார்கள்''— என்று அந்த வாசகர் கூறுகின்றார்.

''தெற்கைப் போல இங்கும் அரசியல் கட்சிகளுக்கு தேர்தலில் வாக்குத்திரட்ட உதவும் விவகாரமே மனித புதைகுழிகள். அதற்கு மேல் அவர்கள் அதிகம் அலட்டமாட்டார்கள்.''— என்றும் அவர் கூறுகின்றார். மற்றொரு வாசகர் அனுப்பிய கவிதையின் சில அடிகள் இவை;—

கிருசாந்தி வழக்கு முடிவு— தமிழருக்கு
மனசாந்தி வழங்கும் என
அம்மணி எண்ணியபோது
செம்மணி எழுந்து நின்றது.

''சூரியக் கதிரால்'' உருவான இன்னொரு
சூரிய கந்த'' அதுதான் செம்மணி—இப்போது
செல்லரித்துப் போன சிறிமா மகளின்
வல்லரசைத் துளை போடுது.

—மின்னல்

# மெய்வல்லுனர் போட்டி

கைதடி, ஒக. 8

கைதடி குமரநகர் அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு க. சிவபாதம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேசச் செயலர் பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-ரீ-8)

# பட்டதாரிகள் கூட்டம்

வலி. தென்மேற்கு ஒக. 8

யாழ்மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான விசேட பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் உள்ள நியூட்டன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் (1997 உட்பட) அனைவரையும் முற்பகல் 10 மணிக்கு அங்கு சமுகமளிக்குமாறு தலைவர் ந. விஜயசுந்தரம் கேட்டுள்ளார்.

(ஐ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் சேமிப்புத் திட்டம்

வடமராட்சி, ஒக. 8

பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500 மாணவர்கள் மக்கள் வங்கியால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள மாணவர் மலர்ச்சித்திட்டம் (சிசுதான) என்ற சேமிப்புத்திட்டத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.

இத் திட்டத்தில் இணைந்து ஆயிரம் ரூபாவைச் சேமித்த மாணவர்களுக்கு 30 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் —

5 ஆயிரம் ரூபா சேமித்த மாணவர்களுக்கு 150 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் —

10 ஆயிரம் ரூபாவைச் சேமித்த மாணவர்களுக்கு 300 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையினால் வழங்கப்பட்டு வருகின்றன. (ஐ-173-118)

## பரிசாரகர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக. 8

பரிசாரகர் பதவிக்கான எழுத்து மூலப் பரீட்சை நாளைய தினமும், செய்முறைப்பரீட்சை எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளிலும் யாழ். போதனா வைத்திய சாலையில் நடத்தப்படவுள்ளன.

இப்பரீட்சைக்கு 27 பேர் தோற்றவுள்ளனர். (உ-5)

## மேலும் 22 பேருக்கு நேர்முகப் பரீட்சை

நவாலி, ஒக. 8

அரச திணைக்களங்களிலுள்ள எழுதுவினைஞர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 95 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் மேலும் 22 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பு பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான கடிதங்கள் அவர்களின் சொந்த முகவரிக்கு யாழ். செயலகத்தினால் நேற்று அனுப்பி வைக்கப்பட்டன. (இ-100)

### அண்மையில் லண்டனுக்கு

# ஜனாதிபதி சென்ற விமானத்தின் ஓட்டிக்கு 'லைசென்ஸ்' இல்லை!

கொழும்பு, ஒகஸ்ட் 8

ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் இங்கிலாந்துக்குச் சென்றபோது அவரைஏற்றிச் சென்ற — ''எயர் லங்கா'' நிறுவனத்திற்குச் சொந்தமான- விமானத்தின் விமான ஓட்டிக்கு அதற்கான 'லைசென்ஸ்' இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தை ஓட்டிச் சென்ற கப்டன் மிவிந்த ரத்னாயக்காவிடம் உரிய லைசென்ஸ் இல்லாதது 'எயர்லங்கா' நிறுவனத்துக்கும்சர்வதேசவிமானசேவைக்கும் பிரச்சினையைத்தோற்றுவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

1996 பெப்ரவரி 6ஆம்திகதி மிவிந்த ரத்னாயக்காவிமான ஓட்டி லைசென்ஸுக்கான பரீட்சைக்குத் தோற்றினார் எனவும் — ஆனால் மிகக் குறைந்த திறமைகளைக் காட்டியதை அடுத்து அப் பரீட்சையில் சித்தியடையாமல் போனார் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

'எயர்லங்கா' நிறுவனம், எமிரேட்ஸ் விமான நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் வந்த பின்னர் இந்த விமான ஓட்டிகளின் பிரிவில் நிறைவேற்று அதிகாரங்களும்வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## சங்கானையில் நாளை மருத்துவ சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஒக. 8

513 ஆவது இராணுவப் படையணியின் ஏற்பாட்டில் நாளை காலை 8 மணி முதல் சங்கானை ஆஸ்பத்திரியில் மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்று நடைபெற இருப்பதாக அந்தப் படையணி விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்கு கஷ்டப்படும் நோயாளர்களுக்கு யாழ். போதனா ஆஸ்பத்திரியின் கண்ணோயியல், குழந்தை நோயியல் மருத்துவர்கள் உட்பட பல சிரேஷ்ட டாக்டர்கள் இந்த முகாமில் வைத்து சிகிச்சையளிப்பார்கள்.

பின்தங்கிய பகுதிகளில் உள்ள வறிய மக்களுக்கு உதவுவதற்காகவே இந்தச் சிகிச்சை முகாம் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்ப[illegible]மட்டுமல்லாமல் சுகாதார சம்பந்தமான விடயங்களில் பொது மக்களுக்கு உரிய போதனைகளும் வழங்கப்படும்.

வறிய— சிகிச்சை தேவைப்படுகின்ற — மக்களுக்கும் ஏனையோர் போன்று மருத்துவ வசதி கிடைக்கவேண்டும் என்ற நோக்கில், 513 ஆவது படையணியால் யாழ். போதனா ஆஸ்பத்திரிப் பணிப்பாளருக்கு விடுக்கப்பட்டகோரிக்கையை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் செயற்பட நிபுணர்கள் முன்வந்திருப்பதை இந்நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது:

— இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது. (உ)

## சமஸ்கிருத நூல் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக. 8

நல்லூர்க் கந்தனின் உற்சவ காலத்தில் ''நியத்தரீ'' நடத்தும் சமஸ்கிருத நூல்களின் கண்காட்சி எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை நல்லூர் சிவன் கோயிலுக்கு முன்பாக உள்ள மண்டபத்தில் நடைபெறும்.

கண்காட்சியின் ஆரம்ப விழா 12 திகதி காலை 9-00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-3)

## சிறுவன் காயம்

தற்செயலாக அறுந்து விழுந்த சாரமரத்தினுள் அகப்பட்டு எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் தலையில் படுகாயமடைந்தான். புத்தூரில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் சந்திரசேகரம் ரஜீவன் (வயது 8) என்ற சிறுவனே படுகாயமடைந்தான். சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (உ-15)

## வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக. 8

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினர் ராஜா கிறீம் ஹவுஸ் நிறுவன அனுசரணையுடன் நடத்தி வந்த வலைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியில் 3 ஆம் இடத்துக்கான ஆட்டம் இன்று பிற்பகல் 4-30 மணியளவில்பல்கலைக்கழக வலைப் பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து ம. வி. அணியும், கனகரட்ணம் ம. ம. வி. அணியும் மோதுகின்றன. (உ-3)

## கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 8

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 'டொனால்ட் கணேசகுமார், வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதலாவது சுற்றில் எட்டாவது ஆட்டம் இன்று காலை 9-30 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்நடைபெறும்.

எஸ். வி. முருகேசு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இன்றைய ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும், ஜொலிஸ்ரார் வி. க. அணியும் மோதுகின்றன. (உ-3)

## ராஜகுரு ஓய்வின் பின்

# பதில் பொலீஸ் மா அதிபர் பதவிக்கு கிங்ஸ்லி?

கொழும்பு, ஒக. 8

பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுருவின் சேவைக்காலம் இம்மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைய உள்ளதால், தற்போது பிரதிப் பொலீஸ் மா அதிபராகப் பணியாற்றும் கிங்ஸ்லி விக்கிரமசூரியா பதில் பொலீஸ் மா அதிபராக நியமிக்கப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன எனப் பொலீஸ் தலைமைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலீஸ் மா அதிபராக நியமிக்கப்படத் தகைமைகள் உள்ள பிரதிப் பொலீஸ் மா அதிபர் கலாநிதி தர்மதாச சில்வா பொலீஸ் சேவையை புனரமைப்புச் செய்வது தொடர்பாகப் பல்வேறு நாடுகளின் பொலீஸ் மா அதிபர்களைச் சந்திக்கவும் மாநாடுகளில் கலந்துகொள்ளவும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பும் வரை கிங்ஸ்லி விக்கிரமசூரியா பதில் பொலீஸ் மா அதிபராக நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)



அரியாலை ஒக. 8

நாவாந்துறை பரலோக மாதா ஆலயத்தின் வருடாந்த நவநாள் ஆராதனைகள் கடந்த வியாழக்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 15ஆம் திகதி காலை திருப்பலிப் பூசையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ஐ-17)

★ ★ ★

வண்ணை நீராவியடி கடையிற்சுவாமிகள் தேவஸ்தான ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தியநாதன் கோயில் அலங்கார உற்சவம் எதிர் வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

உற்சவகாலத்தில் தினமும் மாலை 6. 15 மணிக்கு பெரிய புராணச் சொற்பொழிவை ''சிவஞானதுரந்தரர்'' சி. ஸ்ரீதயாளன் நிகழ்த்துவார். (உ-3)

★ ★ ★

ஆவரங்கால் அருள்மிகு ஸ்ரீ நடராஜராமலிங்க சிவன் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்திவிழாசங்காபிஷேகமும் விசேட பூசையும் நாளை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

நண்பல் 12. 00 மணிக்கு அன்னதானம் இடம்பெறும்.

மாலை 5. 00 மணிக்குத் திருவூஞ்சலும், பின்சுவாமி பூந்தண்டிகையில் வீதி உலா வருதலும் நடைபெறும். (30)

★ ★ ★

வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவ நிறைவாக பூங்காவனத் திருவிழா இன்று மாலை நடை[illegible] பூந்தண்டிகையில் சுவாமிவீதி உலா வருவார். (உ-139)

## கல்வியியற் கல்லூரியில்

# பயிற்சி பெற்ற 80 பேர் ஆசிரியர்களாக நியமனம்

கொழும்பு, ஒக. 8

வவுனியா கல்வியியற் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறிய 80 பேருக்கு உடன் நியமனம் வழங்கப்படும் என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். செல்வராசா கல்விச் சேவைகள் ஆணைக்குழு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து இந்த நியமனம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா கல்வியியல் கல்லூரியில் சிறப்புச்சித்திபெற்றவர்கள் தேசிய பாடசாலைகளுக்கும்—

ஏனையோர் மற்றைய பாடசாலைகளுக்கும்— நியமிக்கப்படவிருக்கிறார்கள். (உ-3)

# உயிராபத்துக்கு மத்தியில் மக்கள் பணி செய்தவர்

## சண்முகநாதனுக்கு அஞ்சலி

வவுனியா, ஒக. 8

தனது ஆளுமைமிக்க செயற்பாடுகளினால் வன்னிப் பகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகளான உணவு, மருந்து மற்றும் பாதுகாப்பு ஆகிய சேவைகளை உயிராபத்துக்கு மத்தியிலும் வழங்கி மக்கள் மத்தியில் இடம் பிடித்த உன்னத தலைவர் அமரர் சண்முகநாதன்.

வவுனியா நகரசபை முன்னாள் உறுப்பினரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் சண்முகநாதனுக்கு வவுனியா நகரசபையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் அனுதாபப் பிரேரணையை முன்மொழிந்து பேசிய சபையின் உப தலைவர் க. சத்திரகுலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் குறிப்பிட்டதாவது —

அமரர் எமது சபையிலே குறுகிய காலம் சேவையாற்றி பின்னர் வன்னி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். எனினும் நகரசபையின் வளர்ச்சிக்கும், நகரசபையால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் மிக உறுதுணையாக செயற்பட்டு வந்தார்.

வவுனியா நகரை வழமை நிலைக்குக் கொண்டு வர முக்கிய பங்கு வகித்ததுடன் வவுனியா மக்களால் மிகவும் நேசிக்கப்பட்டவர். வவுனியா மாவட்டத்தினை இலங்கையின் முன்னணி மாவட்டங்களில் ஒன்றாக முன்னேற்றுவதற்காக தனது இறுதி மூச்சுள்ள வரை உறுதியாக செயற்பட்ட தலைவர்.

வவுனியா நகருக்கு அகதிகளாக வந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், அவர்களது அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் முன்னின்று செயற்பட்டவர் — என்றார்.

இந்தப் பிரேரணையை சபையின் உறுப்பினர் கோ. நடேசபிள்ளை வழிமொழிந்து பேசினார். வவுனியா நகரசபை உறுப்பினர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்தப் பிரேரணை சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (ஐ-8-164)

## கொழும்பு துறைமுகத்தில்

# 'டோறா' எரிந்ததை குறித்து விசாரணை

கொழும்பு, ஒக. 8

'கொழும்பு டொக்யாட்' நிறுவனத்தில் திருத்த வேலைக்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்த ''டோறா'' படகு ஒன்று சமீபத்தில்தீயில் எரிந்து நாசமான சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட டோறா படகு ஒன்று, கொள்வனவு செய்த காலத்தில் இருந்தே பாவிக்க முடியாத நிலையில் திருத்த வேலைக்காகக் கொழும்பு டொக்யாட் நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அந்தப் படகு சமீபத்தில் தீயினால் நாசமாகிவிட்டது.

இந்தப் படகு திருத்தப்படும்போது ஏற்பட்ட விபத்தால் அழிந்ததா? அல்லது ஏதாவது சதிச்செயல் காரணமாக அழிந்ததா? என்பது குறித்துக் கண்டறிய விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## இரு விரல்கள் துண்டாகின

யாழ்ப்பாணம், ஒக. 8

கட்டப்பட்டுக் கொண்டிருந்தஉயரமான தேர்முட்டிக்குத் தேவையான பாரமான தூண்களை கப்பியில் இழுத்த சமயம் கப்பியைப் பிடித்துக் கொண்டிருந்தவரின் கை கப்பிக்குள் சிக்குண்டு வலதுகையின் இரு நடு விரல்கள் துண்டாடப்பட்டன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை தேர்தல்களை தவிர்த்து

# ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியாது

## சட்டச் சிக்கல்கள் குறுக்கிடும் எனதகவல்

கொழும்பு, ஓக. 8

ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்குப் பதிலாக இவ்வாண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது குறித்து அரசாங்கத்திலுள்ள முக்கியஸ்தர்கள் கவனம் செலுத்தி தமது சுரப்பு வேட்பாளராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு முக்கியத்துவம் அளித்துவரும் வேளையில்—

எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சியும் தமது வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்காவுக்கு முக்கியத்துவம் அளிக்க ஆரம்பித்துள்ளபோதிலும் —

ஜனாதிபதித் தேர்தலை நடத்த சட்டப் பிரச்சினை குறுக்கிடுகிறது என சட்டத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தப்பாது காப்பை வழங்க முடியாது எனத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்து மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைத்துள்ள இவ்வேளையில் அத் தேர்தல்களுக்குப் பதிலாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த முற்பட்டால் அரசு புதிய ஒரு பிரச்சினையை எதிர்நோக்கும் என சட்டத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

அதாவது நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியுமாயின் 5 மாகாண சபைகளுக்கும் மட்டுமான தேர்தல்களை ஏன் நடத்த முடியாது என்பதே வாதமாகும்.

தற்போதைய நிலையில் மாகாண சபைத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்துள்ள வேட்பாளர் ஒருவர் நீதிமன்றம் சென்றால் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியுமாயின் மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் நடத்த முடியும் என தீர்ப்பளிக்கப்படலாம் என சட்டத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக அவசரகாலச் சட்டத்தை விலக்கிக்கொண்டாலும் உடனடியாக மாகாணசபைத் தேர்தல்களையும் நடத்த வேண்டிய சட்ட ரீதியான கடப்பாடு அரசுக்கு ஏற்பட்டு விடும்.

எனவே மாகாண சபைகளுக்கான தேர்தல்களைத் தவிர்த்து ஜனாதிபதித்தேர்தலை அரசாங்கத்தால் நடத்த முடியாது என்பதே சட்டத்துறையினரின் வலுவான நம்பிக்கையாகும்.

இருப்பினும் ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தயாராகும்படி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் தேர்தல் தொகுதி அமைப்பாளர்களிடமும் அண்மையில் தெரிவித்துள்ளார்.

---

### இலங்கைப்...

(முதலாம் பக்கத் தொடர்)

செயலிழப்பு தொடர்பான இப்பயிற்சியில் குறிப்பாக விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்படும் குண்டுகள் தொடர்பாகவே கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதே நேரம் மேற்படி பயிற்சி திட்டத்தின் கீழ் மேலும் 24 பொலீஸாருக்கு ஜோர்ஜியா மாநிலத்தின் சட்ட அமுலாக்கல் பயிற்சி நிலையத்தில் 3 வார கால பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

கேந்திர பிரதேசங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் பேணுவது தொடர்பான பயிற்சியும் இவர்களுக்கு வழங்கப்படும்.

இப்பயிற்சித் திட்டங்களில் விசேட அதிரடிப்படை மற்றும் யுத்தமுனைச் சேவையில் உள்ளவர்கள் உட்படப் பல்வேறு தர பொலீஸாரும் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-21)

### இரு விரல்...

(ஏழாம் பக்கத் தொடர்)

வடமராட்சி, வல்லிபுரஆழ்வார் கோயிலில் இச் சம்பவம் இடம்பெற்றது.

பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த பெரியதம்பி இராசேந்திரம் (வயது 45) என்பவரே காயமடைந்தவராவார் இவர் மந்திகைஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக, யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (உ-139-15)

### கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வெட்டித்துறையிலிருந்து ஆறு படகுகளில் படையினர் புறப்பட்டுச் சென்று தேடுதல் நடத்தினர்.

சுமார் ஆறு கடல் மைல் தொலைவில் திசைதெரியாது — கடல் நீரோட்டத்தில் இழுபட்டுச் சென்ற நிலையில் — மீனவர்கள் மூவரும் வள்ளத்துடன் கண்டுபிடிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை படைமுகாமுக்கு பத்திரமாக அழைத்து வரப்பட்ட மூவரும் அங்கு வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அல்பிரட் உதயகுமார், அல்பிரட் வில்சன், இந்திரதாஸ் குகேந்திரராஜா ஆகிய மூன்று மீனவ இளைஞர்களுமே மீட்கப்பட்டனர்— என்று கேணல் சனத் கருணாரட்ண 'சஞ்சீவி'க்குத் தெரிவித்தார். (உ)

### கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்)

இல்லை எனவும் மேற்படி அமைப்பு அரசிடம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கண்ணிவெடிகள் அகற்றுவது தொடர்பான ஐ. நா. அபிவிருத்தித் திட்ட இணைப்பு அதிகாரி டேவிட்ரெய்லர் நிலக்கண்ணி அகழ்வுத் திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமெனவும்—

இல்லையேல் யாழ். குடாவில் மீனக் குடியமரும் மக்களில் கணிசமானோர் காயம்பட்டுப் பாதிக்கப்படவேண்டியநிலையேற்படும் எனவும்—

அரசிடம் தெரிவித்துள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

### குடும்பப்...

(முதலாம் பக்கத் தொடர்)

வெடியில் சிக்கியதாகத்தெரிவிக்கப்பட்டது.

இந்த வீடு சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவ முகாமாகப் பயன்படுத்தப்பட்ட பின்னர் கைவிடப்பட்டிருந்தது என்றும் —

இரண்டு மாதங்களுக்கு முன்னரே மேற்படி பெண் தனது பிள்ளைகளுடன் வந்து குடியேறியதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-ரி-5-139-15)

### செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்)

(ஜே.எம்.ஓ), மருத்துவ அதிகாரிகள் குழுவினர், அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் மற்றும் கிருஷாந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட ஐந்து எதிரிகள் ஆகியோரைச் சம்பந்தப்பட்ட செம்மணிப் பகுதிக்கு கூட்டிச் செல்ல வேண்டும் என்று சட்டமா அதிபர் கருதுகின்றார்.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலும் —

உரிய பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதிலும் —

சட்டமா அதிபர் திணைக்களம் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

உள்ளதாகக் கருதப்படும் மனித புதைகுழியைத் தோண்டுவதற்கு முன்னர், அப்பிரதேசத்தின் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் ஒரு நீதிமன்றத்தின் அனுமதி உத்தரவைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

இந்த வகையில் —

செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு யாழ். நீதிமன்றத்தின் அனுமதி உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

யாழ்ப்பாண நீதிமன்றங்களின் செயற்பாடு பாதிக்கப்பட்டுள்ளதால் இத்தகைய உத்தரவைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படலாம் என்றும் —

அது புதைகுழி தோண்டப்படுவதை காலதாமதப் படுத்தலாம் என்றும்—

சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

### உடலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

காக மாதாந்தம் ஆயிரந்து ஐந்நூறு ரூபா வேதனத்தையும் அம்மாணவனுக்குக் கொடுத்து வந்தது.

சம்பவதினம் சகமாணவர்களுடன் நள்ளிரவு வரை படித்து விட்டு கீழ்மாடியில் காவலுக்காக இம்மாணவன் படுத்திருந்தான் என்றும் —

ஏனைய மாணவர்கள் மேல் மாடிக்குச் சென்று படுத்து விட்டனர் என்றும்-கூறப்படுகின்றது.

திடீரென இரவு 3 மணியளவில் அவனது உடம்பில் பெற்றோல் ஊற்றப்பட்டு, தீவைக்கப்பட்டது.

உடன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அந்த மாணவன் நேற்று அங்குமரணமானான்.

### குற்றவாளிகளைச்...

(முதலாம் பக்கத் தொடர்)

களை ஏற்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது.

கிருஷாந்தி கொலை வழக்கின் நடுவில் ஒரு தடவை தப்பிச்சென்று மீண்டும் கைது செய்யப்பட்டவர் அவர்.

தாம் தப்புவதற்கு ஒரு வாய்ப்பைப் பெறுவதற்காகவே செம்மணிக்குத் தம்மைக் கூட்டிச்செல்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் வழிவகைகளை அவர் நாடுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

அத்தோடு செம்மணியில் சடலங்கள் காணப்படும் பட்சத்தில் அதற்குப் பொறுப்பானவர்களினால் அவருக்கு உயிராபத்து ஏற்படும் நிலை உண்டு எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தக் காரணங்களினால் இவரை வடக்கே அழைத்துச் செல்லும் விடயம் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளில் அதிகாரிகள் அதிக சிரத்தை காட்டுவதாகக் கூறப்படுகிறது. (உ-3)


## விற்பனைக்கு

எமது ஸ்தாபனத்தில் கீழ்க்காணும் மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு.

1. கொண்டா லான்சர் கஸ்ரம் மொடல் 50/90
2. கொண்டா—C 50
3. ஜமஹா—50

விசேட கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீ முத்துமாரி அம்மன் றேடர்ஸ்,
இல: 171, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(58209)



## பன்ரீன் ஷம்பூ PANTENE PRO - V

பன்ரீன் ஷம்பூவில் அடங்கிய புறோ விட்டமின் B5 உங்கள் கேசத்தின் அடிவரை ஆழமாக ஊடுருவுவதால் கேசத்திற்கு உறுதியையும், செழுமையையும் அளிப்பதுடன் ஈரப்பதனைப் பேணி கேசம் சேதம் அடையாது பாதுகாக்கின்றது.

சுவிஸ் விற்றமின் நிறுவனத்தின் சான்றிதழைப் பெற்ற பன்ரீன் ஷம்போவானது எல்லா வகையான கேசத்திற்கும் ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது பக்கெட்டுகளிலும், போத்தல்களிலும் குடாநாடு பூராவும் கிடைக்கும்.

பக்கெட்டின் சில்லறை விலை ரூபா 3.50

இது P & G [தாய்லாந்து] நிறுவனத்தின் தயாரிப்பாகும்.

விநியோகஸ்தர்:

ரூபா பன்முக வர்த்தகம்
104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(58200)



## DCS, COLLEGE OF COMPUTER TECHNOLOGY

MICROSOFT APPLICATIONS

New courses commence on 22nd August 1998

Diploma in Office 97 Applications

Duration: Six Months

Course Contents

Windows' 98
Word 97
Access 97
Excel 97
Power Point 97

Certificate Course

Duration: Two Months

MS Windows' 98
MS Power Point
MS Word 97
MS Excel 97
MS Access 97
MS DOS
Lotus
dBase III+
Pascal
Page maker

For further details contact undersigned

- DIRECTOR (Ad.)

DCS, College of Computer Technology,
124/2 Palaly Road,
Thirunelvely,
P. O. Box 144,
Jaffna,

(58161)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகை

08 — 08 — 1998 சஞ்சீவி

சாரங்கா நகை மாடம்

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் அசல் 22 கரட் தங்க நகைகளை வாங்க யாழ். நகரில் பெயர் பெற்றவர்கள்.

177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4479)

கருத்துக் கலசம்

## மரத்தைத் தறிக்காதீர்!

தறிக்கப்பட்ட பச்சை மரங்கள் குடாநாட்டில் ஆங்காங்கே உள்ள விறகு காலைகளில் குவிக்கப்பட்டிருக்கின்றன. நிச்சயமாக அவை விறகுக்கு உகந்த பருவத்தை அடைந்த முதிர்ந்த மரங்கள் அல்ல. இன்னும் பல வருடங்களுக்கு உயிரோடு உயர்ந்து நின்று உயர்ந்த பலன்களைத் தரக்கூடியவை.

இன்றைய சூழ்நிலையில் விறகை முழுக்க முழுக்க குடாநாட்டுக்குள்ளேயே பெற வேண்டியுள்ளது என்பது உண்மையே.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையின் போது தென்னை, பனை மரங்களும் ஏனைய பெருவிருட்சங்களும் அழிக்கப்பட்டு விட்டதால் குடாநாட்டின் மரவளம் மிகப் பெரிய அளவில் நலிந்து போயுள்ளது.

அது போதாதெமக்கு பாதுகாப்புக் காரணம் என்ற முத்திரையுடன் வீதியோரங்களில், ஒழுங்கை ஓரங்களில் நிழல் தரும் மரங்கள் தொடர்ந்தும் வெட்டப்படுகின்றன; தறிக்கப்படுகின்றன — அவ்வாறு செய்யுமாறு மக்கள் பணிக்கப்படுகின்றார்கள். இந்த வகையில் கடந்த வாரம் பண்டத்தரிப்பு, மாதகல் பகுதிகளில் ஏராளமான மரங்கள் வெட்டப்பட்டன; தறிக்கப்பட்டன.

இந்த வரண்ட பூமியில் ஏற்கனவே வருடத்தில் முந்நூறு நாள்களுக்கு மேல் வெப்பம் வாட்டுகிறது. அவ்வாறிருந்தும் மரங்களை முன் பின் யோசனை இன்றி வெட்டி விறகாக்குகிறோம் என்றால், நாங்களும் தற்கொலை செய்து எமது எதிர்காலச் சந்ததியினரைக் கொலை செய்யவும் ஆயத்துமாகிறோம் என்பதே ஆகும்!

நாம் வாழும் சூழல் பாதிக்கப்படும்போது எங்கள் வாழ்க்கையும் சேர்ந்து பாதிக்கப்படுகிறது என்பதனை மறந்து விடக்கூடாது. ஒரு மரத்தை வளர்த்தெடுப்பது எவ்வளவு கஷ்டமானது என்பது எங்களில் ஒவ்வொருவருக்கும் தெரியும். அப்படியிருக்க நாம் அந்த மரங்களை வெட்டிக் கொலை செய்யலாமா?

விறகிற்குப் பதிலாக உயிர்வாயு போன்ற மாற்று எரிபொருள்களை உற்பத்தி செய்யவும் பாவனைக்குக் கொண்டு வரவும் உடன் நடவடிக்கை அவசியம்.

அழிந்துள்ள மரவளத்தை மீள்விக்க மக்கள் அமைப்புகளும் தொண்டர் நிறுவனங்களும் அவசரத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டும். மரவளத்தைப் பெருக்கி வாழ்க்கைச் சூழலைப் பாதுகாப்பதில் தனிமனிதன் ஒவ்வொருவருக்கும் மறுக்க முடியாத பங்குண்டு; கடமையுண்டு. பசுமை வேந்தன் கனகராசாக்கள் பலர் உருவாகுவது இன்றைய அவசர, அவசியத் தேவை. வீட்டில், வெளியில் நடக்கும் நிகழ்வுகள், விழாக்களைத் தொடங்குமுன்னர் ஒவ்வொரு மரத்தை நட்டு ஆரம்பிக்கும் இயக்கத்தை நாமே முன்னெடுக்கலாம்.

# தாய்ப்பாலே சிறந்த 'தடுப்பூசி'!

மண்ணில் அவதரிக்கும் ஒவ்வொரு குழந்தையும் தேகாரோக்கியத்தோடு வாழ்வதற்கு இயற்கை வழங்கிய இலவச இணைப்பு தாய்ப்பால். இதனைச் சுவைத்துப் பருகி நலமடைய ஒவ்வொரு குழந்தைக்கும் உரிமை உண்டு. ஆனால் இன்று அனேக குழந்தைகள் தாய்ப்பாலின் சுவையைக் கூட அறியாமல் வாழ்ந்து வரும் அரதிர்ஷ்ட நிலையே உள்ளது.

நாகரிக வளர்ச்சியிலே ஊறிய இன்றைய தாய்மார் தமது நிலையற்ற அழகை நிலைநிறுத்தும் நினைவோடு தமது செல்வங்களுக்கு தாய்ப்பால் வழங்குவதை தவிர்த்து வருகின்றனர்.

குழந்தைகளுக்கு வேண்டிய ஔடதத்தைச் சுமக்கும் மார்புகளை கவர்ச்சியை வெளிப்படுத்தும் அவயமாகக் கருதி, பேணிப்பாதுகாப்பதற்காக குழந்தையின் அடிப்படை உரிமையை மறுக்கின்றார்கள் பல தாய்மார்கள். தாய்ப்பால் கொடுப்பதால் தமது எடுப்பான மார்பகங்கள் உருக்குலைந்து விடும் என்ற தவறான எண்ணத்தில் தமது குழந்தைகளுக்கு புட்டிப்பாலைக் கொடுத்து சீரழித்து வருகின்றார்கள் இத்தாய்மார்.



தாய்ப்பால் உண்டு தளதள என்று வளரவேண்டிய குழந்தைகள் புட்டிப்பால் பருகி நோயில் திளைக்கும் நோஞ்சான் குழந்தைகளாக மாறிவருகின்றன.

குழந்தை பிறந்த உடன் அந்தக் குழந்தைக்கு புரதம், கொழுப்பு அமிலங்கள், நோய் எதிர்ப்பு உயிர்ச்சத்துக்கள், மாச்சத்து எனப்பல சத்துகள் தேவைப்படுகின்றன. அந்தச் சத்துக்கள் அனைத்தையும் ஒன்றாக வழங்கக் கூடிய ஒரே உணவு தாய்ப்பால் மட்டுமே. அதனை விட்டு புட்டிப்பாலோ அல்லது பசுப்பாலோ இத்தனை சத்துக்களையும் ஒன்றாக குழந்தைகளுக்கு வழங்க மாட்டா. மாறாக புட்டிப்பாலை வழங்குவது அந்தக் குழந்தைகளுக்கு காதில் சீழ், சளி, நிமோனியா, நிணநீர்ப்புற்று, வயிற்றுப் போக்கு போன்ற அபாயகரமான நோய்கள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும்.

தாய்ப்பால் ஊட்டும் போது குழந்தைக்கு மட்டுமல்லாமல் தாய்க்கும் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. மார்பிலே ஏற்படக் கூடிய மார்புப் புற்றுநோய், கருப்பைப் புற்று நோய், பால் கட்டிபடல், முலைக்காம்புகள் வீங்கிப் புடைத்து சீழ் வடிதல் போன்ற அபாயகரமான நோய்கள் தாய்ப்பால் கொடுக்காத தாய்மாருக்கு ஏற்படுகின்றன.

தாய்ப்பால் வழங்குவதால் அந்தத் தாய்க்கும் சேய்க்கும் இடையிலான உறவுப்பாலம் வலுப்பெறுகின்றது. இதனால்தான் பிரசவம் முடிந்து 24 மணி நேரத்துக்கு தாயும் சேயும் ஒரே அறையில் இருக்க வேண்டும் எனவும் —

குழந்தை பிறந்த அரைமணி நேரத்துக்குள் அந்தத்தாய் தனது குழந்தைக்கு பால் கொடுக்க ஆரம்பித்து தொடர்ந்து அடிக்கடி பால் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் எனவும் —

டாக்டர்கள் அறிவுரை கூறுகின்றார்கள்.

குழந்தை பிறந்த உடன் தாயின் மார்பக சிற்றறைகளில் பால்சுரக்க ஆரம்பிக்கிறது. குழந்தை தாயின் முலைகளில் வாய் வைத்து சப்ப ஆரம்பிக்கும் போது பால் சுரக்கும் வேகமும் அதிகரிக்கிறது. இதனால் குழந்தைக்கு வேண்டிய அளவு பாலினை தாயால் வழங்க முடிகின்றது. குழந்தையும் வேண்டிய பாலை உண்டு பசியாறுகிறது.

குழந்தை பிறந்து மூன்று நாள்களுக்கு தாயின் முலைகளில் சீம்பால் சுரக்கின்றது. இந்தச் சீம்பாலில்தான் குழந்தைக்கு வேண்டிய சத்துக்கள் அதிகளவில் காணப்படுகின்றன. எனவே தாய்மார் எக்காரணத்தைக் கொண்டும் குழந்தைக்கு சீம்பால் கொடுப்பதனை தவிர்த்துவிடக் கூடாது.

சில தாய்மாருக்கு தமது குழந்தைகளுக்கு வேண்டிய பாலை வழங்க முடியாமல் இருக்கிறது. இந்நிலை தோன்றுவதற்கும் தாய்மாரே காரணம். குழந்தைக்கு தாய்ப்பாலுக்கு பதிலாக புட்டிப்பால் அல்லது சர்க்கரை நீர், தேன் போன்றவற்றை பருக்கி விடுகின்றனர். இவை எல்லாம் குழந்தையின் பசியை அடக்கி விடும். பசி அடங்கிய குழந்தை தாயின் மார்பை நாடமாட்டாது.

இந்நிலைக்கு — குழந்தை தாயின் முலைக்காம்புகளில் வாய் வைத்துச் சப்பாமல் விட்டால் — தாயின் மார்பில் பால் சுரக்கும் அளவு குறைந்து விடும்.

அத்தோடுமனத்திலே குழப்பங்களையும் கவலைகளையும், சந்தேகங்களையும் சுமக்கும் தாய்மாருக்கும்—

வேளாவேளைக்கு சத்தான உணவு உண்ணாத தாய்மாருக்கும்—

பால் சுரக்கும் வேகமும், அளவும் குறைவாகவே காணப்படும்.

எனவே தமது பிள்ளைகளுக்கு பால் கொடுக்க வேண்டும் என எண்ணுகின்ற தாய்மார் தமது முலைக்காம்புகளை அடிக்கடி குழந்தைகள் சப்புவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதே நேரம் மனப்பாரங்களை இறக்கி வைத்து விட்டு பால், பருப்பு, கீரை வகைகள், காய்கறி வகைகள் போன்ற சத்தான

- சுதா -

உணவுகளை உண்டு வருவார்களேயானால் அவர்களால் தமது பிள்ளைகளுக்கு வேண்டிய பாலை கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

அது மட்டுமன்றி பிரசவகாலத்தில் அதிகரித்த நிறை பின்னர் பால் ஊட்டுவதால் குறைவடைந்து, முன்னரைப் போல் கட்டுக்கோப்பான உடலமைப்பு வந்துவிடுகின்றது.

தாய்ப்பால் ஊட்டினால் குழந்தைகளுக்கு 'கிரைப் வோட்டர்', வசம்பு, ஜீரண மருந்து போன்றவற்றை கொடுப்பது பெரும்பாலும் தேவையற்றதாகி விடும். இவற்றில் பெரும்பாலானவற்றில் தூக்கம், மந்தநிலை போன்றவற்றை ஏற்படுத்தக் கூடிய வேதியியல் பொருள்கள் உள்ளன.

சம்மணமிட்டு கையால் தொட்டில் போல் குழந்தையின் உடலைத் தாங்கியும்—

தலை மற்றும் உடலை அரவணைத்தும் ஒருக்களித்தும், மல்லாந்து படுத்தும்—

குழந்தைக்கு பாலூட்ட வேண்டும்!

குழந்தைக்கு அதன் ஒரு வயது வரை தாய்ப்பால் கொடுத்தல் நன்று. நான்கு மாதங்களின் பின்னர் தாய்ப்பாலுடன் விரைவில் சமிபாடு அடையக் கூடிய உணவு வகைகளைச் சேர்த்துக் கொடுக்கலாம். உணவுவகைகள்கொடுக்க ஆரம்பித்தவுடன் சில தாய்மார் பால் கொடுப்பதை நிறுத்திவிடுகின்றனர். அது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. எப்படியாயினும் ஒரு வயது வரை பால் கொடுப்பதை நிறுத்தக்கூடாது.

தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார் தேநீர், மதுபானம், புகைத்தல் போன்றவற்றை விட்டுவிட வேண்டும். இவை எல்லாம் தாயோடு சேர்த்து சேயையும் பாதிக்கக் கூடியவையாகும்.

குழந்தைக்கு ஒரு நாளைக்கு எத்தனை தடவை வேண்டுமானாலும் தாய்ப்பால் கொடுக்கலாம். அதனால் எந்தப் பாதிப்பும் இல்லை. பால் குடிக்கும் அளவிற்கேற்ப சேய் மலங்கழிக்கவும் சிறுநீர் கழிக்கவும் செய்யும். எனவே மலம், சிறுநீர் கழிக்கும் தடவைகளைக் கருத்திற் கொண்டு பால் கொடுப்பதைக் குறைத்துக் கொள்ளாமல் குழந்தைக்கு வேண்டிய அளவில் பால் கொடுக்கலாம்.




கடந்த முதலாம் திகதியிலிருந்து நேற்றுவரை உலகத் தாய்ப்பால் வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

புற்றுநோய், கதிரியக்கச் சிகிச்சை போன்றவற்றை அனுபவிக்கும் தாய்மாரைத் தவிர ஏனைய எந்தநோய் உள்ளவர்களும் தயங்காமல் தமது குழந்தைகளுக்குப் பால் கொடுக்கலாம்.

எனவே குழந்தைகளின் தேவையை அறிந்து அவர்களுக்குப் பால் கொடுங்கள்.

தொழில் செய்யச் செல்லும் பெண்கள் முடியுமானால் தமது முலைகளில் இருந்து பாலை தாங்களாகவே பிழிந்து எடுத்து சுத்தமான பாத்திரம் ஒன்றில் சேமித்து வைத்துக் கொண்டு தங்கள் பிள்ளைகளைப் பார்த்து கொள்பவர்களிடம் பாலை புட்டி மூலம் கொடுக்கச் சொல்லலாம். இவ்வாறு எடுக்கப்படும் பால் அறை வெப்பத்தில் ஆறு மணிநேரமும், குளிர்சாதனப் பெட்டிகளில் 24 மணி நேரமும் கெடாமல் இருக்கும்; கொடுக்கலாம். மற்றப்படி டைபோயிட்டு, காமாலை, வயிற்றுப்போக்கு, காசநோய், தொழுநோய்—ஏன் எய்ட்ஸ் நோய்—இருந்தாலும் கூட குழந்தைக்கு பாலூட்டலாம். மாதவிலக்கின் போதும் கர்ப்பமாக இருக்கின்ற போதிலும்கூட பாலூட்டலாம். எனவே உங்கள் செல்வங்களுக்கு தாய்ப்பால் கொடுப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

மார்பகங்களின் அளவை வைத்துக் கொண்டு பால் கொடுப்பதைத் தீர்

(XI ஆம் பக்கத் தொடர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி ஆராய்வுக்கு வெளிநாட்டு நிபுணர் சேவையே ஆக்கபூர்வ பெறுபேறுகளை தரும்

## நிவாரண நிறுத்தம் மாற்றமின்றி அமுல் பாதிப்பின் வேக்காடு இனியே தெரியும்

யாழ்ப்பாண மக்களின் நாளாந்த வாழ்க்கை இப்போது அனேகமாகக் கப்பலில்தான் தங்கியுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருள்கள் முதற் கொண்டு ஏனைய பாவனைப் பொருள்கள் பலவும் கப்பலிலேயே வருகின்றன; சரக்குக் கப்பல் சேவைக்குத் தடங்கல் உண்டானால் மக்களின் வாழ்க்கையிலும் தடங்கல் வரும் என்று கூறுமளவுக்கு யாழ். மக்களின் வாழ்க்கையுடன் கப்பல் சம்பந்தப்பட்டிருக்கிறது.

இந்த வகையில் குடாநாட்டில் பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ள பாதிப்பை உண்டாக்கவுள்ள உணவு முத்திரை நிறுத்தமும் கப்பலோடு தொடர்புபட்டு விட்டது. ஆம். இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை வடக்கு மாகாண மக்களில் பலருக்கு நிறுத்தி விடுவதென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் முடிவு செய்திருந்தார் அல்லவா?

அவரின் முடிவை சிறு தவறும் இல்லாமல் அச்சொட்டாக அமுல் செய்வதற்கான நிவாரணத்திற்குரிய உணவு முத்திரைகள் யாழ்ப்பாணம் நோக்கி கப்பலில் பயணம் செய்து கொண்டிருக்கின்றன! இன்றோ நாளையோ கரை சேர்ந்து உணவு முத்திரைகள் யாழ்ப்பாணம் செயலகத்துக்கு எடுத்து வரப்பட்டு விடும்.

அத்தியாவசிய சேவைகள் நாயகத்தின் முடிவை அனுசரித்து, ஏற்கனவே அறிவித்த கணக்கின் பிரகாரம், 55, 556 குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்குரிய உணவு முத்திரைகளே யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றன! அதாவது ஏற்கனவே நிவாரணம் பெற்ற 30,649 குடும்பங்களுக்குப் புதிய முத்திரைகள் கிடைக்கமாட்டா — நிவாரண உலர் உணவு பெற அவர்கள் தகுதியற்றவர்கள் ஆக்கப்பட்டுள்ளனர்!

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த இடம்பெயர்ந்தவர்களில் கணிசமானோரின் நிவாரண உதவியை நிறுத்துவது என்ற அரசின் முடிவில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதனை சென்ற வாரம் இப்பத்தியில் தெரிவித்திருந்தோம்.

நிவாரண நிறுத்தத்தை நீக்குமாறு யாழ்ப்பாணம் மற்றும் மாவட்டங்களின் மக்கள் தெரிவித்த எதிர்ப்பும், கண்டனமும், விடுக்கப்பட்ட வேண்டுகோள்களும், உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம், ஆர்ப்பாட்டப்பேரணி போன்ற போராட்டங்களும் அரசின் மனதை நெகிழ வைக்கவில்லை.

நிவாரண நிறுத்த விவகாரம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் என்று கொழும்பு அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எச். ஒபடகே வடக்கின் ஐந்து மாவட்ட அரசாங்க அதிபர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார். இப்பகுதிகளிலுள்ள மக்களின் நிலைமை, வேலை வசதிகள் என்பன குறித்தும் வசதி குறைந்தோரின் நிலைமை குறித்தும் புள்ளி விவரங்களுடன் அக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

அதன் பின்னர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை இது விடயமாக, விசேடமாகச் சந்தித்தார். எனினும் அந்தச் சந்திப்பின் போது செய்யப்பட்ட முடிவு — பெறுபேறு என்ன என்பது குறித்து உத்தியோக பூர்வமாக எவ்வித அறிவித்தலும் விடுக்கப்படவில்லை.

மேலும் நிவாரண நிறுத்தத்தின் ''நதி மூலம்'' பாதுகாப்புப் பிரிவினர்தான் என்று நம்பிக்கையான தகவல்கள் தெரிவிக்கின்றன; அவர்களின் கண் முதலில், பிரதானமாக வன்னிப் பிரதேசத்திலேயே விழுந்ததாம். ஒப்புக்காக யாழ்ப்பாணமும் சேர்க்கப்பட்டதாக ஒரு தகவல்.

வழமை போலவே இடம் பெயர்ந்தோர் நிவாரணத்தின் பெரும்பகுதி விடுதலைப் புலிகளுக்குப் போய்ச் சேருவதாகக் கூறியே பாதுகாப்புக்காரர் நிவாரண நிறுத்தத்துக்குச் சிபார்சு செய்தனர் என்றும் அறியப்படுகிறது.

இந்த ஏற்பாடு எய்தவனிருக்க அம்பை உடைக்கும் செயலாகும்!

இதேவேளை நிவாரண நிறுத்தம் சம்பந்தமாகப் பத்திரிகைகளில் தவறான செய்திகள் பிரசுரமானதாக ஒரு மாயையை உண்டாக்கி விளக்கமளிக்கும் அறிக்கை ஒன்றை அரசாங்கம் வெளியிட்டிருந்தது. ஆனால் அதன் சாராம்சம் இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்படும் நிவாரணம் ஒரு சாராருக்கு நிறுத்தப்படுகின்றதே அன்றி வெட்டப் படவில்லை என்ற கருத்தை வெளிப்படுத்தியது. உண்மையில் பத்திரிகைகள் வெளியிட்ட செய்தியும் அதுவே.

### அரசுக்கு சிறுவிடயமே

நிவாரண நிறுத்த முடிவைப்பயன்படுத்தி விடுதலை புலிகள் அரசுக்கெதிராகப் பிரசாரம் செய்வதான ஒரு குற்றச்சாட்டையும் அந்த அறிக்கைக்குள் புகுத்தி மக்களுக்கு எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்ற அர்த்தத்தில் அது வரையப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் விவசாயத்தை மேம்படுத்த அரசாங்கம் ஏற்கனவே நிதி வசதிகள் செய்ததாகவும், மானிய உதவிகள் வழங்கப்படுவதாகவும் கூறி நிவாரண நிறுத்தத்தை நியாயப்படுத்தும் விதத்திலும் அந்த அறிக்கை அமைந்திருந்தது. அரசாங்கத்தின் குறிப்பிட்ட அறிக்கையை வரிகளுக்கிடையில் வாசித்தபோதே அது தனது முடிவை மாற்றிக்கொள்ளாது என்பது விளங்கியது.

அதுமட்டுமன்றி இத்தனை ஆயிரம் குடும்பங்களின் நிவாரணத்தை நிறுத்துவது அரசுக்கு சிறு மாற்றமாகவே தெரிகிறது; அவ்வாறே அரசு உணர்ந்திருக்கின்றது; இத்தகைய ஒரு பின்னணியில் அல்லது சூழ்நிலையில் பல்லாயிரக் கணக்கான குடும்பங்களின் இடம் பெயர்ந்தோர் நிவாரணம் நடைமுறையில் நிறுத்தப்படவுள்ளமை. மிகவும் உறுதியாகிவிட்டது; அந்த செயற்பாட்டின் முன் நடவடிக்கையாகவே யாழ்ப்பாணத்துக்கு 55 ஆயிரத்து 556 குடும்பங்களின் உணவு முத்திரைகள் மாத்திரமே கப்பலில் வந்து கொண்டிருக்கின்றன.

தலையிடியோ அல்லது காய்ச்சலோ சிறு வியாதியாக இருந்தாலும் அது அவரவருக்கு வந்த பின்னர்தான் பாதிப்பையும் வேதனையையும் உணர வைக்கும். அவ்வாறே புதிய நிவாரண முத்திரைகள்பிரதேசசெயலக ரீதியாக விநியோகிக்கப் படத் தொடங்கியதுமே உணவு முத்திரையை இழந்தவர்கள் யார் யார் என்பது தெரியவரும்; அந்தத் 'தலையிடி' ஒவ்வொருவரையும் நேரில் தாக்கத் தொடங்கியதும் அதன் உபாதையும் வேதனையும் சம்பந்தப்பட்டவரை பெரிதாக வாட்டத் தொடங்கும். தலையிடிவந்த பின்னர்தான் சம்பந்தப்பட்டவர்கள் தமது நோய்க்கு மருந்து தேட முனைவர்.

### மக்கள் கொதிப்பு

இதுவரை பொதுவாக நிவாரண நிறுத்தம் என்று பேசப்பட்ட விடயம், இத்தனை ஆயிரம் பேருக்கு உலர் உணவு கிடைக்கவில்லை என்ற கட்டத்துக்கு வந்து ஒரு போராட்டத்துக்கே வழி வகுக்கலாம்.

### உள்ளும் புறமும்

குறுமுனி

பசித்தவனுக்குத்தான் புசிக்கவேண்டியதன் தேவை அதிகமாகத் தெரியும். பசி வந்தால் பத்தும் பறந்துவிடும்; பசிவந்தவர்கள் எதனையும் செய்யத் தயங்கமாட்டார்கள். அந்தவகையில் வன்னிப் பிரதேசத்தில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் மக்கள் போராட்டங்கள் வெடிக்கும் என்று எதிர்பார்க்கலாம். இன்னும் ஒரு சில வாரங்களில் மக்களின் மனக் கொதிப்பை, வயிற்றுப்பசியை பிரதிபலிக்கும் நிகழ்வுகளைக் குடாநாட்டில் காணக்கூடியதாக இருக்கும் என்று நம்பலாம்.

நிவாரணத்தை நிறுத்துவது என்று அரசாங்கம் கொழும்பிலிருந்து முடிவு செய்தது; ஆனால் அதனை அமுல் செய்வது எப்படி என்று திண்டாடியவர்கள் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களும், பிரதேச செயலர்களும், கிராமசேவையாளர்களுமே ஆவர். உத்தரவு வந்த சில நாள்களாக தங்கள் தலைமயிரைப் பிய்த்துக் கொண்டிருந்த இவர்கள் ஏதோ ஒருமுறையில் அரசு குறிப்பிட்ட எண்ணிக்கையினரின் இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை நிறுத்தி விட்டார்கள்.

கப்பலில் வரும் உணவு முத்திரைகள் விநியோகிக்கப்பட்ட பின்னர்தான் எங்கெங்கே பாரபட்சங்கள், செல்வாக்குகள், பயன்படுத்தப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டுகள் மக்களிடமிருந்து எழும். அதிகாரிகள் நேர்மையாக நடந்து கொண்டார்களா, இல்லையா என்பது குறித்து பாதிக்கப்பட்டவர்களின் முறைப்பாடுகள் காற்றில் வந்த பின்னர்தான் தெரிய வரும். சில வேளைகளில் அரசுக்கெதிரான போராட்டங்களுடன் அதிகாரிகளுக்கெதிரான போராட்டங்களும் உருக்கொள்ளலாம். இன்னும் ... இந்த நிலை ... உண்டு. அரசாங்கம் வழங்கும் கொடுப்பனவுகள், உதவிகள் உண்மையிலே அதற்குத் தகுதியானவர்களுக்கு கிடைக்காமல் அதிகாரிகளின் விருப்பு வெறுப்புகளுக்கேற்றவாறு வழங்கப்படுவதாகப் பல முறைப்பாடுகள் பல தடவைகள் வெளிவந்தது தெரிந்தவையே.

உதாரணமாக மீளக்குடியமர்வு நிதிக் கொடுப்பனவு, சீமெந்து, கூரைத்தகடு வழங்குதல் மற்றும் உடுபுடைவைகள், சமையற்பாத்திரங்கள் வழங்குதல் தொடர்பாக உதயனுக்கு வந்த முறைப்பாடுகள், குற்றச்சாட்டுக்களை எடுத்துக்கூறலாம். ஆகையால் நிவாரண நிறுத்தம் சம்பந்தமாகவும் குற்றச்சாட்டு அலை மிகப் பெரிதாக வீசும் என்று இப்பொழுதே எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

எப்படியோ இது சம்பந்தமான மக்களின் பதிலுணர்வு எவ்வாறு இருக்கும் என்பதை விரைவாக நகரும் நாள்கள் எடுத்துச் சொல்லும்.

★ ★ ★

### செம்மணிப்புதைகுழிகள்

செம்மணிப் புதைகுழி விவகாரம் வெளிச்சத்துக்கு வந்து ஒரு மாதம் கழிந்து போய்விட்டது. ஆனால் புதைகுழிகளைத் தோண்டி அங்கு மறைக்கப்பட்டுள்ள சடலங்கள் யாருடையவை, அவர்கள் எப்போது கொலை செய்யப்பட்டார்கள் என்பதனைக் கண்டறியும் தோண்டுதல்கள், சோதனைகள் இன்னும் ஆரம்பமாகவில்லை. இந்தத் தாமதம் கொலைகளிலும், கொலை செய்யப்பட்டவர்களைப் புதைப்பதிலும் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதை அறிவதிலும் காலம் பிந்தச் செய்கிறது.

கிருஷாந்தி கொலையின் குற்றவாளியான இராணுவச் சிப்பாய் சோமரத்ன ராஜபக்ஷ, தகவல் தெரிவித்த உடனேயே இது விடயத்தில் அரசு சொந்தத்தில் அக்கறை காட்டியிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே ஆமை வேகத்தில் நகர்ந்து வருவதை அவதானிக்கலாம்.

நூற்றுக் கணக்கானோரின் கொலை சம்பந்தப்பட்ட மிகப் பாரதூரமான ஒரு விவகாரத்தில் அரசாங்கம் மெதுவாகச் செயற்படுவது விசனத்துக்கு உரியதாகும்; அரசின் இந்த வேகம் ஆக்கபூர்வமான பெறுபேறுகளைக் காண்பதில் தடையாக இருக்குமென்று ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். அரசோ அதன் அமைச்சர்களோ அதன் வேகக்குறைவை நியாயப்படுத்த முனைவது பொருத்தமற்றது. தமிழர்கள் சம்பந்தப்பட்ட ஒரு விடயம் என்பதாலேயே அரசு இதில் உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை என்பதனை எந்த விதத்திலும் மறுக்க முடியாது.

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு செம்மணி விவகாரத்தில் தனது பங்களிப்பை உரிய முறையில் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. எனினும் அதன் வேகத்திலும் சற்று விரைவு வேண்டும்.

சிப்பாய் ராஜபக்ஷவை ஆணைக்குழு விசாரித்து விட்டது. அவரை புதைகுழிகளைக் காண்பிப்பதற்கு செம்மணிக்கு கூட்டி வருவதற்கும் முடிவு செய்துள்ளது. ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிகிறோம். புதைகுழிகளைத் தோண்டுவதில் கைதேர்ந்தவர்களையும் உடற்கூற்றியற்றுறையில் அதி நிபுணத்துவம் உள்ளவர்களையும் இங்கு கூட்டி வர முடிவு செய்யப்பட்டிருப்பதும் உகந்ததே.

1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர், குடாநாட்டு மக்கள் 1996 ஏப்ரலில் மீளக் குடியமர்ந்தார்கள். குடாநாட்டு இளைஞர்கள், யுவதிகள் பெரும் எண்ணிக்கையில் காணாமற்போகச் செய்யப்பட்டது 1996 ஜூலை, ஓகஸ்ட் மாதங்களிலாகும். 1996 ஏப்ரல், மே மாதங்களில், படையினர் வலிகாமத்தில் மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர் அவ்வேளைகளிலும் பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் கொலையுண்டனர்.

இராணுவ நடவடிக்கையின் போது கொலையுண்ட தீவிரவாத நபர்களின் சடலங்களை பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் விசாரணைகள் எதுவுமின்றியே புதைப்பதற்கு படையினருக்கு அதிகாரம் உண்டு.

எனவே செம்மணியில் புதைக்கப்பட்ட சடலங்கள் இராணுவநடவடிக்கையின் போது கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் என்று இராணுவம் (அரசாங்கம்) கூறக்கூடிய ஒரு சாத்தியமுண்டு.

உள்நாட்டு உடற்கூற்றியல் நிபுணர்களுக்கு சடலங்கள் எந்தக்காலப்பகுதியில் புதைக்கப்பட்டன என்று கூறக்கூடிய துறைசார் அனுபவமும் அறிவும் இருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இத்தகைய ஒரு பின்னணியில் செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கும் ஆராய்வதற்கும் முழுக்க முழுக்க வெளிநாட்டு நிபுணர்களின் உதவியே பெறப்பட வேண்டும். மேலும் கொலை செய்து புதைக்கப்பட்டவர்கள் யார் என்பதனை இனங்காட்டக்கூடிய திறமையும் வெளிநாட்டு நிபுணர்களுக்கே உண்டு. ஆகையால் செம்மணி விவகாரத்தில் உண்மையைக் கண்டறிவதனால் துறைசார் தேர்ச்சியும் அனுபவமும் மிக்க வெளிநாட்டு நிபுணர்களின் உதவியே பெறப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்த விரும்புகிறோம்.

மேலும் செம்மணியில் புதைகுழிகள் இருப்பதாகக் கூறப்படும் பிரதேசம், விசாரணையாளர்கள், ஆய்வாளர்கள் தமது பணிகளைத் தொடங்குவதற்கு முன்னர் வேறு எவரும் செல்லமுடியாத இடமாகப் பிரகடனப் படுத்தவேண்டும். அதே போன்று அப்பகுதிக்கு எவருமே செல்லமுடியாதவாறு காவல் போடப்பட வேண்டும். மேலும் புதைகுழிகள் தோண்டப்படும் போது காணாமற்போனவர்களின் உறவினர்களும் அங்கு பிரசன்னமாக வகை செய்யப்பட வேண்டும்.

ஏனெனில் கொலைசெய்யப்பட்டு நீண்ட காலத்துக்கு முன் புதைக்கப்பட்டவர்களின் பல், தலைமயிர் போன்ற சிதைந்துபோக முடியாத உறுப்புகளிலிருந்தே அவர்களை இனங்காண முடியும். அவர்கள் உடையணியும்விதம், அணிந்திருந்த உள் ஆபரணங்கள் என்பனவற்றிலிருந்தும் இலகுவாக இனங்கண்டு கொள்ளலாம்.

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் வேகமாக கால்பரப்பும் காசநோய்!

காசநோய் அல்லது TB என்பது மனித நுரையீரல்களை கடுமையாக தாக்குகின்ற ஒரு சமூக தொற்றுநோயாகும். Mycobacterium Tuberculosis என்ற பக்றீரிய நுண்கிருமியினால் தோற்றுவிக்கப்படும் இந்நோய் நுரையீரல்களைப் பகுதியாகவோ அல்லது முற்றாகவோ செயலிழக்கச் செய்கின்றது. இந்நோயினால் நோயாளியின் செயற்பாடுகள், ஆரோக்கியம் என்பன பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றன. இதனால் அவர் சமூகத்தில் — வினைதிறன் அற்ற — தனிமைப்படுத்தப்பட்ட — ஒருவ

> காச நோய்க்கான மருந்துகள் சரியான அளவுகளில், சரியான நேர இடைவெளிகளில். சிகிச்சைக் காலம் முழுவதும் தவறாமல் எடுத்து முடிக்கப்பட வேண்டும்.

ராக ஒதுக்கப்பட்டு விடுகின்றார். தகுந்த சிகிச்சை பெறாத சந்தர்ப்பத்தில் இந்நோயினால் பீடிக்கப்பட்டோரில் 50 வீதமானோர் 5 வருடங்களில் இறந்து போகின்றார்கள்; மிகுதி 25 வீதமானோர் கடும் நோயினால் தொடர்ந்தும் அவதியுறுகின்றார்கள்; மிகுதி 25 வீதமானோர் எந்நேரத்திலும் நோயுறக்கூடியவர்களாகவும் சமூகத்திலுள்ள ஏனையோருக்கு கிருமிகளை பரப்புகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் பெரும்பாலும் நோயறிகுறிகளை வெளிக்காட்டுவதில்லை என்பதுஇங்கு குறிப்பிடத்தக்கது.

ஆண் — பெண் வேறுபாடுகளின்றி எந்த வயதினரையும் இந்நோய் தாக்கக் கூடியது. எனினும் 14 வயதிற்குட்பட்ட பிள்ளைகளே அதிகளவில் இந்நோயினால் பீடிக்கப்படுகின்றார்கள். ஏறக்குறைய 75 வீதமான காசநோயாளிகள் 14 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

மேலும் ஆண்களை பொறுத்தவரையில்வயது அதிகரிக்க அதிகரிக்க(45 முதல்54 வயதுவரை) தொற்று ஏற்படுவதற்கான தன்மையும் அதிகரித்துச் செல்கின்றது. ஆனால் பெண்களை பொறுத்தவரை பெரும்பாலும் 35 வயதிற்குட்பட்டவர்களே இந்நோயினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

காசநோய் நுண்கிருமி பெரும்பாலும் நுரையீரல்களை தாக்கினாலும் கூட, அங்கிருந்து குருதி மூலம் பரவி சிறுகுடல், மூளை மென்சவ்வு, என்பு, மூட்டுக்கள், நிணநீர் முடிச்சுக்கள் போன்ற உடலின் ஏனைய பகுதிகளையும் தாக்க கூடியது. (Miliary T.B அல்லது Diseminated T.B) முக்கியமாக B. C. G. என்ற காச நோய் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத பிள்ளைகள் இவ்வாறான நுரையீரல் தவிர்ந்த ஏனைய பகுதிகளை தாக்கும் காச நோயினால் பாதிப்புற்று இறக்கின்றனர்.

உலகம்முழுவதும் 15 முதல் 20 மில்லியன் மக்கள் காச நோயினால் பீடிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்களில் 75 வீதமானோர் இலங்கை, இந்தியா போன்ற வளர்முக நாடுகளிலேயே காணப்படுகின்றார்கள். யாழ். குடாநாட்டில் கூட காசநோயாளர்களின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்து வருகின்றது. புள்ளி விவரங்களின்படி 1997 1998 களின் முதல் அரையாண்டை நோக்குவோமானால்1998இல் காசநோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1997 ஐ விட கிட்டத்தட்ட இரு மடங்கினால் அதிகரித்துள்ளது. யாழ்நகர், கரவெட்டி, சாவகச்சேரி, பளை. சுன்னாகம், மல்லாகம், கொடிகாமம், உரும்பிராய், நீர்வேலி, புத்தூர் போன்ற இடங்களில் அதிகளவான காசநோயாளர்கள் காணப்படுகின்றனர்.

எனவே எமது மக்கள் காச நோய் விடயமாக விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது.

இந்நோய் எமது பிரதேசத்தில் அதிகரித்துக்கொண்டிருந்தாலும் கூட இது ஒரு குணப்படுத்த முடியாத ஒரு நோயோ, தடுக்கமுடியாத ஒரு நோயோ அல்ல. இந் நோயை தடுப்பதற்கு பல வழிகள் உள்ளன; குணப்படுத்துவதற்கு சிறந்த வைத்திய சேவைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளன. அப்படியிருந்தும் கூட காச நோய் எம் பிரதேசத்தில் இன்றும் நிலைத்

லுக்கும் அறிகுறி வெளிப்படுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் தொற்றியநோய்க்கிருமிநுரையீரல்களில் பெருகி

> 14 வயதிற்குட்பட்ட பிள்ளைகளே காச நோயினால் அதிகளவில் பீடிக்கப்படுகின்றார்கள்.

(Incubation Period) படிப்படியாக நுரையீரலைப் பாதிக்க ஆரம்பிக்கின்றது. நோய்க்கிருமியின் இந்தத் தாக்கம் நோயாளியின் உடலில் உள்ள நோயெதிர்ப்பு சக்திக்கமைய வேறுபடுகின்றது. நோயெதிர்ப்பு சக்தி குறைந்த ஒருவரில்—உதாரணமாக AIDS நோயாளிகள், போசாக்கு குறைந்த குழந்தைகள், சலரோகம், ஆஸ்துமா போன்ற கடுமையான நோயுள்ளவர்கள். ஸ்ரீரொய்ட் (Steroid) மருந்து உட்கொள்பவர்கள்— ஆகியோரில் மிக விரைவாகவே காசநோய் அறிகுறிகள் வெளிப்படுகின்றன. நோயெதிர்ப்பு சக்தி கூடியவர்களில் தொற்று ஏற்பட்டு சிலமாதங்கள் அல்லது சில வருடங்களின் பின்னர்தான் நோயறி

கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும் காசநோய் இலகுவாக குணமாக்கக்கூடியது மட்டுமல்லாமல் நோயாளிக்கு எவ்விதமான நிரந்தர பாதிப்பையும் ஏற்படுத்தாமல் குணமாகிப் போகின்றது.

## நோய்ப்பரவலும் தொற்றலும்

காசநோயாளி ஒருவரின் சளிச்சுரப்பில் பெருமளவிலான காசநோய்க்கிருமிகள் காணப்படுகின்றன.நோயாளி

> 3 வாரங்களுக்கு மேற்பட்ட கடும் இருமல்; சளியுடன் இரத்தம் வெளியேறுதல் என்பன முக்கிய காச நோய் அறிகுறிகளாகும்.

இருமும்போது கிருமிகள் நிறைந்த ஆயிரக்கணக்கான சளித்துணிக்கைகள் வளிமண்டல சுற்றாடலில் விசிறப்படுகின்றன. கடுமையான தொடர் இருமல் காரணமா

உடலிலுள்ள சகல காச நோய்க் கிருமிகளும் அழிக்கப்படுகின்றன. கொடுக்கப்படும் மருந்துகள் சரியான அளவுகளில், சரியான நேர இடைவெளிகளில் சிகிச்சைக் காலம் முழுவதும் தவறாமல் எடுத்து முடிக்கப்பட வேண்டும். பெரும்பாலான நோயாளிகள் மருந்து உட்கொள்வதில் அதிகசிரத்தை காட்டுவதில்லை. மருந்துஉட்கொள்ள ஆரம்பித்து சில காலங்களில் இருமல், சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் நீங்கிவிடுவதால் இனி நோய் முற்றாகக் குணமாகி விட்டதாக எண்ணி நோயாளர்கள் சிகிச்சையை இடைநடுவே கைவிட்டு விடுகிறார்கள்; மேலும் ஆறுமாதங்கள் நீண்டு செல்லும் சிகிச்சைக் காலம், தூர இடங்களில் இருந்து அடிக்கடி கிளினிக்குக்கு வருவதிலுள்ள இடர்பாடுகள், அதிக நேரம் கிளினிக்கில் காத்து நிற்கவேண்டி இருப்பது போன்ற காரணங்களும் நோயாளிகள் இடைநடுவே தமது சிகிச்சையை கைவிடக் காரணமாக இருக்கின்றன.

இவ்வாறானவர்களின் நுரையீரல்களில் காசநோய்க் கிருமிகள் முற்றாக அழிந்து போகாமல் தங்கி விடுகின்றன. இவை மீண்டும் பல்கிப் பெருகி நோயை ஏற்படுத்தும். மேலும் இவ்வாறான நோயாளிகளில் காணப்படும் நோய்க்கிருமிகள் காசநோய் மருந்துகளுக்கு எதிர்ப்பு சக்தி கொண்டவையாக மாற்றமடையக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தக் குறிப்பிட்ட நோயாளியை தற்போதுள்ள மருந்துகளைக் கொண்டு குணப்படுத்த முடியாமல் போக

## தடுப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பு அவசியம்

திருந்து பரவி வருவதற்கு பின்வரும் சமூக காரணிகள் முக்கிய காரணங்களாக கூறப்படுகின்றன.

1. இந்நோயைப்பற்றி மக்கள் மத்தியில் போதியவிளக்கமின்மையும் மூட நம்பிக்கைகள் நிலவி வருகின்றமையும்.

2. இந்நோயைத்தடுப்பதற்கான அல்லது குணப்படுத்துவதற்கான வைத்திய சேவைகளை எளிதில் பெறக்கூடியதாக இருந்தும் கூட அது பற்றி மக்கள் அக்கறையற்று இருக்கின்றமை.



காச நோயாளி ஒருவர் தும்மும் போது காச நோய்க் கிருமிகள் வளியில் பரவுகின்றன.

3. இந்நோய்க்கான வைத்திய சிகிச்சை பெற்று வருபவர்கள் கூட அதனைப் பூரணப்படுத்தாமல் இடைநடுவே கைவிட்டு செல்லுகின்றமை.

இம் மூன்று முக்கிய காரணிகளுடன் குறைந்த வாழ்க்கைத்தரம், சனத்தொகை அதிகரிப்பு, சன நெருக்கம், போசாக்கின்மை, அதிக அங்கத்தவர்கள் கொண்ட குடும்ப அமைப்புகள், குறைந்த வயதில் திருமணம் முடித்தல் என்பனவும் காச நோய்ப்பரம்பலுக்கு காரணங்களாக அமைகின்றன.

## நோய் அறிகுறி

காசநோய்க்கிருமி தொற்றியவுடனேயே ஒருவர் நோய்க்கான அறிகுறியை காட்டுவதில்லை. தொற்ற

குறிகள் வெளிக்காட்டப்படுகின்றன. ஆனால் பொதுவாகவே தொற்று ஏற்பட்டு 3—6 வாரங்களில் காச நோய்க்கான அறிகுறிகள் வெளிப்படத் தொடங்குகின்றன.

1. மூன்று வாரங்களுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான கடும் இருமல் காணப்படுதல்.

2. சளியுடன் இரத்தம் வெளியேறுதல்.

3. மூச்சுவிடுதலில் மிகுந்த சிரமமும் நெஞ்சு நோவும் காணப்படுதல்.

4. காய்ச்சல் காணப்படல் (பெரும்பாலும் பிற்பகல் நேரங்களில்)

5. இரவு நேரங்களில் அதிகளவில் வியர்த்தல்.

6. பசியின்மையும், உடல் மெலிதலும்.

7. களைப்பு, சத்தி, தலையிடி.

இந்நோய் அறிகுறிகள் வெளிக்காட்டப்பட்டவர்கள், முக்கியமாக மூன்று கிழமைகள் தொடர்ச்சியான இருமல் உள்ளவர்கள், உடனடியாக அண்மையிலுள்ள வைத்தியசாலையில் சளிப் பரிசோதனையை (Sputum Examination) மேற்கொண்டு நோயைக் கண்டறிந்து சிகிச்சை ஆரம்பிப்பது நன்மை பயக்கும். ஆரம்பக்

கவும், காற்றோட்டம் காரணமாகவும் கிருமிகளை கொண்ட இந்த நுண் துணிக்கைகள் பெருமளவில் நோயாளியின் சுற்றாடலில் பரவிக் காணப்படும். இவற்றை ஒரு சுகதேகி சுவாசிக்கும்போது அவருடைய நுரையீரலை காசநோய்க் கிருமிகள் அடைந்து பல்கிப் பெருகி அவருக்கு நோயை ஏற்படுத்தும். ஆனால் கிரமமான முறையில் சிகிச்சை பெறுகின்ற நோயாளி ஒருவர் ஏனையோருக்கு நோயைப் பரப்புவது இல்லை. இவ்வகை நோயாளிகள் பொதுவாக ஆபத்தற்றவர்கள். இது தவிர காசநோய்த் தொற்றுடைய பசுவில் இருந்து பெறப்படும் பாலை அருந்துவதாலும் காசநோய் உருவாகும் வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் எமது சமுதாயத்தில் பாலை நன்றாகக் கொதிக்கவைத்து காய்ச்சி அருந்துவதால் அப்பாலில் காசநோய்க் கிருமிகள் இருப்பதில்லை; நோயும் அவ்வாறு பரவுவதில்லை.

## சிகிச்சை

காசநோயை குணப்படுத்துவதற்காக Rifampicin, Isoniazid, Pyrazinamide, Ethambutol, Streptomycin ஆகிய வினை திறன் மிக்க 5 மருந்து வகைகள் பயன்படுத்தப் படுகின்றன. இவை குறைந்த பக்கவிளைவுகளை கொண்டவை; குளிசைகளாக இருப்பதால் இலகுவாக உட்கொள்ளக் கூடியவை; அரசாங்க மருத்துவமனைகளில் வைத்திய ஆலோசனைகளுடன் இலவசமாக வழங்கப்படுகின்றன.

காச நோய்க்கான சிகிச்சைக்காலம் தொடர்ச்சியான 6 மாதங்களாகும். அதில் முதலிரண்டு மாதங்கள் அதிதீவிர சிகிச்சைக்காலமாகவும். (Intensive phase), அடுத்து வரும் 4 மாதங்கள் தொடர் சிகிச்சைக் காலமாகவுல் (Continuation phase) அமையும். அதிதீவிர சிகிச்சைக் காலப்பகுதியில். உடலிலுள்ள பெரும்பாலான காசநோய்க் கிருமிகள் அழிக்கப்படுகின்றன. எஞ்சியவை தொடர் சிகிச்சைக் காலப் பகுதியில் முற்றாக அழிக்கப்படும். அதாவது 6 மாதசிகிச்சைக்கு பின்னரே தொடர்ச்சியாக


சு. சதாகரன்
செ. சிவரூபன்
(யாழ். மருத்துவ பீட மாணவர்கள்)


லாம். மேலும் நோயாளியிடமிருந்து பரவுகின்ற — மருந்திற்கு எதிர்ப்பு சக்தியுள்ள— காசநோய்க் கிருமிகள் சமூகத்திலுள்ள ஏனையோரைத் தாக்கும்போது அவர்களும் மருந்து மூலம் குணப்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகின்றார்கள். இவ்வாறாக சரியான முறையில், சரியான காலத்திற்கு பூரணமாக சிகிச்சை பெற தவறுகின்றமையால் சமுதாயத்தில் இருந்து இல்லாதொழிக்க முடியாத ஒரு நோயாக காச நோய் மாறக்கூடும்.

ஒவ்வொரு வைத்திய ஊழியர்களும் சமுதாயத்தில் காச நோய் உள்ளவர்களைத் தேடிக் கண்டு பிடித்து சிகிச்சை அளிப்பதென்பது மிகவும் கஷ்டமான ஒரு விடயம். மேலும் காசநோய் ஒரு சில நாள்கள் சிகிச்சைபெறுவதால் குணமாகக் கூடிய ஒரு நோயுமல்ல. மருத்துவர்களின் தொடர்ச்சியான மேற்பார்வையின்கீழ் 6 மாதங்கள் கிரமமாக மருந்துட் கொள்வதன் மூலம் மட்டுமே இந் நோயைக் குணப்படுத்த முடியும். எனவே நோயாளிகள் தாமாகவே முன்வந்து இந் நோய்க்கான சிகிச்சையை பெற்று குணமடைய முன்வர வேண்டும்.

முக்கியமாக தமது பிள்ளைகளில் காசநோய்க்கான அறிகுறிகளை அவதானித்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

## அருங்காட்சியகமாகும் 'விக்கிராந்த்' கப்பல்!

இந்தியாவின் முதல் விமானம்தாங்கிப் போர் கப்பலான 'ஐ. என். எஸ், விக்ராந்த்' மிதக்கும் அருங்காட்சியகமாக மாற்றப்பட உள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் ஆசியாவின் முதல் மிதவை அருங்காட்சியகம் என்ற பெருமையை அது பெற்றுவிடும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கப்பலின் பின்னணி என்ன தெரியுமா?

இந்திய கடற்படையின் முதுகெலும்பாக வர்ணிக்கப்பட்ட 'ஐ. என். எஸ். விக்ராந்த்' விமானந்தாங்கிப் போர்க்கப்பல் கடந்த 97—ஆம் ஆண்டுஜனவரி 31ஆம் தேதி ஓய்வுபெற்றது. பிரிட்டன் கடற்படையில் பணியாற்றி இனிவேண்டாம் என்ற நிலையில் இந்தியாவுக்கு விற்கப்பட்டது. 1962 இல் மும்பைத் துறைமுகம் வந்த இந்தக் கப்பலை அப்போதைய பிரதமர் ஜவர்ஹர்லால்நேரு வரவேற்றார். நேருவின் சகோதரி விஜயலட்சுமி பண்டிட் இக் கப்பலுக்கு 'விக்ராந்த்' என்று பெயர் சூட்டினார். சுமார் 36 ஆண்டுகள் சேவைபுரிந்து 3 லட்சம் கடல் மைல்களைச் சுற்றிவந்த இக் கப்பலுக்கு 1997 ஆம் ஆண்டு ஜனவரி 31—ஆம் தேதி ஓய்வு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில் வரலாற்றுச் சிறப்புமிக்க விக்ராந்த் கப்பல், மிதக்கும் அருங்காட்சியகமாக உருவாக்கப்படும் என்றும் இக்கப்பலில் தனியார் முயற்சியுடன் ஹெலிகாப்டர் தளம் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஆனால் அதிகாரிகளின் அலட்சியம், மும்பைத் துறைமுகக் கழகத்தின் முட்டுக்கட்டை, மகாராஷ்டிர அரசின் ஆர்வமின்மை காரணமாக கடந்த 18 மாதங்களாக கடற்படைத் தளத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'விக்ராந்த்' மெல்ல மெல்லத் துருப்பிடிக்க ஆரம்பித்தது.

"இந்தக் கப்பலை அப்படியே ஏலத்துக்கு விட்டால் ரூ. 18 கோடிதான் கிடைக்கும். ஆனால் நீரில் மூழ்கி விட்டாலோ அந்த இடத்தை தூர்வார ரூ. 100 கோடி செலவாகும். நாங்கள் அந்தக் கப்பலோடு வாழ்ந்தோம்; வளர்ந்தோம். பழைய இரும்புக்கு விற்பது மனதுக்கு கவலை அளிப்பதாகும். மகாராஷ்டிர அரசு உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் எங்களுக்கு அதைத் தவிர வேறு வழியில்லை" என்று கடற்படை ரியர் அட்மிரல் பி. கே. ராய் வருத்தத்துடன் கூறினார்.

வரலாற்றுப் புகழ்பெற்ற இக்கப்பல் மீண்டும் வரலாறு படைக்குமா அல்லது நீரில் மூழ்கி அழிந்துவிடுமா என்ற நிலை கடந்த 18 மாதங்களாக இருந்து வந்தது.

இனி இக்கப்பலை அருங்காட்சியகமாக மாற்ற மகாராஷ்டிர அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★

## தாய் முகம் காணத் தவிக்கும் வங்க எழுத்தாளர் தஸ்லிமா

படத்தில் இருப்பவர் யார்? இந்தி நடிகையோ அல்லது விளையாட்டு வீராங்கனையோ என எண்ணி விடாதீர்கள். இப்பெண்மணி வங்க தேசத்தைச் சேர்ந்த கவிஞர், எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீன்.

முஸ்லிம் பழமை வாதிகளால் மரணதண்டனை விதிக்கப்பட்டுத் தற்போது அமெரிக்காவில் தஞ்சம் புகுந்து தலைமறைவு வாழ்க்கை நடத்துகிறார். சொந்த நாடான வங்க தேசத்தில் குடல் புற்றுநோயால் தாக்கப்பட்டு சாவின் பிடியில் சிக்கியிருக்கும் தனது தாயைக் காணத் துடிக்கிறார்.

"எனது தாய் இன்னும் எவ்வளவு நாள் உயிருடன் இருப்பார் எனத் தெரியவில்லை. அவரைப் பார்க்க வேண்டும் என மனம் துடிக்கிறது. ஆனால் வழி தெரியாமல் தவிக்கிறேன். தாய் நாடு செல்ல எனக்கு உரிமை இருந்தாலும் இங்குள்ள நிர்வாகத்தினர் என்னை அனுமதிப்பார்களா என்பது சந்தேகமாக உள்ளது. நான் வங்கதேசம் சென்றால் முஸ்லிம் பழமைவாதிகளால்எனக்குப் பிரச்சினைகள் உண்டாக்கக்கூடும் என்று இங்குள்ள அதிகாரிகள் கூறுகின்றனர். ஒருவிதத்தில் பார்த்தால் என்ன ஆபத்து நேரிட்டாலும் பரவாயில்லை; எப்படியாவது தாயை ஒருமுறை பார்த்தால் போதும் என மனம் நினைக்கிறது. ஆனால் அது நடக்குமா என்பதுதான் தெரியவில்லை" என்கிறார் தஸ்லிமா.

அப்படி என்ன இவர் கொலைக் குற்றம் செய்து விட்டார் என்கிறீர்களா?



நான்கு ஆண்டுகளுக்கு முன் திருக்குரான் பற்றி இவர் கூறிய ஒரு கருத்து பெரும் புயலையே கிளப்பிவிட்டது. 94 ஆம் ஆண்டு மே மாதம் கல்கத்தாவில் 'தி ஸ்டேட்ஸ் மேன்' பத்திரிகைக்கு இவர் ஒரு பேட்டியளித்திருந்தார். அப்போது முஸ்லிம்களின் புனித நூலான திருக்குரானைத் திருத்தி எழுத வேண்டும் என்று அவர் கூறியதாகச் செய்தி வெளியானது.

இதற்கு முஸ்லிம் பழமைவாதிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர். ஆனால் பின்னர் தாம் அவ்வாறு கூறவில்லை என்று தஸ்லிமா கூறினாலும் மதப் பழமைவாதிகள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. முஸ்லிம்களின் மனம் புண்படும்படி பேசிய தஸ்லிமாவுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரினர்.

அயோத்தியில் பாபர்மசூதி இடிக்கப்பட்ட சம்பவத்தின் போது வங்கதேசத்தில் இந்துக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும் இவர் எழுதினார். இதனால் முஸ்லிம்களின் கோபத்துக்கு ஆளானார். இது தொடர்பாக வங்கதேசத்தில் மிகப் பெரிய போராட்டமே நடந்தது. பழமைவாத முஸ்லிம் தலைவர் ஒருவர் தஸ்லிமாவின் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு 1 லட்சம் டாக்கா (சுமார் 2500 டாலர்) பரிசு வழங்கப்படும் என அறிவித்தார். பயந்து போன தஸ்லிமா டாக்காவிலேயே இரண்டு மாதம் தலை மறைவானார். பின்னர் நீதிமன்றத்தில் சரணடைந்தார். பிணையில் வெளி வந்த பின்னர் மீண்டும் தலைமறைவானார். பின் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்தார். சுவீடன், ஜேர்மனியில் சிறிது காலம் தலைமறைவாக இருந்த தஸ்லிமா, இப்போது அமெரிக்காவில் வசிக்கிறார்.

"நான் எப்போதாவது வெளியில் சென்றால் இந்திய துணைக் கண்டத்தைச் சேர்ந்தவர்கள் சிலர், 'நீங்கள் தஸ்லிமா தானே?' எனக் கேட்பர். இல்லை அவரது முகச் சாயல் எனக்கு இருக்கலாம் எனக் கூறிவிட்டு வேகமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடுவேன்.

"நான் எப்போதாவது மான்ஹட்டன் வரை சென்று விட்டு காரில் திரும்புவேன். கார் டிரைவர் என்னை உற்றுப்பார்த்துவிட்டு, 'நீங்கள் தஸ்லிமாதானே?' எனக் கேள்வி கேட்கத் தொடங்கி விடுவார். நான் உடனே பேச்சை மாற்றிவிட்டு அங்கேயே இறங்கிக்கொண்டு வேறு டாக்ஸி பிடித்துச் சென்றுவிடுவேன்.

"என்னால் தொடர்ந்து எழுத முடியவில்லை. 'லஜ்ஜா' (வெட்கம்) என்ற எனது புத்தகத்தின் மூலம், கிடைத்த பிரபல்யத்தால் தான் வாழ்ந்து வருகிறேன். அதுவும் கரைந்துகொண்டு வருகிறது. பூட்டிய வீட்டிற்குள் எனது காலத்தைக் கழித்து வருகிறேன். சுதந்திரமாக எங்கும் உலவ முடியவில்லை. இருளில் தவிக்கும் நான் என்று விடியும் எனக் காத்திருக்கிறேன்" என்கிறார் மிகுந்த மன வேதனையுடன்.

★

- ஆர் விவேக் -

> "...எனது தாய் இன்னும் எத்தனை நாள்கள் உயிருடன் இருப்பார் எனத் தெரியவில்லை. அவரைப் பார்க்க வேண்டும் என மனம் துடிக்கிறது. ஆனால் வழி தெரியாமல் தவிக்கிறேன்..."

## வலியில்லா மரணம்!

சீனாவில் குற்றங்கள் பெருகி வருகின்றன. போதை மருந்து கடத்தல், பொருளாதாரக் குற்றங்களுக்கு மரணதண்டனை வழங்கப்படுகிறது.

சில சமயங்களில் விளையாட்டு மைதானங்களில் பொதுமக்கள் முன்னிலையில் மரணதண்டனை நிறைவேற்றப்படுகிறது. மரணதண்டனைக் கைதியின் கைகள் அவனது தலையின் பின்னால் வைத்துக் கட்டப்படுகின்றன; பின்னர் அவனை மண்டியிட்டு அமர வைக்கிறார்கள். மரணதண்டனையை நிறைவேற்ற சீன அரசு செலவிடுவது ஒரே ஒரு துப்பாக்கிக் குண்டு மட்டும்தானாம். கைதியின் மிக அருகாக நின்று கொண்டு அவனது தலையிலோ அல்லது அவனது இதயத்தை நோக்கியோ சுட, அவன் பிணமாகச் சாய்கிறான். அந்த ஒரு துப்பாக்கிக் குண்டின் விலையையும் கைதியின் குடும்பம் அரசுக்குச் செலுத்தியாக வேண்டுமாம்.

கைதிகளை மிகக் கொடூரமான வழியில் கொல்வதை விட்டு, மரண அவஸ்தையோ வலியோ இல்லாமல் அதிநவீன முறையில் மரணதண்டனையை நிறைவேற்ற சீன அரசு முயன்று வருகிறது. இம்முறையில் கைதியை ஒரு படுக்கையில் படுக்கவைத்து விஷஊசி ஏற்றிக் கொல்கிறார்கள். பல்வேறு குற்றங்களுக்காக சென்ற ஆண்டில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 22 கைதிகள் இத்தகைய நவீன முறையில் கொல்லப்பட்டதாக ஹொங்கொங்கிலிருந்து வெளியாகும் ஒரு நாளிதழ் தெரிவித்துள்ளது.



சீனாவில் எத்தனை பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது...? இதைத் தேசிய இரகசியமாக சீன அரசு கருதுகிறது. என்றாலும் 1996 இல் சீனாவில் 4367 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதாக சர்வதேச மனித உரிமைக் கழகம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவிலும் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. என்றாலும் 1977 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 400 பேருக்குத்தான் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

★

## வழுக்கையா கவலை வேண்டாம்!

வழுக்கைத்தலையர்களே... கவலையை விடுங்கள். நல்ல காலம் காத்திருக்கிறது உங்களுக்கு. வழுக்கையைப் போக்கும் 'ப்ரோபேசியர்' என்ற மாத்திரை அமெரிக்க உணவு மற்றும் மருந்துத் துறை அனுமதியுடன் விற்பனைக்கு வந்துவிட்டது ... அமெரிக்காவில் ஒரு மாதத்திற்குத் தேவையான மருந்தின் விலை 50 டொலர்கள் (ரூ 400 சுமாராக) அமெரிக்காவில் மட்டும் 3கோடியே 30 லட்சம் மொட்டைத் தலையர்கள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளார்கள். பின் என்ன கேட்கவா வேண்டும்? ஒரே ஆண்டில் இந்த மாத்திரைகளின் விற்பனை 300 மில்லியன் டொலர்களைத் தாண்டுமாம். இது ஆண்களுக்கு மட்டும்தான். பெண்கள் சாப்பிடக்கூடாது. இந்த மருந்திலுள்ள 'ஃபினஸ்டீரைட்' பிறவி ஊனத்தை ஏற்படுத்தும் என்பதே இதற்குக் காரணமாம்.

இந்த மாத்திரைகளை ஓராண்டிற்கு உட்கொண்டால் 50 சதவிகிதம் பேருக்கு நல்ல பலன் கிடைக்கும் என்கிறார்கள். முடி வளருமோ வளராதோ... இருக்கும் கொஞ்ச முடியும் கொட்டிவிடாது என்று பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது.

★

## ஹெலியுடன் இணைந்த மோட்டார் சைக்கிள்கள்!

ஜப்பானின் கவஸாக்கி ஹெலி இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்டின் புதிய தயாரிப்புதான் இந்த ஹெலிக்ஹொப்டர். இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் பிரதேசங்களில் வீதிப் போக்குவரத்து பாதிக்கப்படும்போது மீட்புப் பணியாளர்கள் உரிய இடங்களை எளிதில் சென்றடைய வசதியாக இந்த ஹெலிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.



'கவப்ஸாக்கி பி. கே. 117' என பெயரிடப்பட்ட இக் ஹெலியுடன் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் இணைக்கப்பட்டிருக்கும்.

ஹெலியின் இருபுறத்திலும் அவசரமாகத் தரையில் செலுத்திச் செல்ல வசதியாக இரண்டு 'ஹொண்டா 250' ரக மோட்டார் சைக்கிள்கள் பொருத்தப்பட்டுள்ளன.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாயிரம் ரூபாய்...

செல்லம்மா ஆச்சிக்கு இரவு முழுவதும் நித்திரைவர மறுத்தது. எப்ப விடியும் என்று படுக்கையில் அனுங்கிக்கொண்டு புரண்டாள். இடையிடையே அவளின் இருமல், துணைக்குப் படுக்க வந்த ராசனின் நித்திரையையும் குளப்பிக் கொண்டு இருந்தது.

"ஏன் ஆச்சி இண்டைக்கு நித்திரையில்லாமல் இருமிக் கொண்டு கிடக்கிறாயணை" இது ராசனின் கேள்வி.

"ஏண்டா மோனை உன்ர நித்திரையைக் குளப்பிறனே; இருமல் ஒரு பக்கம் விடுகுதில்லை படுக்க; மற்றது விடியமுதல் பஸ் எடுத்து பட்டினம் போகப் போறன். இந்த விழுவான்கள் என்ரை ஐயாயிரம் ருபாவை அங்கை வங்கிக்கு அனுப்பியிருக்கிறாங்களாம். போய் எடுக்கக் கொண்டு வரஎண்டு இருக்கிறன்."

இருமலுக்கு மத்தியிலும் ஆச்சி கூறிய மறுமொழி இது: ஆச்சி மேலும் விடவில்லை:

"உவன் விதானைப்பொடியன் செய்த வேலையால தான் எனக்கு இந்த ஐயாயிரம் தரப்பிந்திப்போச்சு: உங்கை ஊரிலை எல்லோரும் எடுத்துப்போட்டினம். உங்கை கனபேர் விதானையை வீட்டிலை போய்ச் சந்தித்தும் வேறு வழிகளாலையும் மடக்கிப் பிடிச்சு வேளைக்கே எடுத்துப்போட்டினம். இது கிழவிதானே எண்டு போட்டு விதானை யாரும் என்னைக் கைவிட்டிட்டார்."

ராசன் ஆச்சியின் கதையை செவிமடுத்துவிட்டு குறுக்கிட்டான்.

"ஆச்சி: சும்மா விதானை யாரைக் குறை சொல்லாதேயுங்கோ. அந்தாளும் என்ன செய்ய; கொஞ்சக் கொஞ்சப் பேருக்குத் தானே றெக்கமண்ட் பண்ணலாம். ஏதோ ஓர் ஒழுங்குமுறையிலை தானே குடுக்கலாம். நீங்கள் ஆச்சி, ஓர் ஆள் உள்ள குடும்பந்தானே? அதிலதான் பிந்திப் போச்சுதுபோலை"

ஆச்சியும் விடவில்லை.

"அப்ப என்னடா மோனை உவள் கனகம், சின்னம்மா, தெய்வானை...... இவையள் எல்லாம் தனிஆள் இல்லாமல்..."

ராசன் குறுக்கிட்டு, "எனக்கென்னவோ தெரியாது; எங்கட விதானையார் உங்கை 'வேறை விதானை மாரோடை ஒப்பிடேக்க பரவாயில்லைப் போல கிடக்குது..." என்றான்.

"அது சரி ஆச்சி, நீ என்னண்டு நாளைக்கு பட்டினம் போய் காசை எடுக்கப் போறாய்? பஸ் ஒடுதெல்லே! தனியப் போவியோணை..."

"என்னடா செய்யிறது. தனியத்தான் வந்தனான்கள். தனியத்தானே போகவேணும் பிள்ளையைப் பெற்று கஷ்ரப்பட்டு வளர்த்து என்ன பிரயோசனம்?... முந்தின காலமென்றால் குடும்பத்தில ஒன்றெண்டால் பிள்ளைகுட்டிகள், பேரப்பிள்ளைகள் எண்டு எவ்வளவு சனம் நிக்கும். இப்ப என்னடாவென்றால்... நானும் ஐந்து பிள்ளையைப் பெத்துப் ஒருவித பிரயோசனமும் இல்லை. அதுகள் என்னை மறந்தே போச்சுதுகள். இப்ப கடிதம் எழுதக்கூட அதுகளுக்கு நேரமில்லைப்போல."

ஆச்சி இப்படியே நீட்டிக் கொண்டே போனாள்.

"அது சரி ஆச்சி; நான் கேட்கிறன் எண்டு கோவிக்காதயணை, உந்தக்காசுகளை யெல்லகம் என்ன செய்யிறாயணை ?"

ராசன் கேட்டு முடிப்பதற்குள் ஆச்சியின் வாயிலிருந்து விடை வந்தது.

"டேய் ராசன், இப்ப எனக்கெண்டு ஒருவரும் உரிமையோட இல்லை. நாளைக்கு நான் இருந்தாற் போல செத்துப்போனன் எண்டால் என்ர சவத்தைக் கொண்டுபோய்ச் சுடவல்லே வேணும். நாலு காசுதன்னும் சேர்த்துவைக்காட்டிக்கு சவத்தை யார் தூக்கிக் கொண்டுபோய் சுடப் போறாங்கள்...?"

"அதுவும் சரிதான் ஆச்சி. பின்பனி பெய்யத் தொடங்கியிட்டுது, குளிரத்தொடங்குதணை, கொஞ்ச நேரம் துப்பட்டியை இழுத்துப் போத்துக்கொண்டு படணை. கோழி கூவத் தொடங்க எழும்பலாம்."

இருவரும் கண் அயர்ந்து தூங்கினார்கள்.

ஆச்சி திடீரென முழிச்சுப் பார்க்க பலபலவென விடிந்திருந்தது. காலைக்கடன்களை அவசரமாக முடித்துக் கொண்டு ஒரு சீலையைச் சுத்திக்கொண்டு வெத்திலைப் பையும் எடுக்கக்கொண்டு ஆச்சி வெளிக்கிட்டுட்டா: ஆச்சியின் வீட்டில இருந்து பஸ் ஸ்ராண்டுக்கு வர பதினொரு முடக்குத் தாண்ட வேணும். காலமை ஆறரை மணியிருக்கும். ஆனால் வீதியில் ஒரு சனங்களையும் காணேல்லையே என்று யோசித்தவாறு நடந்தாள் ஆச்சி. இண்டைக்கு 'றவுண்

**- தி. உதயசூரியன் -**

டப்போ' என்று திடீரென ஆச்சியின் மனதில் சந்தேகம் கிளம்பியது. ஆச்சியின் மனதில் ஏதேனும் பட்டால் ஒரு நாளும் அது பிழைப்பதில்லை

திடீரென சந்தியில் நின்ற ஆமிக்காரன் ஆச்சியின் பொல்லைத் தொட்டுப் பார்த்து 'எங்கை போறது' என்று கேட்கமுன்பே ஆச்சி "பாங்குக்கு...பாங்கு... ஐயாயிரம் ரூபாய்" என்று தொடங்கினா.

செல்லம்மா ஆச்சி பஸ் ஸ்ராண்டில போய் பொல்லின் உதவியுடன் குந்திக் கொண்டிருந்தா. பஸ்ஸைக் காணேல்லையெண்டு ஆச்சிக்கு சினமாயிருந்தது. ஆச்சிக்கு துணையா படுக்கவரும் ராசன் அவ்விடத்திற்கு வந்து "ஏன் ஆச்சி இன்னும் பஸ் வரேல்லையேணை?" என்றான்.

"ஏடே... உனக்குத் தெரியுமே ஒரு பழமொழியிருக்குது... பாவியார் போற இடம் பள்ளமும் திட்டியுந்தான் எண்டு. எந்த நாளும் நான் வீட்டில இருக்கேக்கை மினிபஸ்ஸும், சீ.ரி.பி. பஸ்ஸும் அடிக்கடி கோண் அடிக்கக் கொண்டு போட்டி போடு மாப்போல ஓடித்திரியிறதுகள்... இண்டைக்கு..."

சொல்லி முடிப்பதற்குள் அசைந்து அசைந்து ஒரு மினி பஸ் வந்தது. பஸ் ஸ்ராண்டில் இருந்த பலரும் முண்டியடித்துக்கொண்டு வரவே தெரிந்த — துஅது கலியாண வீட்டுக்கு ஓடுற ஸ்பெசல் பஸ் எண்டு.

"இண்டைக்கு கலியாண வீட்டு நாளெல்லே"

பஸ் ஸ்ராண்டடியில் ஒரு குரல் உப்படிக் கூறியது ஆச்சிக்குக் கேட்டது.

சீ! இண்டைக்கும் ஐயாயிரம் ரூபாய் எடுக்க முடியாமல் போய்விடுமோ வெண்டு ஆச்சியின் மனம் ஊசலாடியது. தூரத்தில் ஒரு சீ.ரி.பி. பஸ்ஸின் கோண் அடித்த சத்தம் கேட்டபோது பஸ் ஸ்ராண்டில் நின்ற பிரயாணிகள் பாக்குகளையும் தூக்கிக் கொண்டு ஆயத்தப்படுத்தவும் சீ.ரி.பி. பஸ்வந்து நிற்கவும் சரியாகவிருந்தது. எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு போய் கொண்டக்டரிடம் ரிக்கற்பெற முயற்சித்தனர். ஆச்சியைப் பற்றிக் கவலைப்பட யாருமே முன்வரவில்லை.

ஆச்சி பொல்லையும் ஊன்றிக்கொண்டு "கிழங்கு அடுக்கினமாதிரிக் கிடக்குது. உதில நான் என்னெண்டு போறது? எண்டு மனம் சலித்துக்கொண்டிருக்கும் போது ஆச்சியைப் பற்றிக் கவலைப்படாது பஸ்ஸின் மணியை கொண்டக்ரரர் அடிக்க பஸ் கிளம்பியது.

"இந்தக் கிழடிக்கு யார் உதவி செய்யப்போகினம்? அது சரி, நான் ஏன் மற்றையவையைக் குறைசொல்லுவான், நான் பெத்ததுகளே பெத்த தாயைப்பற்றி ஒரு நினைவும் இல்லாமல் வெளிநாடுகளில் இருக்குதுகள்..."

இப்படி ஆச்சியின் சிந்தனைகள் ஓடிக்கொண்டிருந்தன.

அரை மணித்தியாலம் கழிய இன்னொரு பஸ் வந்தது. ஆச்சி ஒருமாதிரி அதில் ஏறிக்கொண்டா. ஒவ்வொரு சென்றியாய் தாண்டிப் போய் கூழாவடி சென்றியொன்றில் பஸ் நின்றது. கொண்டக்ரர் எல்லோருக்கும் உரக்க குரலில் "இதிலை எல்லோரும் இறங்கவேணும். இல்லைவிட்டால் பஸ்ஸையே கொண்டுபோக விடமாட்டான்கள்" எண்டு கட்டளையிட்டார். ஆச்சியைத் தவிர சகலரும் இறங்கி கியூவில் சென்றனர். இரண்டு ஆமிக்காரர் பஸ்ஸுக்குள்ள ஏறி, "ஆச்சி கோவிதானே?" எண்டு மிகவும் செல்லமாக விசாரித்தனர். ஆச்சிக்கு விளங்கவும் இல்லை: அக்கடன் காதும் சரியாகக் கேட்கவில்லை. "நானும் இறங்க வேணுமோடா மோனை...? உங்கை பாங்குக்கு ஒருக்கா வரட்டாம். இந்த ஐயாயிரம் எடுக்க வெண்டெல்லே போறன்" என்றாள். ஆச்சியின் கதையைப் பாசத்துடன் கேட்பது போல நின்று கேட்ட ஆமிக்காரர்கள் சிரித்துக்கொண்டே இறங்கினர். பஸ் புறப்பட்டுச் சென்று இறங்கிய பயணிகளையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. பஸ்ஸுக்குள் "உவன்கள் உப்பிடித்தான்: சும்மா இறக்கி எங்களை அலக்கழிக்கிறது" இப்படிப் பல அபிப்பிராயங்கள் பரிமாறப்பட்டன...

பஸ் தட்டாதெருச் சென்றியில் பயணிகளை இறக்கி ஏற்றிக்கொண்டு மீண்டும் புறப்பட்டு யாழ் பஸ் நிலையத்திற்குப்போய் நின்றது. செல்லம்மா ஆச்சியும் பஸ்ஸை விட்டு இறங்கி அங்குமிங்கும் பார்த்தா. எந்தப்பக்கம் பாங்குக்குப் போவதென்று தெரியாமல் முழிச்சா.

(X ஆம் பக்கம் பார்க்க)

சஞ்சீவி

## சிறு கதைகள்

# பதவி உயர்வு

'லோகாம்பிகையின் அன்புக்கணவர் சுந்தரராஜன்...' என்று தொடங்கிய கண்ணீர் அஞ்சலி அது.

லோகாம்பிகையின் கணவர் என்பது லோகம் அறிந்த சங்கதிதான்; அவர் சீக்கிரமே இவ்வுலக பந்தத்தை அறுத்து ஏகிடுவார் என்பது கூட எதிர்பார்த்த ஒன்றுதான்.

ஆனால்...!!

பாதுகாப்பு பணியில் உள்ள வீரர்கள் கடமையில் இருந்து கொண்டே அவர்களின் தீரச் செயலினால் வீரமரணம் அடைந்துவிட்டால் இறந்த பின்பு உடனேபதவி உயர்வும் பாராட்டும் கிடைப்பது பற்றி பத்திரிகை வாயிலாக நாம் அறிந்ததுண்டு.

இத்தனை நாள் வெறும் கணவராக மட்டும் இருந்த சுந்தரராஜன் — வேண்டாத தொல்லையாக இருந்த சுந்தரராஜன்—நேற்று இறந்ததும் அன்புக் கணவர் என்று பதவி உயர்வு பெற்றிருக்கிறார்.

பாவம் சுந்தராஜன்; கடைசி நாள்களில் படாத பாடுபட்டுவிட்டார்.

ராணுவ நடவடிக்கையின் போது ஊரெல்லாம் திரண்டு வன்னிக்குப் படை எடுத்த வேளை மனைவி லோகாம்பிகையும் மகள்,பேரப்பிள்ளைகளுடன் புறப்பட்டு விட்டாள். எவ்வளவோ நிர்ப்பந்தித்தும் அவர்களுடன் போக மறுத்துவிட்டார் சுந்தரராஜன்.

"நான் பிறந்து வளர்ந்த மண். நான் பாடுபட்டு உழைத்துக் கட்டிய வீடு. சொந்த மண்ணிலேயே அகதியாக வாழ்வதிலும் பார்க்க, சொந்த வீட்டில் செத்து மடிந்தாலும் கவலை இல்லை. நீங்கள் ஓடித்தப்புங்கோ" என்று கண்ணீர்மல்க விடை கொடுத்ததே அன்றி, அவர் அங்கேயே தங்கிவிட்டார்.

அந்தக் காலத்தில் அரசாங்கத்துக்குவிசுவாசமாக உழைத்ததன் பரிசாக அவருக்குக் கிடைக்கும் மூவாயிரத்து ஐந்நூறுரூபா பென்சன் பணம் அவர் காலம் கழிக்கப் போதுமானதாக இருந்தது. சமைப்பது முதல் குளிப்பது வரை எல்லாவற்றிலும் ஒத்தாசையாக இருந்தது அடுத்த வீட்டு 'வலிகாமத்து' சனங்கள். தாம் வந்தேறு குடிகள் தாம் என்றாலும் கண்ணியமான குடும்பம்.

அன்புத் துணைவியும், செல்வமகளும் பேரப்பிள்ளைகளும் விட்டுப் பிரிந்த பின்பு தனிமையும் ஏக்கமும் அவர் ஆரோக்கியத்தை சிறுகச் சிறுக தின்றுவிட்டது.

வரவர உடல் மெலிந்து மனமும் தளர்ந்து நடைப் பிணமானார். ஒரு நாள் கிணற்றடியில் வழுக்கி விழுந்தவர் பின்பு எழுந்திருக்கவே இல்லை; படுத்த படுக்கை தான்.

வன்னியில் இருந்து திருகோணமலைக்குப் போய், மகளும் கணவனுமாய் குடியிருக்கும் வீட்டில்தான் லோகாம்பிகை தங்கியிருந்தாள்.

அடுத்த வீட்டுக்காரர் அனுப்பிய கடிதம் கண்டதும் சிறிது துடித்தது மகள் தான்.

"அவருக்கும் சர்க்கரை வியாதி, பிள்ளைகளும் பள்ளிக்கூடம் போகிற பிள்ளைகள். நான் என்ன செய்ய? நீங்கள் போய்வாருங்கோ" என்று தாயை மட்டும் அனுப்பிவைக்க மகள் பட்டபாடு!

மூன்று நான்கு கடிதம் அனுப்பியும் பதில் இல்லை. பாஸ் கிடைக்கவில்லை என்றும், கப்பல் இல்லை என்றும் இப்படியே காலம் கழிந்தது. கடைசியில் நான்கு மாதத்தின் பின் ஒருநாள் 'திடுதிப்' பென்று லோகாம்பிகை வந்து இறங்கினாள்.

திருகோணமலையில் மகள் பேரப்பிள்ளைகளுடன் உல்லாசமான சீவியம். வேளா வேளைக்குச் சாப்பாடு; இடைக்கிடை கோயில்குளம்; மாலை வேளைகளில் ரி. வி. என்று சுகமாகக் காலம் கழித்த லோகாம்பிகைக்கு நாடும் வீடும் கசத்தது.

"எங்களோடை கூடவும் வராமல், வீட்டைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு ஏன் இந்த மனுஷன் உயிரோடை இருந்து கழுத்தை அறுக்குது" என்று புறுபுறுத்தபடி ஆன மட்டும் திட்டித் தீர்த்தாள்.

ஏதோ [illegible] அவரைக் குளிப்பாட்டவோ, விரும்பிய உணவைத் தேடிக் கொடுக்கவோ அவளுக்கு 'நேரம்' வாக இருந்தது.

"இந்த மனுஷன் மண்டையைப் போட்டிட்டுது எண்டா கரைச்சல் இல்லை. நான் அவள் பிள்ளையோட போய் 'மலை'யிலை சீமாட்டியாக வாழலாம்." என ஏங்கலானாள்.

அருகில் உள்ள முருகன் கோயிலுக்கு அநுதினம் செல்வாள். "அவருடைய சீவனை முடித்து எனக்கு விமோசனம் கொடு முருகா" என மனமுருக வேண்டி நேர்த்தி வைத்தாள்.

அவளின் வேண்டுகோளுக்கு இறைவன் செவிசாய்த்து விட்டானோ என்னவோ!

அன்று குடிக்கத் தண்ணீர் எடுக்கக் குனிந்தவர் கால் தடுமாறிவிட, நினைவு தப்பி இப்போது ஆறுநாளாய்க் கட்டிலில் அனுங்கிக் கொண்டு......

தலைமாட்டில் சோகமே உருவான லோகாம்பிகை நலம் விசாரிக்க வந்த ஆண்களும் பெண்களுமாய் கூடம் நிறைந்த கூட்டம்.

சுந்தரராஜன் கண்களை லேசாக விழித்துப் பார்க்கிறார். அருகில் இருந்த லோகாம்பிகை 'என்னப்பா?' என்று வாத்சல்யத்துடன் வினவுகிறாள்.

சுந்தரராஜன் 'நா' எழவில்லை பேசமுடியாமல் 'நா' இறுகிக் கிடக்கிறது: கண்ணோரங்களில் முத்து முத்தாய் உருண்டோடும் கண்ணீர் துளிகள். ஏதோசொல்ல உன்னியும் முடியாமல் கையை மட்டும் ஏதோ உருட்டுவதுபோல சைகை காட்டினார்.

லோகாம்பிகைக்கு விஷயம் ஓடி விளங்கிவிட்டது. முன்பு ஒரு முறை சுந்தரராஜன் ஓர் உருண்டை பவுண் கொடுத்தது "இது என்ர அந்திம காலத்துக்கு தேவை என்றால், இதை விற்று என்னை' நவலோக ஆஸ்பத்திரிக்கோ இல்லை அவசியம் என்றால் இந்தியாவில் அப்பலோ ஆஸ்பத்திரிக்கோ கொண்டுபோய் வைத்தியம்செய்ய வேணும்" என்று கூறியிருந்தார்.

"நான் சாகக் கூடாது, சாக விருப்பமில்லை. பதினாறு வயசிலை 'டென்மார்க்' போன போடியன் இப்ப முப்பது வயது மாப்பிள்ளை.

**- புலோலியூர் செ. கந்தசாமி -**

அவனையும் அவன் பிள்ளைகளையும் நான் சாக முன்னம் பார்க்க வேணும்" என்றும் சொல்லிருந்தார்.

இது லோகாம்பிகைக்கு புரிந்து விட்டது.

மனுஷன் என்ன கையை உருட்டிக் காட்டுவது என்று அங்குள்ளவர்கள் ஆளை ஆளைப் பார்த்து முழிக்கிறார்கள்.

"அது ஒண்டுமில்லை. அவருக்கு மோதகம் எண்டா கொள்ளை பிரியம். தான் சாக முன்னம் மோதகம் சாப்பிட வேணுமாம். அதுதான் கையை உருட்டிக் காட்டு

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் எய்ட்ஸ்! என்றும் நிரந்தரமா?

பகுதி 2

வெவ்வேறு பிரதேசங்களில் HIV வைரஸைப் பெறும் மக்களின் பழக்கவழக்கங்கள் ஆய்வுசெய்யப்பட்டன. வாழ்க்கையில் நூற்றுக்கணக்கான பாலியல் துணைகளை கொண்டிருந்தவர்கள் கூட, 'எய்ட்ஸ்' பீடித்ததும் ஊசி போட்டுக்கொண்டதையும் இரத்தம் ஏற்றியதையும் சாட்டாக முன்வைக்கிறார்கள். எனினும் தொடர்ச்சியான ஆய்வுகள் ஓரளவுக்கு சரியான தகவல்களைத் தரவே முனைந்திருக்கின்றன.

**ஒவ்வொரு நாட்டிலும் நூறு நோயாளிகளில்...**

ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள 100 நோயாளிகளை எடுத்துக்கொண்டால் அவர்களில் எத்தனை பேர் எவ்வாறு நோயைப் பெற்றனர் என்பதைக் கணித்து தகவல்களை வெளியிட்டுள்ளனர் ஆய்வாளர்கள். எல்லா நாடுகளிலும் சரியான புள்ளி விவரங்களைத் திரட்ட முடிவதில்லை. எல்லா நோயாளிகளும் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதில்லை. அவர்கள் தமது சரித்திரத்தைப் புட்டுவைப்பதுவும் இல்லை.

அமெரிக்காவில் 100 பேரில் 50 பேர்வரை ஒத்த பாலாருடன் கொண்ட பாலியல் தொடர்புகள் மூலமே HIV தொற்றைப் பெறுகின்றனர். ஆண் — பெண் உறவில் 13 பேரும் போதைப் பொருள் பாவனையில் ஊசிகளை பரிமாறுவதன் மூலம் 33 பேரும் குருதிப் பரிமாற்றம் மூலம் இருவரும் பாதிப்பை பெற்றிருக்கின்றனர்.

தெற்கு ஆபிரிக்காவில் HIV வைரஸை கொண்டிருக்கும் 100 பேரை எடுத்துக் கொண்டால் இவர்களில் 80 பேர் ஆண் — பெண் உறவின் மூலமே வைரஸைப் பெறுகிறார்கள். ஒரே பாலாருக்கிடையேயான உறவில் 7 பேரும், தாயிடமிருந்து பிள்ளைக்கு எனப் 13 பேரும் நோயைப் பெறுகிறார்கள். அங்கு இரத்தம் ஏற்றுவதனால் நோயினைப் பெறுபவர்கள் ஒரு வீதத்தினர் மட்டுமே எனலாம்.

ரஷ்யாவை எடுத்துக் கொண்டால் அங்கே ஒத்த பாலாரிடையேயான உறவுகளில் 64 பேரும், ஆண் — பெண் உறவில் 32 பேரும் நோயைப் பெறுகிறார்கள். ஏனைய 4 பேரில் குருதிப் பரிமாற்றம், தாயிடமிருந்து பெறும் பிள்ளைகள், போதைப்பொருள் பாவனையாளர்கள் ஆகியோர் அடங்குகின்றனர்.

பிரேசிலில் 34 பேர் ஆண் — பெண் உறவிலும், 34 பேர் தமது பாலாருடனான உறவிலும் 25 பேர் போதைப் பொருள் பாவனையிலும் மீதிப்பேர் இரத்தம் ஏற்றுதல் அல்லது கர்ப்பம் மூலமும் நோயை வாங்கி விடுகிறார்கள்.

சீனப் பிரதேச தகவல்கள் இவற்றுக்குப் பொதுவாக முரண்படுகின்றன. அங்கு 60 பேர் போதைப்பாவனை மூலமே நோயைப் பெறுகிறார்கள். 20 பேர் இரத்தம் ஏற்றுதல் மூலம் நோயைப் பெறுகிறார்கள். மீதிப்பேரே உடல் உறவுகள் மூலம் நோயைப் பெற்றமைக்கான ஆதாரங்கள் தென்படுகின்றன.

எதற்கும் இயன்றவரை இரத்தம் ஏற்றவேண்டிய தேவை எழுவதைத் தவிர்ப்பது — விதிவசமாய் HIV சந்திப்பதை தவிர்க்க உதவும்.

பாவித்த ஊசிகளைப் பயன்படுத்துவதும் உகந்தது அல்ல. பாவித்ததும் வீசிவிடக்கூடிய ஊசிகள் தாராளமாகக் கிடைக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி அழித்துவிடுவது சிறந்தது.

பாவித்த ஊசிகளை அழிக்காதபோது அவை மீண்டும் பொதிசெய்யப்பட்டு விற்பனைக்கு வந்ததாக ஒரு பத்திரிகைத் தகவல் அண்மையில் வெளியாகி இருந்தது. ஆனால் நீண்ட காலம் ஊசியில் ஒட்டிக்கொண்டு HIV தாக்குப் பிடிக்குமா என்ற கேள்வியும் எழுகிறது.

**தேடிப் பெறும் நோய் இது**

உறவுகள் மற்றும் போதை ஊசிகளை மாற்றி மாற்றிப் பாவிப்பவர்கள் நோயை வாங்குவதைத் தடுப்பது

> "உலகில் எய்ட்ஸ் என்றும் நிரந்தரமாகி விடுமா?" என்ற தலைப்பில் கடந்த வாரம் வெளியான கட்டுரையின் இறுதிப் பகுதி இது.

கடினமே. எனவே தான் இதைத் தேடிப்பெற்ற (Aquired) நிர்ப்பீடனம் (Immune) குறைபாட்டு (Deficiency) அறிகுறிகளைக் கொண்டநோய் (Syndrome) என்கிறார்கள்.

HIV வைரஸ் ஒருவரைத் தொற்றிய பின்பும் பல வருடங்கள் உறங்கு நிலையில் இருப்பதுபோல் தெரிகிறது. எனவே அது எங்கே எவரிடம் இருக்கிறது என்பதைக் கண்ணால் கண்டு திருப்திப்படுத்திக்கொள்ளமுடியாது. இலங்கையைப் பொறுத்தவரை இனியும் வெளிநாடு போய்த்தான் HIV ஐ கொண்டுவரல் வேணடும் என்ற நிலைமை இல்லை. அவரவர் மருத்துவ விஞ்ஞான உலகினை நம்பியிராது தம்மைத்தாம் பாதுகாத்துக்கொண்டால் சரி.

முற்றிலும் விசுவாசமான ஒரேயொரு துணையை மட்டும் தேடிக்கொண்டால் அன்றி—ஊகங்கள், நம்பிக்கைகள் மூலம் மோசம்போய்க் கொண்டிருந்தால் — இந்தச் சமுதாயத்திலும் HIV புகுந்து விளையாடும் காலம் வெகு தொலைவில் இல்லை.

முன்பெல்லாம் விபத்திலோ—துப்பாக்கிச் சூட்டிலோ ஒருவர் இறந்துவிட்டால் அது தலைப்புச்செய்தி ஆகிவிடும். உலகம் முழுதும் வாய்பிளந்து பரிதாபமாகப் பார்க்கும். யுத்தங்கள் வெடித்து இரத்தங்கள் சிந்தத் தொடங்கி பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. மரணம் மலிந்துவிட்டது. மரணம் வாசலுக்கு வந்து நின்றபோதெல்லாம் யாரும் பெரிதாக அலட்டிக் கொள்ளாத அளவுக்கு அது பழக்கப்பட்டுப் போனது.

காயம்பட்டவனை, அவயவங்களை இழந்தவனைச் சந்திப்பது அருமையாக இருந்த காலம் மலையேறி விட்டது. இப்போது இழப்புக்கள் சர்வசாதாரணம் என்ற மனநிலை பிறக்கிறது.

இதுபோனத்தான் மெல்ல மெல்ல ஊடுருவும் எய்ட்ஸ் சமுதாயத்தில் அழிவுகளைக் கொண்டுவரும்போது அதுவும் பழக்கப்பட்டுப்போகலாம். இன்று 4 பேரில் ஒருவருக்கு HIV உண்டு என்று கூறப்படும் நாட்டில் மீதி 3 பேரும் சும்மாவா இருக்கப் போகிறார்கள்? அல்லது மரணத்துக்குப் பயந்து நாட்டை விட்டு ஓடவா போகிறார்கள்?

விரைவில் 2 பேரில் ஒருவருக்கு எய்ட்ஸ் என்ற நிலைமை வந்துவிடும். மரணங்கள் பழக்கப்பட்டுப் புள்ளி விவரங்களைக் காட்டும் ஊசி முனைகள் வேகமாக ஏறும். போதனைகள் தீவிரமடையும். எல்லாம் அடிப்படையில் தனித்தனி நபரை போய் உசுப்பும் வரை வீண் வாதங்களே.

**ஆய்வுகளின் நிலை என்ன?**

விஞ்ஞானிகளின் ஆய்வாளர்களின் இன்றைய நிலைப்பாடு என்ன? மருந்து கண்டுபிடிக்கப்படும் முயற்சி என்னவாயிற்று?

எய்ட்ஸ் நோய்க்கு மருந்தொன்றைக் கண்டுபிடித்து HIV தொற்றிய அத்தனை மில்லியன் மக்களையும் தேடிப்பிடித்து அனைவருக்கும் அதனைக் கொடுத்து நோயை உலகில் இருந்து ஒழிப்பது என்பது இப்போதைக்குச் சாத்தியமாகத் தெரியவில்லை.

தடுப்பூசி ஏற்ற ஒரு தடுப்பு மருந்தை (Vaccine) கண்டு பிடித்துவிட்டால் அம்மை போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தியதைப் போன்று இதனையும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரலாம் எனக் கருதப்படுகிறது.

## தடுப்புமருந்து கண்டுபிடிக்கும் முயற்சி வெற்றியளிப்பதாக இல்லை

பல குழுக்களாக விஞ்ஞானிகள் தடுப்பு மருந்தொன்றைக் கண்டுபிடித்து வெற்றிகரமாகப் பிரயோகிக்க முயன்று கொண்டே வருகின்றனர். சில தடுப்பு மருந்துகள் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் எவரும் வெற்றி பெற்றமைக்கான சமிக்ஞையினை அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற உலக AIDS மகாநாட்டில் தரவேயில்லை.

சடந்த மாதம் கலிபோர்னியாவின் ஒரு நிறுவனம் சுமார் ஏழாயிரம் பேருக்குத் தடுப்பு மருந்தொன்றைக் கொடுத்து ஆய்வுகளை மேற்கொள்ளும் திட்டமொன்றை முன்

**மு. சிவநேசன்**

வைத்து இருந்தது. இவ்வாய்வுக்கு விரும்பி உடன்படும் மக்களில் HIV தொற்றாதவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களுக்கு வலு இழக்கச் செய்யப்பட்ட HIV வைரஸ்களே ஊசி மூலம் ஏற்றப் படல் வேண்டும்.

மருந்து ஏற்றப்பட்டவர்கள் பரிசோதனைக் காலத்தில் தம்மைப் பகடைக்காய்களாக எண்ணிச் செயற்பட்டு விடுவார்களா? தலைகீழாக நடந்து மருந்து வேலை செய்யாததால் நோயை வாங்கி விடுவார்களா? அல்லது அவதானமாக நடந்து நோயைப் பெறாமல் தடுப்பு மருந்துக்கு ஒரு போலிக் கௌரவத் தைப் பெற்றுத் தந்து விடுவார்களா? அல்லது தடுப்பு மருந்தில் உள்ள HIVயில் இருந்தே எய்ட்ஸ் நோயை பெற்று விடுவார்களா?— என்றெல்லாம் சிந்திக்க வேண்டிய நிலைமை எழுகிறது.

HIV யில் காணப்படும் 'gp120' என்ற பகுதிதான் தடுப்பு மருந்தின் முக்கிய இடத்தைப் பிடிக்கப் போகிறது. இதுவே வைரஸ் (HIV) நமது உடற்கலங்களை அணுகத் துணை போகிறது. இது உடலில் செலுத்தப்பட்டு உடல் இதனை எதிர்க்கும் எதிரணுக்களை உற்பத்தி செய்யக்கூடுமாயின் தடுப்பு மருந்து ஏற்றும் முறை வெற்றி கண்டுவிடும்.

ஆனால் அடுத்த சிக்கல் எழுகிறது. உற்பத்தியாகும் எதிரணுக்கள் அல்லது பிற பொருளெதிரி இரத்தத்தில் மிதக்கும் HIV வைரஸ்களை அழிக்கக்கூடும் ஆனால் அது ஏற்கெனவே HIV தொற்றிய உடற்கலங்களைச் சீர்செய்ய மாட்டாது.

மேலும் HIV, கலச் சவர்களினூடே கலத்துக்குக் கலம் தாவும் வல்லமை கொண்டது என்பதால் அது இரத்தத்திலுள்ள எதிரணுக்களினால் தாக்கப்படாமல் தப்பிவிடவும் கூடும். அப்படியான நிலைமைகளில் தடுப்பு மருந்து பயனற்றதாகி விடலாம். அல்லது கலங்களின் போர் HIV வைரஸ்களை வேட்டையாடக்கூடிய வலுமிக்க தடுப்பு மருந்துகளை இனிமேல்தான் கண்டுபிடிக்க வேண்டி ஏற்படலாம்.

பலகம்பனிகள் தடுப்புமருந்து ஆய்வில் போட்டி போட்டுக் கொண்டு களத்தில் குதித்திருக்கின்றனர். HGP—30W என்ற தடுப்பு மருந்தில் HIVயின் புரதப்பகுதி பயன் படுத்தப்பட்டுள்ளது. இதை உடலில் செலுத்தினால் உருவாகும் எதிரணுக்கள் முழுமையான HIV வைரஸ்களைத் தாக்கிவிடுமா என்பதே மீண்டும் எழும் கேள்வி ஆகிறது.

தடுப்பு மருந்தில் பயன்படுத்தப்படும் வைரஸின் பாகம் நேர்குடல், மலவாசல், பாலுறுப்புக்கள் போன்றவற்றின் ஈரலிப்பான சுவர்களினூடாக ஊடுருவித் தாக்கும் வல்லமையைப் பெற்றால் மட்டுமே உடலுக்கு உள்ளே வரும் HIV வைரஸ்களை அவ தடுத்துவிட முடியும். அ இயலாதபோது தடுப்பு மரு தேற்றும் திட்டமும் தோற்ப்போய் விடலாம்.

போலியோ, அம்மை போன்ற நோய்களை ஒழிக்க வலு இழக்கச் செய்யப்பட்ட அதே இன வைரஸ்கள்தான் பயன்படுத்தப்பட்டன. ஆனால் HIV வைரஸை அவ்வாறு பயன்படுத்துவதில் சிக்கல் எழத்தான் செய்கிறது.

வலு இழக்கப்பட்ட HIV வைரஸைப் பலருக்கு தடுப்பு மருந்தாக ஏற்றும் போது அவர்களில் நோய் எதிர்ப்புச் சக்தி அற்ற அல்லது குறைந்த பலரும் எய்ட்ஸ் நோயைப் பெற்று விடக்கூடும். எனவே தடுப்பு மருந்தின் வலு ஆளுக்கு ஆள் வேறுபடலாம்.

பலருக்குப் பாதுகாப்பான தடுப்பு மருந்து வேறு சிலரை நோயிலிருந்து பாதுகாக்கத் தவறி—நோயைப் பெற வழி கோலிவிடும். எல்லாரையும் பாதுகாக்கும் அளவுக்கு மருந்தின் வலுவைக் கூட்டப் போனால் அதுவே சிலரை

(XI ஆம் பக்கம் பார்க்க)

## 'பிறிற்றோன்!'

கத்தரி தக்காளி கதலி
கடல் நண்டுறாலோடு சூடை
மெத்தவே தின்கின்ற வேளை
மெல்லமாய்ச் சொறிந்திடத்
தோன்ற
வைத்தியர் வீட்டில் ஒரு கேள்வி
'வித்தியாசமாய் என்ன, நீர்
உண்டீர்?'
இ(த்)தனை நான் அங்கு சொல்ல
எடுத்தடித்தார் ரெண்டு
'பிறிற்றோன்!'

— நோயாளி —

## இடரும் தொடரும்

கடலிலிருந்து அலைகள்
கரையைத் தேடி அவசரமாய்
விரைவதைப் போல்
மனதின் ஆழத்தில்
புதைந்துள்ள ஏக்கமதை
எடுத்துவிட
துடிக்குது மனது — எனினும்
ஏமாற்றமே!

வானிலே கலைந்தோடும்
மேகங்களாகிப் போனது
நேற்றைய நம் வாழ்க்கை
இன்றும் அவ்வாறு தான்

நாளைய விடியலுக்காய்
நம்பிக்கையை
நண்பனாகக் கொண்டு
நகரும் வாழ்க்கை...
நம்பிக்கையே நமக்கு
தூரமாகும் போது?...

இடிந்து போன
இதயங்களோடு இடம்மாறி
இடம் வந்தும்
இடிபாடுகளுக்குள்
இடறும் பயணமாய்
வாழ்க்கை
தொடர்கிறது...!

— இணுவை றொட்றிக் —

## உயிர்தெழ வைத்திடுமா?

வன்முறைக்குள் வீழ்ந்து,
வாழ்வைத் தொலைத்து,
புழுதியில் தொலைத்த
நிஜத்தின் முகத்தினை
வான் முகட்டில் தேடி
வாழாக் கிடப்போரே!
பாதங் கடந்த
பாதையைப் பாருங்கள்!

மீதியாய் கிடப்பவை?...
மிதிவெடிகளும்
'மிக்' போட்ட குண்டுகளும்
மீளத் தோண்டுகின்ற
மனிதப் புதைகுழியும்.

பூவொன்றின் மார்பிலே
முகம் புதைத்த வண்டொன்று
பூகம்ப ஒலிகேட்டு
பூமடியில் மடிந்த நிலை.

எதிர்கால கால்களுக்கு
நிகழ்கால கடைகளிலே
'செப்புக்கால்' வியாபாரம்
சிறப்பாக நடக்கும் நிலை.

பள்ளிவாசற் படிகடந்து
இராமன் புகுவதற்கு
சம்மட்டி பிக்கானுடன்
பேரணிகள் செல்லும் நிலை.

சல்மான் ருஷ்டிக்கும்
தஸ்லீமா நஸ்ரூதீனுக்கும்
சாத்தானின் ஊழியரால்
அஞ்ஞாத வாச நிலை.

நாசாவின் 'நற்பணியும்';
அணுவெடிச் சோதனையும்;
கம்பியூட்டர் சாவிகளும்;
இன்ரர்நெற்றின் விந்தைகளும்

மனிதத்தைப் புதைத்துவிட
புதைகுழிகள் வெட்டிடுமா...?
மரணித்த மனிதத்தை
உயிர்த்தெழ வைத்திடுமா?...

— இராகன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்மணி நீ செம்மணியிலா?

முந்தித் தவம் இருந்தேன்
முந்நூறு நாள் சுமந்தேன்
இந்நாளில் என் கண்ணே
பன்னாளாய்த் தேடுகிறேன்.

பள்ளிக்கு நீ துள்ளிப் போகையிலே
அள்ளி முத்தம் ஈந்ததை மறப்பேனோ?
வெள்ளிக் குத்துவிளக்காய் விளங்கி
உள்ளத்தில் உயிரானாய் மறப்பேனோ?

முத்தத்தில் முழுநிலவாய் முன்னிற்பாய்
கத்தும் கடலானாய் கனியானாய் பாரினிலே
சொத்துக்கு நீயொரு முத்தென்றிருந்தேனே
பத்தும் பலதும் சொல்கிறார் என்செய்வேன்?

புதையல்கள் தேடுவதும் புதைகுழியினிலே
விதைகள் இடுவதும் அக்குழியினிலே தான்
பயிர்கள் வைப்பதற்கும் குழிகள் பலதேவை
உயிரே உனையும் அங்கேதான் இட்டனரோ?

தண்ணளிச் செல்வமாய் தரணியில் உலவினாய்
பண்ணிய புண்ணியம் பயன்தரவில்லையா?
கண்ணியமில்லாக் கயவா செயல்தானா?
கண்மணி நீ செம்மணியிலா?

— மலர்விழி —

## மனிதனாய் வாழ்ந்திடடா

என் மௌனக்கதவுகளை இறுகப்பூட்டிக்கொண்டு
சிந்தனை யறைக்குள் சிறைப்பட்டுக் கொண்டேன்.
அந்தனை செய்ததும் வாழ்த்துக்கள் தந்ததும் கனவாயாகிட
நிந்தனை யென்றுணர்ந்தி ன்றெந்தனை யிழந்தேன்.

கற்பனை வானில் காதல் சிறகடிக்கச் சொப்பனத்தின்
உற்பவத்துக்காய் காத்திருந்தும் கண்களுறங்கவில்லை.
அற்பகுண ஆகாதெல்லாம் இந்த மனிதனிடம் தானென்று
சொற்பநேரத்திலுணர்ந்தே சிந்தனையைக் கட்டவிழ்த்தேன்.

நெஞ்சு கொதிக்குதடா நினைப்பொழிந்து போகுதடா
வஞ்சகனாய் நீயும் வண்மையற்றுப் போனதனால்
பஞ்ச மென்மையதாய் பேச நீ வேண்டாமடா
கெஞ்சியுனைக் கேட்பதெல்லாம் ''மனிதனாய் வாழ்ந்திடடா''

சுயநலம்தான் மனிதவாழ்வின் சொரூபமென்றால்
தியாகச்செய்கையை மறந்தும் சிதைப்பது நியாய(ே)மாடா?
மனிதா! உன் நேர்மைக்குணம் என்னடா?
இனியவை பெற்றுமறப்பது உனக்குப் புதியவையில் லைத்தானே

உன்னாசைபோல் ஆயிரம் செய்கைகளெல்லாம்
இன்பமாய் நன்மைகளெய்தலாம் யாவும் நுகரலாம்
நீரினில் குமிழியாய் நிலையற்றுப் போனபின்
பாரினில் நீயும் படுந்துயர் கொள்வாயடா.

— புதுவை திருநாவன் —

## "பெயர் என்ன?!"

அந்தி சாய்ந்து மங்கலான பொழுது — நான்
அவசரத்தில் மிதிக்கும் சைக்கிள் பழுது
உந்து கின்ற சாற்றதனை வென்று
உழக்குகின்ற காலில் வலி நன்று!

அலறுகின்ற ஆந்தை, புதர்க் காடு
அதனருகே பாழடைந்த வீடு
உதறுகின்ற மனத்தை ஆற்ற என்று
ஒடிவந்த அவனுருவம் 'குன்று'!

கண்டுஎனைப் பார்த்து அவன் சிரித்தான்
கதையிடையே சிங்களமும் கலந்தான்
உந்தன் பெயர் என்ன?'' எனக் கேட்டான்
உடல்பதறும் படியாகப் பார்த்தான்!

திறந்துகாட்டு ஐ.சியையே என்றான்
திடுக்கிடவே வைத்துவிட்டான் அன்னான்!
பிறந்ததினம் பார்க்க எனச் சொன்னான்
பிறகுதான் ''நான்தமிழன்'' என்றான்!

— கி. வாயுபுத்திரன் —

## சிவில் சேவன்ற்

அட்மிஷன்தா எனப் பெற்றோர் காவல்நின்றால்
அதிபருக்கு பழம்பேப்பர் படிக்கத் தோன்றும்
வெட்டுக்கூப்பன் எடுக்க சனங்கள் வந்தால்
வேர்க்கா மனேஜருக்கும் விசிறி கேட்கும்
கெட்டாவி விடுகின்ற பியோன் கூட
கோவைகளை கொடுங்களென்றால் முறைத்துப்பார்ப்பான்
பட்டென்று தாருங்கள் ஐயா என்றால்
பகலுணவு நேரமிது முடியா தென்பார்.

ஏஜியே தான்மேலே வாங்கும் ஏச்சால்
ஜியெஸ்ஸில் வள்ளென்று பாய, ஜியெஸ்
பேசாது அதைவாங்கி பியோன் மேலே
பிழைபிடிக்க, பியோன்மார் சனத்தை ஏச
மூதேசி எனச்சனங்கள் றோட்டில் போகும்
முழுக்குட்டை நாயின்மேல் கல்லை வீச
சேதாரம் உற்றந்த தெருநாய் பாய்ந்து
செல்கின்ற பூனைமேல் 'வள்வள்' என்னும்.

ஜனநாய கம்மென்ற அர்த்தம் எல்லாம்
ஐ சேவைக் காகவென்ற அர்த்தம் மேல்கீழ்
இனபேதம் இல்லையென்ற அர்த்தம் வேலை
இதயசுத்தி யோடென்ற அர்த்தம் பதவி
தனக்கல்ல சனத்துக் கென்றர்த்தம்; உண்மை,
தார்மீகம் என்கின்ற அர்த்தம்; எல்லாம்
மனங்கொள்ளா விடிவென்ன அர்த்தம்; நாங்கள்
மனிதர்கள் இல்லையென்று அர்த்தம்.

— ச. முகுந்தன் —

## "நண்பா, நானிங்கு நலமே(ா)?"

(11 - 07 - 1998 அன்று வெளியான ''வன்னியிலிருந்து ஓர் மடலுக்''கு மற்றொரு பதில். மடல் இது.

ஆசையோடாதரித்து
ஆன்புதந்த அருமைநண்பா!
'பாசை'யே புரியாதோரிடையே
நாமிங்கு படும்பாடு
நாய்கூடப் பட்டிராது.

என்னைவிட நீயங்குநலமாய்த்
தான்
நன்கிருப்பாய்.
ஏனெனில் அங்குவீசுவது
சுதந்திரக்காற்று; அது
''சுத்தமானது''
அச்சமாய் நாமிங்கு சுவாசிக்கும்
''அசுத்தக்காற்று''—அது
அழகானது; ஆபத்தானது.

வீட்டு நிலை நீகேட்டாய்;
''வீதிகளே'' இங்கில்லை
பாக்கு மரங்கூடப்
படுத்துவிட்டது பயந்துபோய்.

கற்பக தரு இன்று—தன்
''கற்பு''த்தறி பட்டுக்கிடக்கிறது
'பங்கரிலே'.

இரவிலே நம் கதைக்கேட்டுக்
களித்திருந்த சுமைதாங்கி
நம் கதை கேட்கா இடத்திற்கு
''காணாமல் போய்விட்டது''.

காளிக்கென்ன, அவளிருக்கிறாள்
நன்றாயிங்கு,
களியோ; 'கறியோ' வெனக்
கைகலப்பார் மத்தியிலே.

பாவம், ஆலமரம்தான்—தன்
''விழுதுகளை இழந்து''
வேதனைப் படுகிறது.

பள்ளி நிலைபற்றி
எழுத ஏதும் (!!) இல்லையடா
எண்ணக்கை விரல்போதும்
வரும் மாணவர்
எண்ணிக்கையை.

மூலைக் கொருமினிசினிமா
கொட்டில் கள் இங்குண்டு
'கேவாக்' கலரில் வந்த
நாடோடி மன்னன்
பார்த்தோமே
நினைவிருக்கா?

அதிசயமாய் இன்றுபல
புதுப்படங்கள் — 'நீலத்தில்'
காட்டுறாங்கள்
பாழாய்ப் போனவங்கள்!

சந்திக்குச் சந்தி
''சரக்குக்'' கடைகள்
'கிக்' கேத்திவிடக்
'கிளுகிளுப்பும்' கிடைக்கிறதாம்

இத்தனைக்கும் தப்பித்
தலைநிமிர்ந்து பார்த்தால்
நெத்தியிலே 'ஒட்டுறாங்கள்'
''போஸ்டர்கள்'' பலவிங்கு.

மொத்தத்திலே,
சத்தியமாய்ச் சொல்லுகிறேன்
சரியேயில்லை நிலைமையிங்கு!

அத்தோடு ஒரு விசயம்,
செம்மணியிலே ''புதையலாம்''
பார்க்கவேணும் ஒருக்காப்போய்
வந்து பிறகு வரைகின்றேன்
மடலுனக்கு.

அதுவரை—

அன்புடன்
''நண்பன்''

— யா. தென்றல் —

## சாராய தாசனுக்கு!

சாராய சகவாசமா? — உந்தன்
சாதனை நிதம் ரோட்டில் தவழ்ந்தூரலா?
ஆராய்ந்திடா தாடுறாய்! — இன்று
அருந்தியதே... கண்ணீராய் வரும் நாளையாம்!

போதைக்குள் தள்ளாடினாய் — உந்தன்
பொஞ்சாதி புள்ளைக்கோ ''பேயாகுவாய்''
வேதனை வெட்கம் பாராய் — கச்சை
விற்று; அக்காசில் உன் 'ஈரல் தின்றாய்'!

பானையின் வயிறு வாடும் — சேய்கள்
பசியையே சாப்பிட்டிளைத்துத் தூங்கும்.
பூனைபோல் மனிசி ஏங்கும் — இவை
புயலாக வைப்பவன் ''நீயே'';... ''பாவம்''!

கள்ளை மறப்பதற்காய் — இன்று
கசிப்படித்தேன் என்று தத்துவம் சொல்லு.
சொல்லித் திருத்த ஏலா (து) — உன்னை
''சுடலையில் திருத்துவேன்'' என்குதே கள்ளு!

போதையை வாழ்வென்று உன் — காசை
போத்தல் விசத்துக்கு இறைப்பவா கேளு!
பாதை தவறி மீண்டும் — போதை
பாதையை மாற்றுதே...! சேர்வியா ஊரு?

வெறிகொண்டால் காற்றும் புயலாம் — நீரும்
வெறிகொண்டால் பிரளயம் எனச் சீறுமாம்!
வெறியில் தீ... ஊழி நிறமாம் — நீயும்
வெறிகொண்டால் அணுகுண்டு புவிக்கேனடா?

— அருணன் —

## தேருவர் காணீர்!

ஆமான தொழி லில்லை
அரைக்காசுக் குழைப்பில்லை
பாமாலை ஏதுக்கடி சுந்தரீ
புகழ் வாழ்வும் ஏதுக்கடி?

காணி போன போக்காகி
கடை வீதி அளப்போர்க்கு
காற் சட்டை ஏதுக்கடி—சுந்தரீ
கழல் தானும் ஏதுக்கடி?

சொல்லொன்று செயலொன்றாய்
சபலத்து மதியோர்க்கு
பல்லொன்று ஏதுக்கடி—சுந்தரீ
பழி நாவும் ஏதுக்கடி?

சாய்ந் தாவத் தரையில்லை
சுயங் காட்ட விளக்கில்லை
மெய்வண்ணம் ஏதுக்கடி—சுந்தரீ
மறை நெஞ்சம் ஏதுக்கடி?

சொல் கேட்கச் சேயில்லை
சுகித் துண்ணத் துணையில்லை
பால் சாதம் ஏதுக்கடி—சுந்தரீ
பசி தாகம் ஏதுக்கடி?!

மெய்ஞ்ஞான போர்வையில்
மிருகமாய் நடப்போர்க்கு
பஞ்சாங்கம் ஏதுக்கடி—சுந்தரீ
புலனைந்தும் ஏதுக்கடி?

சாக்காடு போனாலும்
சிறை கூட்ட உறவில்லை
கெக்கட்டம் ஏதுக்கடி—சுந்தரீ
குலப்பேறும் ஏதுக்கடி?

வெங்காயத் தாள் போலும்
வெறுங் கூட்டு வாழ்விற்கு
சிங்காரம் ஏதுக்கடி—சுந்தரீ
சில நாளில் தேர்வரடீ!!

— மாவை வரோதயன் —

## விருத்தாப்பிய(ர்) விசனம்!

குரக்கன் புட்டுண்டு, கூழ் காய்ச்சிக் குடித்து — நிதம்
மரத்த உடம்பு; மனம் கவரும் கட்டுடலும் — ஊரில்
வடக்கன் பூட்டிநின்ற வண்டிற் சவாரி செய்து
மிடுக்காய் திரிந்திட்ட மகிழ்காலம் மீண்டிடுமோமா!
விடிகாலைப் பொழுதில் வயற்கிணற்றில் எல்லோரும்
கூடிக் கூத்தடித்துக்குளித்து — பின் தோட்டம் போய்
பாடுபட்டுழைத்து, பயன் கண்ட போதெல்லாம்
ஆடிய ஆட்டங்கள்! அதை மறக்க முடிந்திடுமோ?
அக்கால வழக்கம் அடுத்தடுத்து ''எட்டினையே''
பிற்காலம் பார்க்குமெனப் பெருமையுடன் பெற்றதுவும்
கோலாகல விழாக்கள்; கொடுந்துயரம்; கோயில் எங்கும்
ஆளாக இளைஞர் அணித் தளபதியாய் நின்றதுவும்
பகலவன் மேற்றிசைசாய, பனைமரத்துப் பதநீரை
அகமகிழ்ந்து அள்ளிமோந்து ஆட்டம் போட்டதுவும்
நிழ்காலக் கண்முன்னே நிழற்படமாய் தெரிகிறதே?
விதிவசத்தால் ''அவள்'' எனையே விட்டிறையை
அடைந்துவிட்டாள்.
மதி கெட்டு நானனுப்ப, மகிழ்வுற்று மறுதேசம்
கதியென்றே குடிபெயர்ந்தோர், கடைசிப் பொடிமட்டும்
எஞ்சி நிற்கிது—எனைப் பார்க்க!—என்பாடோ
நெஞ்சம் வெடித்து நிதம் கண்ணீர் வடிகின்றது!
இப்போ(து) புதிதாக இங்கே முளைத்திட்ட— ''ரெலிபோனில்''
''அப்பா சுகமா? அளவாகச் சாப்பிடுங்கள்!''
ஒப்புக்காய் கூறி ஒரு கொஞ்சம் பணமனுப்ப
இங்கே வீட்டில் அர்ச்சனைகள் குறைந்துவிடும்
அங்கிருந்து பணம் அனுப்பிவிடத் தாமதித்தால்
பொங்கியெழுந்து வீடு பூகம்பம் கண்டு நிற்கும்!—ஆம்
என்பேரில் வருகின்ற ஏதோ சில ஆயிரங்கள்
பொன்முட்டையிடும் வாத்தாய் என்மகனே எனைக்கருதி
இருக்க இடமும், இருவேளை உணவும் தர
கொடுக்கின்றதே புத்தி, கொடும் மறலி இங்கே வா!

— அனலையூர்ச் சேந்தன் —

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வெள்ளம்

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர்.' என்றார் புலவர். அன்பில்லாதவர் மற்றவரை மனிதர் என நினைப்பரோ? அவர்களின் செயல்கள் எல்லாமே தமக்குரிய சுகத்தையே நோக்கமாகக் கொண்டிருக்கும்.

அவர்களின் வாழ்க்கையில் அர்த்தமே இருக்காது. அடுத்தவர்களுக்காக தனது சுகத்தையோ பொருளையோ சற்றேனும் விட்டுக்கொடுக்கும் தன்மை அவர்களிடம் பிறக்காது.

சமுதாயத்துடன் ஒத்துப்போக அவர்களால் இயலாது. தன்னைத் திருப்திப் படுத்தி தன் சுகநோக்கங்களுக்காகவே வாழத் துடிக்கும் இவர்கள் அடுத்தவரையும் தமது திருப்திக்காகவே தமது வழி நின்று வாழ வரும்படிதான் எதிர்பார்ப்பார்கள்.

அன்பிலார் கூட அடுத்தவர்களுக்கு நிறைய உதவியும் செய்கிறார்கள்; அதுவும் தமக்காகவேதான். பெயருக்கும் புகழுக்கு ஆசைப்பட்டு மயங்கித் தமது செயல்களை விளம்பரப்படுத்தி இவர்கள் உதவி செய்வார்கள். இவர்களையும் செயல்களையும் உலகம் மிக விரைவாகவே இணங் கண்டு பழிக்கும்.

'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்றார் புலவர் மேலும்.

வேடனிடம் அகப்பட்ட புறாவைக் காக்க தன் தசையை அரிந்து தராசில் இட்டவன் சிபிச் சக்கரவத்தி— என்று கதை கேள்விப் பட்டிருக்கிறோம்.

நீரில் மூழ்கியோ, தீயில் அகப்பட்டோ தவிப்பவரைக் காக்கப் புகுந்துபோராடி தம் முயிரையே கொடுப்பவர்களைத் தினம் தினம் இன்றும் சந்திக்கலாம் சிபியின் கதை புதினமல்ல.

அடுத்தவர் துயர் கண்டு தம்மை மறந்து துடித்துச் செயலில் இறங்குபவர்கள் என்பை மட்டுமா? கொடுப்பர். தம்மை முற்றாகவே தருவர்.

*''அன்பிலார் எல்லாம் தமக்குரியர்*
*அன்புடையோர்*
*என்பும் உரியர் பிறர்க்கு.''*
*(அன்புடமை)*

*—0072—*

— அம்பிகைபாகன்

# இந்த வார இராசி பலன்

## [08 - 08 - 1998 முதல் 14 - 08 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| வி | சனி | | செ வெ |
| கே | இராசிச் சக்கரம் | | சூ புத |
| சந் | | | ரா |
| | | | |

மாற்றம்:

திருவோண நட்சத்திர மகர இராசியில் சந்திரன் நிற்கும். 9 – 8 – 1998 இல் கடக இராசிக்கு வெள்ளி மாறும். 12 – 8 – 1998 இல் கடக இராசிக்கு செவ்வாய் மாறும்.

ஆட்டைக்கடித்து, மாட்டைக்கடித்து, மனிதனை அழிக்கும் அளவு வளர்ந்து விட்ட அரசியல் பிரச்சினையை உலகத் தலைவர்கள் கூடி முடிவுக்குக் கொண்டுவராவிடில் அழிவுகள் பயங்கரமாக இருக்கும். மக்கள்படும் துன்பத்தை அரசியல் தலைவர்களால் தீர்க்க முடியாதா? சமயவாதிகளால் திருத்த முடியாதா? புத்திஜீவிகளால் தட்டிக் கேட்க முடியாதா? என மக்கள் கேட்கும் காலமாகும். தெய்வ வழிபாடு முக்கியமாகும். இந்தியா தன்சுய கருந்திலேயே சிந்தனையைச் செலுத்துகிறதா என்ற கேள்வி எழலாம். ஆரம்பம், முடிவு யார்கையில் இருக்கின்றது? மேற்குலகம் தனது கொள்கையை கிழக்கு உலகில் மறைமுகமாக திணிக்கும் காலமென கிரகநிலைகள் காட்டுகின்றன.

மேடம்: பொறுப்புக்கள் அதிகமென்று களைப்பு அடைகிறீர்களா? எதிர்நீச்சலடித்து முன்னேறுங்கள். மன வேதனைப்படக்கூடாது: எல்லோரும் நன்மை சொல்ல மாட்டார்கள். தொழில்ஸ்தானத்தில் கொஞ்சம் சலசலப்பு இருக்கும். எதையும் எதிர் கொள்ளும் தன்மை அதிகரிக்கும். நாம் எடுத்ததை நாம்தானே சுமக்க வேண்டும். என அடிக்கடி சொல்லுவீர்கள். சனி, நாரிநோ, தலை அம்மல், கைகால்நோ, சல, மல பீடைகள் என அடிக்கடி வருந்த இடம் உண்டு. ஆலயத்திற்குப் போக நேரமில்லாவிடில் ஆஸ்பத்திரிக்கு போய் வருவதில் தடை இருக்காது. சனீஸ்வரன் தாக்கத்தால் சலிப்பு ஏற்படலாம். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

இடபம்: உலகத்தில் யாரைத்தான் நல்லவர்கள் என்று சொல்லுகிறார்கள்? சொல்பவர்கள் குற்றமற்றவர்களா? சீர்திருத்தவாதிகளா? உலகவாழ்வில் சிலபல தவறுகள் நடக்கத்தான் செய்யும். அதைத் திருத்தி வாழ்வதுதானே: தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். எதிர்ப்பாலார் நன்மை சொல்வார்கள். அயலவர்களை நம்ப வேண்டாம். பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டுவார்கள். கலைத் தொடர்பு அதிகரித்த செலவுகளைக் காட்டும். நெஞ்சுநோ, நரம்பு சல ரோகம், மனச்சோர்வு கொடுத்தாலும் கொஞ்சம் ஓய்வு அடிக்கடி எடுக்கவும். எல்லாம் சரியாகி விடும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

இரட்டை மனோபாவங்கள் உங்களை ஆட்கொண்டபடி இருக்கும். உங்களைச் சுற்றியுள்ளவர்கள் உங்களின் உணர்வலைகளுக்கு மதிப்புக் கொடுப்பார்களென எண்ண வேண்டாம். உள்ளதைஉள்ளபடி உரைப்பதனால் உபத்திரவம்தான் அதிகம். எட்டாத காரியங்களை விட்டுவிடுவதுதானே? மனிதர்களால் எல்லாவற்றையும் அடைய முடியுமா? தொழில் ஸ்தானத்தில் கலகம் ஏற்படலாம். நம்பிய நண்பர்கள் ஏமாற்றுவார்கள். நெஞ்சுநோ, உள்ளவயவங்களின் வருத்தங்கள், கைகால் சோர்வு, சலவருத்தம், இருமல், உஷ்ணபீடைகள் என மாறி மாறிக் கொடுக்கலாம்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி.

சிங்கம்: நீங்கள் எதையும் வெளிப்படையாகப் பேசிச் செயற்பட முனைபவர்கள்; தொழில் ஸ்தானத்தில் கடுமையான உழைப்பு உங்களுக்கு இருக்கும். மேலதிகாரிகள், சக நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்ளல் வேண்டும். நெஞ்சு நோ, வாய்வுத் தொல்லை, முதுகு வலி, உடல் வரட்சித் தன்மை

# சோதிட சஞ்சீவி

மிதுனம்: உங்கள் வேகமான சிந்தனை, செயற்பாடுகளைப் பார்த்தால் ஏதோ சிக்கலில் மாட்டப் போகிறீர்கள் போலத் தெரிகின்றது. தொழில் ஸ்தானத்தில் அளவுக்கு மீறிக் கதைத்தபடி இருப்பதனால் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கள் இருக்கும். ஆயினும் பாதிப்புக்கள் இருக்காது. பொருள்வரற் சுமாராக இருக்கும். செயவுபாடுகளில் சாதகபாதக நிலைகள் மாறி மாறி ஏற்படலாம். குடும்பப் பாசம் அதிகம். நிதானமாகச் செயற்படுங்கள். புதியன வரவும் பழையன கழிதலும் என்ற நிலைகள் இருக்கும். கைகால் உளைவு, சிறு, சிறு காயங்கள், முதுகுவலி, நாரிநோ, உஷ்ணபீடைகளால் வருந்த இடம் உண்டு. தக்க வைத்தியம் செய்து வரவும்.

★ அதிர்ஷ்டநாள்: [illegible], வியாழன்.

கடகம்: நீங்கள் ஒரே பிள்ளையாக இருக்கின்றீர்கள்: என்பன கொடுக்கும். தகுந்த வைத்தியமும் உடலுக்கு ஓய்வும் அவசியம். இடமாற்றங்களையும், பிரயாணங்களையும் தவிர்த்துக் கொள்ளவும். தெய்வ வழிபாட்டைத் தொடருவீர்கள். அதனால் மன ஆறுதல் கிடைக்கும் என்பது உங்களுக்குத் தெரியும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன்.

## மகாதேவா ஜோதிடம்

கன்னி: எதிர்ப்பாலருடன் மிக,மிக மரியாதையுடனும், விட்டுக் கொடுத்தும் நடவுங்கள். அவர்களைப் பிடிக்காவிட்டால் விலகி நடவுங்கள். அல்லது அவர்களின் ஏச்சுக்கு ஆளாவீர்கள். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பொருள் வரவுகள் தவறிப்போகலாம்,

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 62



சொற்சிலம்பம் இல. 62
சஞ்சீவி,
861, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ........................................
விலாசம்: ........................................
........................................

.................. இங்கே வெட்டுக ..................

முடிவு திகதி; 14 — 08 — 1998

**இடமிருந்து வலம்**

1. கூட விருத்தல். 5. யாது. 7. உயிர்ப் பொருள்! விலங்கு அல்ல. 8. பாம்பு இதற்குக் கட்டுப்படுமாமே? 9. வடமொழியில் உரையாடல். 11. திரவப் பொருள். 12. செல்வம். 13. இறந்த பின் பயணிப்பது இதிலே. 14. வீட்டுக்கு முன்புறம் இருப்பது. 15. ஏச்சு. 17. எங்களை எனப் பொருள் தருவது. 19. வலுமிக்கவன். 21. உயிரைப் பறிப்பவன். 23. பெண்களின் நடன வகை. 24. குளிசை.

**மேலிருந்து கீழ்**

1. எந்நேரமும். 2. கர்ணன் பிறந்தது இவற்றுடனாம். 3. ஏழல். 4. உழைத்துப் பெறு. 5. சென்றடை. 6. பெண்களுக்கு கவர்ச்சி தரும் உடற்பாகங்களுள் ஒன்று — அடைமொழியுடன். 8. வீடு. 10. வாயகன்ற பாத்திரம். 11. அரைவாசி. 13. நெசவுப் பா. 16. நஜபாகம் இது. 17. விநாயகரின் வாகனம். 18. அரசன். 19. பிரி. 20. தெய்வம். 22. பர்வதம்.

### சொற்சிலம்பம் 60 — விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஆயாசம். 6. சுகம். 7. தேவகுரு. 9. கம்பராமாயணம். 11. வசி. 12. வம்பு. 13. நும். 14. எம். 15. கண். 16. விடை. 18. சமைதல். 20. தோல்வி. 22. விலைமாது.

**மேலிருந்து கீழ்**

1. ஆசுகவி. 2. யாகம். 3. சம்பவம். 4. அவயவம். 5. கரும்புலி. 7. தேமா. 8. குணம். 10. ராசி. 13. நுண்மை 14. எடை. 15. கசம். 16. வில்லை. 17. பல். 19. தவி. 20. தோது. 21. விலா.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: யோ. வின்ஸ்லோ ஜீவகன், 20, அச்சக வீதி, யாழ்ப்பாணம்.

★ இரண்டாம் பரிசு: சி. அரச இரத்தினம், சங்குவேலி, மானிப்பாய்.

★ மூன்றாம் பரிசு: ஐ. தி. சண்முகராரா, கமநல கேந்திர நிலையம், சண்டிலிப்பாய்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 61 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வார்த்தை விளையாட்டு




மேலேயுள்ள பலூன் மனிதன் வைத்துள்ள பலூன்களில் சில எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை வைத்துக் கொண்டு ஐம்பத்தியைந்து சொற்களை உங்களால் உருவாக்க முடிகின்றதா என்று பாருங்கள்.

(விடை XI ஆம் பக்கத்தில்)

## கூண்டுக் கிளியின் கதறல்

கூண்டுக் கிளி:-
முன்னை வினைப் பயனோ முன்செய்த
தீவினையோ?
எந்த வினைப் பயனோ இரும்பத்தில்
இட்டதுவோ?
அரும்பு மலர் கோதி என்கிளையோடு
உறவாட
இரும்புச் சிறைக் கதவே எனக்குமோர்
வழிகாட்டு!

காட்டுக் கிளி:-
அஞ்சற்க அஞ்சுகமே அருவினையையார்
கடந்தார்?
துஞ்சற்க நீயும் தூங்காதே விதியை
எண்ணி
நெஞ்சத் திறத்தோடு நீ நினைந்து
பாடுபட்டால்,
மஞ்சகத்தே பறந்தோட சிறைக்கதவு
வழிகாட்டும்

— கு. துரைராஜன் —

## விழாக்கள்

★ 25 ஆவது ஆண்டு விழா — வெள்ளிவிழா
★ 50 ஆவது ஆண்டு விழா — பொன் விழா
★ 60 ஆவது ஆண்டு விழா — வைர விழா
★ 75 ஆவது ஆண்டு விழா — பவள விழா
★ 100 ஆவது ஆண்டுவிழா — நூற்றாண்டு விழா

—பத்மநாதன் ஜெயப்பிரதீபன்—
(ஆண்டு7, மானிப்பாய் இந்துக் கல்லூரி)



## செய்து பாருங்கள்

ஒரு தகப்பனாருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். மூவரின் வயதையும் கூட்டினால் எண்பது வரும், மூத்த மகனின் அரைவாசி வயதும், கடைசி மகனின் வயதுடன் நாலைக் கூட்டினாலும், இரண்டாவது மகனின் வயதுடன் நாலைக் கழித்தாலும் ஒரே வயதுதான் வரும். அப்படியானால் அம் மூவரின் வயதுகளும் யாது?

(விடை XI பக்கத்தில்)

## சோடி சேருங்கள்!

கீழே நிரல் A யில் சில சொற்களும் நிரல் B அவை குறிக்கும் இலக்கங்களும் உள்ளன. ஆனால் நிரல் B யில் இலக்கங்கள் மேலும் கீழும் மாறி வந்துள்ளன. சரியான சோடிகளை இணையுங்கள் பார்க்கலாம்.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| MEET | 4315 |
| TEAM | 5334 |
| BEAT | 6193 |
| SOON | 2314 |
| SAKE | 6778 |
| TEAK | 4319 |

(விடை XI பக்கத்தில்)

# அழகான மரங்கொத்தி!

அழகான சிறு பறவை மரங்கொத்தி. மரப் பட்டைகளின் அடியிலுள்ள புழு, பூச்சிகளைத் தின்பதற்காக இது மரத்தைக் கொத்திக் கொண்டிருக்கும். அதனால் இதற்கு மரங்கொத்தி என்று பெயர். முட்டையிடுவதற்காக கூடு அமைக்கவும் இது மரத்தைத் துளைத்துப் பொந்து செய்கிறது.



ஆஸ்திரேலியா தவிர உலகெங்கும் மரங்கொத்தி வாழ்கிறது. இப்பறவையில் பல இனங்கள் உண்டு. இங்கு சாதாரணமாகத் தோட்டங்களிலும் தென்னந்தோப்புகளிலும் காணப்படும். அழகிய மரங்கொத்திப் பறவை, மைனாவைவிடச் சற்றுப் பெரிகாக இருக்கும். இதன்

### பிராணிகள் உலகம்

முதுகு பொன் நிறமானது; கொண்டை சிவப்பாகவும் முகம் கருநிறமாகவும் இருக்கும். மற்றோர் இனம்இதைவிடச் சிறியது. இதன் முதுகு, கருப்பு, வெள்ளை நிறப்புள்ளிகள் கலந்ததாக இருக்கும்.

மரத்தைக் கொத்தித் துளைப்பதற்கேற்ப இப்பறவையின் அலகு கூர்மையாகவும் உறுதியாகவும் இருக்கும். மரப் பட்டைகளுக்கு அடியிலும் துளைகளிலும் ஒளிந்து கொண்டிருக்கும் புழு, பூச்சிகளைப் பிடித்து இழுப்பதற்குத் தக்கபடி இதன் நாக்கு நீளமாகவும் பிசுபிசுப்பான பசையுள்ளதாகவும் இருக்கும். மரங்களுக்குக் கேடு விளைவிக்கும் புழு பூச்சிகளைத் தின்று தாவர இனத்திற்கு மரங்கொத்தி உதவி செய்கிறது.

இப்பறவையின் கால் விரல்கள், முன்பக்கம் இரண்டும் பின்பக்கம் இரண்டுமாக அமைந்திருக்கும். மரப்பட்டைகளில் தொற்றிக் கொள்ள விரல் நகங்கள் உதவுகின்றன. மரங்கொத்தியின் வால் இறகுகள் குட்டையானவை. நுனி கூராக இருக்கும். மரங்கொத்தி செங்குத்தாக உட்காரும் போது இவ்வால் இறகுகள் மரப்பட்டையில் பதிந்து பறவை தலை கீழாக விழாதபடி தாங்குகின்றன. இரவிலுங் கூட இதே நிலையில் மரங்கொத்தி உட்கார்ந்துதூங்கும்! இறக்கையை விரிக்காமல் மரத்தில் விரைவாக ஏறி இறங்கும் திறன் இதற்கு உண்டு.



## மாடும் சுண்டெலியும்

ஒரு புல்வெளியில் ஒரு பெரிய மாடு வசித்தது. அந்தப் புல்வெளியைச் சுற்றி ஒரு சுவர் இருந்தது. சுவரில் ஓர் ஓட்டை இருந்தது. அந்த ஓட்டைக்குள் ஒரு சின்னஞ்சிறு சுண்டெலி வசித்தது.

ஒரு நாள் மாடு தன் காலால் சுண்டெலியின் வாலை மிதித்து விட்டது. சுண்டெலிக்கு மிகவும் நொந்தது. சுண்டெலிக்குக் கோபம் வந்தது. அது மாட்டின் மூக்கில் கடித்தது. கடித்துவிட்டு ஓடியது.

மாடு சுண்டெலியைத் துரத்திக் கொண்டு ஓடியது. ஆனால் சுண்டெலி சுவரில் இருந்த ஓட்டைக்குள் ஓடி ஒளித்து விட்டது.

மாடு தன் தலையினால் சுவரில் இடித்தது; மூசி மூசி இடித்தது. ஆனால் சுண்டெலி வெளியே வரவில்லை. மாட்டுக்கு கடும் கோபம் வந்தது அது எல்லாப் பக்கமும் துள்ளித் துள்ளி ஓடியது; கால்களால் நிலத்தைக் கிளறியது; பெரிய சத்தம் போட்டுக் கத்தியது; கடைசியில் களைத்துப் போய் நிலத்தில் படுத்து விட்டது.

கொஞ்ச நேரம் போனபின் சுண்டெலி மெல்ல மெல்ல ஓட்டைக்கு வெளியே வந்தது; மாட்டுக்குக் கிட்டப் போனது; மாட்டின் வாலைப் பிடித்து இழுத்தது.

மாடு திடுக்கிட்டு எழும்பியது; கோபத்துடன் சுண்டெலியைத் துரத்திக் கொண்டு ஓடியது. சுண்டெலி திரும்பவும் சுவர் ஓட்டைக்குள் ஓடி ஒளித்து விட்டது.

மாடு தன் தலையினால் சுவரில் இடித்தது; மூசி மூசி இடித்தது; துள்ளித் துள்ளி ஓடியது;

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்கள்

மலர்கள் நல்ல மலர்களாம்
மணம் வீசும் மலர்களாம்
காலை வேளை மலருமாம்
கண்சிமிட்டும் மலர்களாம்

பல வண்ண மலர்களாம்
பார்க்க அழகாய் இருக்குதாம்
மாலை களாய் கோர்க்கலாம்
மகிழ் வுடனே அணியலாம்

அலங்கரிக்க எடுக்கலாம்
ஆலயத்தில் வைக்கலாம்
கடவுளுக்குச் சூடலாம்
காணிக்கையாய் வைக்கலாம்

—மரிய நிலக்ஷி பீற்றர்—
(ஆண்டு 4,
புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.)

## காக்காப் பாட்டு

பாட்டி சுட்ட வடையைத் தூக்கிப்
பறந்து சென்ற காக்கையார்
காட்டிலுள்ள மரத்தின் மீது
களைத்து வந்து குந்தினார்

வாட்டுகின்ற பசியில் அங்கு
வந்து நின்ற நரியனார்
பாட்டுப் பாட வல்ல மச்சான்
பாடு பாடு என்றார்

சால வித்தை என்ன என்று
தான் அறிந்த காக்கையார்
காலில் அந்த வடையை வைத்துக்
"காகா" என்று பாடினார்

தன்னை காக்காய் வென்ற தென்று
தலை குனிந்த நரியனார்
என்ன செய்வோம் என்று வெட்கி
எடுத்தார் ஓட்டம் காட்டிலே

— எஸ். சிந்துஜா —
(ஆண்டு 6,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி:)

## வெள்ளை முயல்

வெள்ளை முயல் காட்டுக்குள்ளே
வேகமாக ஓடுது
பள்ளம் மேடு கல்லு முள்ளை
பக்குவமாய்த் தாவுது

குள்ள நரியின் வரவைக் கண்டு
குதித்துக் குதித்து ஓடுது
முள்ளுப் பற்றை தன்னில் மறைந்து
முழுசி முழுசிப் பார்க்குது

அசைந்து வரும் யானை முன்னே
அழகு முயல் ஓடுது
அசைந்து யானை வருவதற்குள்
அஞ்சு மைல் தாவுது

என்ன தம்பி சிந்தனையோ
ஏக்க முண்டோ நெஞ்சிலே
அந்த முயல் போல நீயும்
ஆகிடத்தான் ஆசையோ!

—ஸ்ரீ சந்தனராஜா பபிதா—
(ஆண்டு 7,
மானிப்பாய் மகளிர் கல்லூரி.)

## வாரீர்! வாரீர்!!

மரத்தை வளர்ப்பது வளமாம்
மனிதர்க்கு இதுவே அறமாம்
மரங்கள் இருந்தால் சோலை
மறந்தால் அதுவே பாலை

குளிர்ந்த நிழலைத் தருகுது
காயும் கனியும் உதவுது
துளியும் தன்னலம் இன்றியே
தன்னையே நமக்குத் தருகுது

மரங்கள் தந்திடும் நன்மை
மறந்தால் அழிவது உண்மை
கரங்கள் கூப்பித் தொழுவேன்
காத்திட வாரீர் மரத்தை!

—செ. விதுஷா—
ஆண்டு 6.

## ஐயாயிரம்....

(V ஆம் பக்கத் தொடர்)

செல்லம்மா ஆச்சியின் நிலைமை புரியாத ஓட்டோக் காரன் ''ஆச்சி எங்கையணை போகணும்'' என்றான் தனக்கு விடியக்காத்தாலை ஓர் ஓட்டம் வரப்போகிதென்ற நினைவில்.

செல்லம்மா ஆச்சியோ, 'சீ...போடா மேனை, உந்த பாங்கு எங்கையடா கிடக்குது'' என்றாள்.

எந்த வங்கி, உங்கை கனக்க வங்கிகள் யாழ்ப்பாணத்திலை கிடக்குது?'' முடிப்பதற்குள் ஆச்சி நெஞ்சுக் காலை வங்கிப் புத்தகத்தையும் ஒரு கடிதத்தையும் எடுத்து ஓட்டோக்காரனிடம் நீட்டினாள். அதனைப் படித்த ஓட்டோக்காரன், ஆச்சிக்கு ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக்குப் போகும் வழியையும் விளக்கிக் கூறி வழியனுப்பிவைத்தான்.

ஆச்சி ஒருவாறு வங்கிவாசலையடைந்தாள். ஆச்சிக்கு வங்கியில அமோக வரவேற்பு. ஐந்து நிமிடத்திற்குள் ஆச்சிக்கு பணம் ஐயாயிரம் கிடைத்தது. வங்கிப் புத்தகத்தையும், பணத்தையும் மீண்டும் நெஞ்சுக்குள்வைத்து ஆச்சி புதிய உத்வேகத்துடன் பஸ் நிலையம்நோக்கி நடந்தாள். கொண்டக்டர் கத்திய பேரொலியின் உதவியுடன் மீண்டும் மினிபஸ் ஒன்றில் ஏறி 'உட்கார்ந்து கொண்டாள். திரும்பி வரும் போது சகல சென்றிப் பொயின்றுகளிலும் ஆச்சிக்கு மட்டும் தனிமரியாதை... பஸ்ஸில் இருந்து இறங்கி நடக்கும் இளசுகள் ஆச்சியைப்பற்றி ஏதோ வாய்க்குள் முணுமுணுத்ததையும் ஆச்சி கவனிக்கத் தவறவில்லை.

ஆச்சிக்கு இரவிரவாகச் சரியான குலப்பன் காய்ச்சல். துணைக்குப் படுக்க வரும் ராசனுக்கு அன்றிரவு முழுவதும் சிவராத்திரியாக மாறியது. ஆச்சி ஏதோ ஏதோவெல்லாம் புலம்பித்தள்ளினா. வெளிநாடுகளில் உள்ள சகல பிள்ளைகளினதும் பெயரைச் சொல்லி அடிக்கடி கூப்பிட்டா.

ராசனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்த நடு இரவில் யாரிடம் செல்வது? யாரைக் கூட்டிக் கொண்டுவந்து காட்டுவது? வெளியில் செல்வதானால் இராணுவத் தொல்லை.

திடீரென ஆச்சி ஏதோ சொல்ல முனைவதுபோல ராசனின் கையைப் எட்டிப் பிடித்து தலைமாட்டில் ஏதோ இருப்பதாக சைகை காட்டியவாறு ஒரு விக்கல் விக்கியதுதான். செல்லம்மா ஆச்சியின் கைப்பிடி நழுவியது. ராசன் கட்டந் தனிமையாக முழுசிக்கொண்டுநின்றான்.

(யாவும் கற்பனை)

## பதவி உயர்வு...

(V ஆம் பக்கத் தொடர்)

கிறார்'' சமயோசிதமாகக் கூறிக்கொண்டே விசிறியை எடுத்து வீசுகிறாள்.

அவர் கொடுத்து வைத்திருந்த பவுன் உருண்டை மாத்திரம் பத்து பவுன் தேறும். பாவம் மனுஷன் எதிர்பார்த்திருக்கும் தன்னை எப்படி பட்டாவது—எவ்வளவு செலவழித்தாவது— மனைவி தனக்கு வைத்தியம் செய்விப்பாள் என்று. அவளோ எப்ப இந்த மனுஷன் சாகும்; இருக்கிற மீதிப் பொருள்களையும் விற்றுக் கொண்டு மகனோடு போய்ச் சேர்ந்து விடலாம் என்று காத்துக்கொண்டிருக்கிறாள்.

இவன் சொல்லி அழைத்திருக்க வேண்டும். உள்ளூரில் கிளினிக் வைத்திருக்கின்ற கோபாலகிருஷ்ணன் டாக்டர் வந்தார். நோயாளியைப் பார்வையிட்ட டாக்டரின் முகபாவம் சட்டென மாறிக்கொண்டு வந்தது.

உதடுகள் தாமாகவே பிதுங்கின. பார்த்துவிட்டு நிமிர்ந்த டாக்டரை லோகாம்பிகை ஓரத்தில் விளித்தாள்.

''டொக்டர் எப்பிடி நிலைமை...?''

''ஆளுக்கு இது தான் கடைசி...''

''அது தெரியும் டாக்டர்! இந்த அளவில ஆள் 'அவுட்' ஆகும். கனநாள் பிடிக்குமோ?...''

''சீ... சீ... கெதியாக போகும் சீவன்...''

அதுக்கில்லை டாக்டர் குறை விளங்காதேயுங்கோ. மனுஷன் இப்படி கிடந்து அழுந்த ஆளுக்கும் வேதனை பார்த்துக் கொண்டிருக்கிற எனக்கும் வேதனை; கஷ்டம். நீங்களாகவே பார்த்து முடித்து விட்டால் என்ன! ஊசி... இசி... போட்டு...''

டாக்டர் மலைத்துப் போனார்.

''கருணைக் கொலையா?'' டாக்டரின் சரித்திரத்தில் இதுவரை கேள்விப்படாத சங்கதி.

உயிரைக் காப்பாற்றுங்கள் என்றுதான் மனுசர் கெஞ்சுறது. இது என்னடா வென்றாள்...!

''அது பாருங்கோ! நோயாளியால் இனிச் சகிக்க முடியாது என்ற நிலைமையிலை கடைசிக் கட்டத்திலை யோசிக்கிற விஷயம். அதுவும் நோயாளியின்ர சம்மதம் இல்லாமல்... இங்கே மனிதனுக்கு சாக விருப்பமில்லையே... டென்மார்க்கிலை இருக்கிற மகனை நினைத்து பெருமூச்சு விடுகுது; அது சரிவராது பாருங்கோ...''

டாக்டர் கையை விரித்து விட்டார்.

அடுத்தநாள் காலை 'அன்புக் கணவர்' என்ற பதவி உயர்வோடு இவ்வுலகம்விட்டு மாற்றலாகி...

தகனத்திற்கு ஆயத்தம் போலும். பறையொலியும் கேட்கத் தொடங்கிவிட்டது.

பத்திரிகையை வைத்துவிட்டு, என் பால்ய நண்பனுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்தும் பொருட்டு புறப்பட ஆயத்தமானேன்.

(யாவும் கற்பனை)

## இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

மன அமைதி சிலருக்கு இருக்காது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலை ஏற்படத்தான் செய்யும். உங்களை எவரும் எதிர்க்க மாட்டார்கள். ஆனால் போக விட்டு புறம்சொன்னபடிஇருப்பார்கள். நீங்கள் கலகம் பிறந்துதானே நியாயம் பிறக்கும் என்பீர்கள். சளி. இடுப்பு வலி, வாதஉளைவு, கிருமித் தாக்கம் என்பன இருக்கும். தகுந்தவைத்தியம்செய்யவும்.

★ அதிர்ஷ்ட நாள்; திங்கள். வெள்ளி.

துலாம்: என்ன அடிக்கடி மறந்து போகிறீர்கள்? குழப்பமான நிலை ஏற்படச் செய்யும். கலைத் தொடர்பு, சங்கீத, நாட்டிய—நாடக சிந்தனை, ரீ. வி. பார்ப்பதில் ஆர்வம் அடிக்கடி இருக்கும். தொழில்ஸ்தானத்தில் அலட்சியத் தன்மையால் சில இழப்புக்களைச் சந்திப்பீர்கள். எல்லா விஷயத்திலும் இலாபத்தைக் கருத முடியுமா? எதிலும் சமநிலை தளம்பவிடாமல் சமாளியுங்கள். வாழ்க்கையில் இது மிக முக்கியமாகும். பொருள் நிலை மாற அருள் நிலைவரும். வயிற்றுவலி, கைகால்கடி, அடிக்கடி களைப்பு, அதிக அலைச்சலால் மனச்சலிப்பு என்பன இருக்கச் செய்யும். உங்கள் ஆழ்ந்த அனுபவத்தாலும், அறிவற்றலாலும் எதையும் சமாளிக்க முடியும்.

★ அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி.

விருச்சிகம்: கலகம் பிறந்து நியாயம் பிறக்கும் காலமாகும். எதிர்ப்பாலார்கள் உதவுவார்கள். எதிலும் இரகசியம் காப்பாற்றுங்கள். தொழில் ஸ்தானத்தில் அதிக உழைப்பு இரகசிய சிந்தனை வெற்றி தரும். புதிய திட்டங்களால் நன்மைகள் கிடைக்கும். உலகத்தைப்பற்றி அதிகம் கவலைப்பட மாட்டீர்கள். ஆயினும் உங்களைப் பற்றிச் சிந்தியுங்கள். நெஞ்சு நோ, கிருமித் தாக்கம், சிரசு வருத்தம், முதுகு நோ, வாய்வுத் தொல்லை, வயிற்றில் புகைச்சல் என்பன வர இடம் உண்டு. உங்கள் அயலவர்களால் உங்களுக்கு சில துன்பங்கள் வரலாம்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

தனுசு: எதிலும் மனம் திறந்து பேசுவதனால் பல பகைகளைத் தேடிக் கொள்வீர்கள். தொழில் ஸ்தானத்தில் எதற்கும் முன்நிற்பீர்கள். கலகலப்பாக இருப்பீர்கள். பல பெரியவர்கள், எதிர்ப்பாலாரின் அன்புக்கும் நட்புக்கும் பாத்திரமாவீர்கள். கிருமித் தாக்கம், சளி, ஈரல், குடல் நோ, உஷ்ண பீடைகளால் அடிக்கடி வருந்த இடம் உண்டு. பெரியவர்கள், நண்பர்களின் உதவிகளால் புதிய திட்டங்கள் பல தீட்டி முன்னேறவும், திடீர் இட மாற்றங்களைச் செய்யவும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். குடும்பத்தில் புத்திரர்கள் அல்லது சகோதரங்களுக்கு மாற்றங்கள் ஏற்பட கடுமையாக உழைப்பீர்கள். உங்களைச் சுற்றி இருப்பவர்களால் உங்களுக்கு நன்மை, தீமை கலந்து நடக்கும் பலன்கள் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

மகரம்: உங்களின் இடாம்பீகமற்ற போக்கால் உங்களுக்கு அதிகளவு நன்மைகள், வெற்றிகள் கிடைக்கும் காலமாகும். தொழில் ஸ்தானத்தில் பல புதிய திட்டங்கள் நிறைவேறும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். கொடுக்கல், வாங்கலில் கவனமாக இருக்கவும். நம்பிக்கை, இடைவிடாத செயற்திறன் உங்களை வாழவைக்கும். உறுதியான மாற்றங்களைத் தரும். வயிற்று நோ, நரம்பு வருத்தம், கைகால் தாக்கங்கள், முதுகு—மூட்டு வலிகள், சலவருத்தங்கள், உஷ்ண பீடைகள் என்பன கொடுக்கும். மற்றவர்கள் உதவுவார்கள், வெளிநாட்டிலிருந்து உதவிகள் வரும் எனச் சிந்தியாது உங்கள் உழைப்பாலே உயர இடம் உண்டு. தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

கும்பம்: அதிகம் யோசித்து என்ன செய்வது? எந்த விஷயத்திலும் கட்டுப்பாடான திட்டங்கள் போட்டுச் செயற்படுத்திப் பாருங்கள். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி எதிர்ப்புக்கள் வரத்தான் செய்யும். புத்திசாதுரியமாக நடந்து சமாளிக்கவும். குடும்பத்தில் சுபமங்களகர கொண்டாட்டங்கள் ஏற்படும். கைகால் வலி, நாரி நோ, உடல் வரட்சி என்பன அடிக்கடி கொடுக்கும். அடிக்கடி தனிமையில் காலத்தைச் செலவழிப்பீர்கள். சாப்பாட்டைக் கவனியுங்கள். அல்லது வயிற்றுவருத்தங்கள் சிலருக்கு வரலாம். குல தெய்வ வழிபாடு மிக முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

மீனம்: நீங்கள் அடிக்கடி ஓடியாடித்திரிவீர்கள். எதிலும் நிதானமான போக்கு இருக்கும் எனச் சொல்ல முடியாது. யாரை நம்பி நீங்கள் பிறந்தீர்கள்? உங்களையே நம்பி செயற்படுங்கள். அதனால் ஓரளவு தொழில்ஸ்தானத்தில் நல்ல பலன் ஏற்படும். எதிலும் உங்களுக்கென ஒரு தனிநடையை நடைமுறைப் படுத்திக் கொள்ளுங்கள். அதனால் பல புதிய உத்திகள், வழிகள் ஏற்பட்டு நன்மையான பலன்கள் கிடைக்கும். சொல்வாக்கால் சிலருக்கு கஷ்டங்கள் ஏற்படும் காலமாகும். சளியால் மூட்டு நிலை, வயிற்று நோ, நாரி நோ, உஷ்ண பீடைகள் கொடுக்கும். வைத்தியசாலை போய்வர இடம் உண்டு. தெய்வ வழிபாடு பல நன்மைகளைக் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

## குடாநாட்டில்....

(III ஆம் பக்கத் தொடர்)

கின்ற பெற்றோர்கள் உடனடியாக வைத்தியர்களின் சேவையை நாடுவது மிக்க நன்மை பயக்கும். முக்கியமாக காசநோயாளிகள் இருக்கின்ற வீடுகளில் உள்ள பிள்ளைகள் இலகுவாக நோய்த் தொற்றலுக்குள்ளாக கூடுமாதலால் மிகவும் அவதானிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அத்துடன் காச நோயுள்ள தாய்க்குப் பிறக்கும் குழந்தைகள், காசநோயுள்ள தாயிடம் பாலருந்தும் குழந்தைகள் கூட இந்நோய்த்தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக் கூற்றை அதிகம் கொண்டிருக்கிறார்கள். எனவே இக் குழந்தைகளை மருத்துவர்களிடம் கொண்டு சென்று தகுந்த மருத்துவ சிகிச்சை வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் தமது பிள்ளைகள் கொடிய காச நோயின் பிடியில் சிக்கி அவதியுறுவதை பெற்றோர்கள் தடுக்கக்கூடியதாக இருக்கும்.

காசநோய்க்கான இலவச சிகிச்சை யாழ். போதனா வைத்தியசாலையின் மார்பு சிகிச்சைப் பிரிவு கிளினிக்கில் விசேட வைத்தியர்களின் மேற்பார்வையில் வழங்கப்படுகின்றது. நோயாளிகள் அல்லது ஏற்கனவே குறிப்பிட்ட அறிகுறிகள் தென்படுகின்றவர்கள் நேரடியாக மார்புநோய் சிகிச்சைப் பிரிவு கிளினிக்கிற்கு வந்து தமக்கான சிகிச்சையை பெற்றுக் கொள்ளலாம். மார்பு நோய் சிகிச்சை கிளினிக் விடுமுறை தினங்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையும், சனிக்கிழமைகளில் காலை 8.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணிவரையும் மக்களுக்கு சேவையாற்ற காத்திருக்கின்றது.

### மூட நம்பிக்கைகள்

மக்கள் மத்தியில் காச நோய் பற்றிய பல மூட நம்பிக்கைகள் நிலவி வருகின்றன. அவற்றுள் சில......

★ காச நோய் பாவம் செய்தவர்களுக்கோ அல்லது கடவுளால் சபிக்கப்பட்டவர்களுக்கோ வரும் ஒரு நோயாகும்.

★ கடவுளின் சாபத்தால் வருவதால் நவீன மருத்துவம் மூலம் இந் நோயைக் குணப்படுத்த முடியாது.

★ மந்திரித்தல், பேயோட்டுதல் முதலான செய்கைகள் மூலம் மட்டுமே இந்நோயைக் குணப்படுத்தலாம்.

★ காசநோயாளிகள் சமூகத்திலிருந்து தூரமாக ஒதுக்கப்பட வேண்டியவர்கள்.

★ காச நோய் ஒரு பரம்பரை வியாதி.

இவ்வாறான உண்மைக்குப் புறம்பான நம்பிக்கைகள் நோயாளியின் இறப்பிற்கு வழி கோலுவதோடு நின்று விடாமல் சமூகத்தில் ஏனையோருக்கும் இந்நோய் பரவுவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றன. எனவே இவ்வாறான மூட நம்பிக்கைகளைக் கைவிட்டு, குணப்படுத்தக் கூடிய இந்தக் காச நோயிலிருந்து நோயாளியை விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்,

### சில ஆலோசனைகள்

காசநோய்க் கட்டுப்பாட்டிற்கான ஆலோசனைகள்:-

1. குழந்தை பிறந்து ஒரு மாதத்திற்குள்ளாக பி. ஸி. ஜி என்ற காசநோய் தடுப்பூசி ஏற்றப்படவேண்டும். பி. ஸி. ஜி பெறத் தவறிய குழந்தைகள் பாடசாலை செல்லும் காலத்தில்—அதாவது 5 வயதளவில்—தடுப்பூசி ஏற்றிக் கொள்ளவேண்டும். அதன் மூலம் சுமார் 10 வருடகாலங்களுக்கான காச நோய் எதிர்ப்புச் சக்தி உடலில் உருவாக்கப்படுகின்றது.

2. நோயாளிகள் கண்டு பிடிக்கப்படுவதற்கும் பூரண சிகிச்சை வழங்கப்படுவதற்கும் (Detection and Treatment) பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க முன் வரவேண்டும்,

3. நோயாளியுடன் நெருக்கமாகப் பழகுகின்ற அவரின் குடும்பத்தவர்கள், நண்பர்கள் ஆகியோர் சளிப் பரிசோதனையை மேற்கொண்டு நோயிருக்கும் பட்சத்தில் பூரணசிகிச்சை பெற வேண்டும்: நோய்த்தொற்று இல்லாத பட்சத்தில் எதிர்காலத் தொற்றைத் தடுப்பதற்கு முன் எச்சரிக்கையாக காச நோய்க்கானமருந்தினை வைத்திய ஆலோசனைப்படி உட்கொள்ள வேண்டும். (Chemo Prophylaxis.)

4. இயலுமானவரை சிறு குழந்தைகளையும், 14 வயதிற்குட்பட்ட பிள்ளைகளையும் நோயாளிக்கண்மையில் அல்லது அவர் இருக்கும் அறையில் அதிகம் பழக விடுவதைத் தவிர்க்கவேண்டும். முக்கியமாக ஒரே அறையில் நித்திரை செய்வது தவிர்க்கப்படவேண்டும்.

5. பிள்ளைகளுக்கு நல்ல போஷக்குள்ள உணவு வகைகளை வழங்கி, அவர்களின் போஷாக்கு நிலையை உயர் மட்டத்தில் பேணவேண்டும். முக்கியமாக காசநோயாளி ஒருவர் இருக்கும் வீட்டிலுள்ள பிள்ளைகளின் போசாக்கு நல்ல நிலையில் இருக்கவேண்டும். பலவீனமாக இருக்கும் பிள்ளைகள் இலகுவில் காசநோயினால் பீடிக்கப்பட்டு விடுகிறார்கள்.

6. நோயாளி இருமும் போது வாய், மூக்குத் துவாரங்களைக் கைக்குட்டையால் மூடியபடி இருமுதல் வேண்டும். இயலுமானவரை ஏனையவர்கள் இல்லாத பக்கமாகப் பார்த்து இருமுவது, அவர்களை நோய்த் தொற்றலிலிருந்து கணிசமான அளவு பாதுகாக்கும்.

7. சளி, உமிழ்நீர் முதலான தனது சுரப்புக்களை வளிமண்டலத்தில் பரவுகின்ற வண்ணம் திறந்த வெளிகளில் துப்புவதை நோயாளி தவிர்க்கவேண்டும். இச் சுரப்புக்களை மூடிய கொள்கலன்களில் கவனமாக சேகரித்து ஆழமாக மண்ணில் புதைப்பதோ அல்லது எரிப்பதோ அல்லது இரசாயனப்பொருள்களால் தொற்று நீக்குவதோ நன்மை பயக்கும்.

8. மக்கள் நெருக்கமாக வாழ்வது தவிர்க்கப்பட வேண்டும். சிறிய ஒரு வீட்டில் அளவுக்கதிகமான எண்ணிக்கையில் நெருக்கமாக வாழ்வதால் நோய்த் தொற்றலும் பரவலும் அதிகமாகக் காணப்படும். இது அருகருகாமையில் அமைந்துள்ள வீடுகளுக்கும் அதில் வாழ்பவர்களுக்கும் கூடப் பொருந்தும்.

9. வீடுகள் காற்றோட்டம் உள்ளதாகவும், சூரிய ஒளி நன்கு உட்பரவக்கூடிய வகையிலும் அமைக்கப்படல் வேண்டும். நோயாளியின் சூழலில் பரவிக் காணப்படும் காச நோய்க் கிருமிகள் சூரிய ஒளியினால் பெருமளவில் கொல்லப்படுகின்றன. இது தொற்றலையும் பரவலையும் பெருமளவில் தடுக்கின்றது.

எமது யாழ் குடாநாட்டில் அதிகரித்து வருகின்ற காச நோய் குறித்துப் போதிய விளக்கங்களும், அதைத்தடுப்பதற்கான வழி முறைகளும் இங்கு தரப்பட்டிருக்கின்றன. இதனைப் பயன்படுத்தி பொதுமக்கள் தருகின்ற ஒத்துழைப்பு பெருமளவில் பரவி வருகின்ற இக்காச நோயைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரிதும் உதவும். பொதுமக்கள் காச நோய் பற்றிய விழிப்புணர்வுடன் செயற்பட்டுத் தம்மைப் பாதுகாப்பதுடன், இக்கொடிய நோயைச் சமுதாயத்திலிருந்து நீக்குவதற்கு சுகாதாரப் பிரிவினருக்கு தமது பூரண ஒத்துழைப்பையும் நல்க வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

IX ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### வார்த்தை விளையாட்டு

நாதி, நாவிதன், நான், நாதன், நாம், நாதம், நாசம், நாவல், நான்கு, நாகு, நாவை, தன், தவி, தம், தசம், தபால், தகு, தவை, தடை, தவில், சதம், சபா, சம்பா, சதி, சடை, சவல், சவம், விதம், விசம், விளை, விதி, விடை, விகுதி, வில், வில்வம், பாவி, பாதம், பாசம், பாவல், பால், பாகு, பாவை, பாதி, படை, வதம், வசம், வகு, வவை, வதி, வடை, குவி, குதம், கும்பா, குதி, குடை, குவளை, திளை, தின், திதி.

### செய்து பாருங்கள்

40, 24, 16 வயதுகள்.

### சோடி சேருங்கள்

MEET — 5334
TEAM — 4315
BEAT — 2314
SOON — 6778
SAKE — 6193
TEAK — 4319

## தாய்ப்பாலே...

(I ஆம் பக்கத் தொடர்)

மாணிக்காதீர்கள். அவை அழகு சாதனங்கள் அல்ல. சேயின் பசி தீர்க்க ஆண்டவன் படைத்த அற்புத காமதேனு. எனவே அவற்றின் பயனை தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

மனைவி பிள்ளைகளுக்குப் பால் கொடுப்பதை கணவன்மார் ஊக்கப்படுத்த வேண்டும். அப்போதுதான் மனைவி — தாய்— தனது குழந்தையை சீராகவும் சிறப்பாகவும் வளர்க்க முடியும். உங்கள் செல்வங்களின் எதிர்காலம் உங்கள் கையில்!

★

(இக்கட்டுரையில் பிரசுரமான நவீன பாணி ஓவியம் 'காலம்' சஞ்சிகையிலிருந்து மறுபிரசுரமாகின்றது. ஓவியர் மாற்குவின் மாணவர் கருணாவே இதை வரைந்தவர்.)

## உலகில்...

(VI ஆம் பக்கத் தொடர்)

நோயாளி ஆகி விடவும் கூடும்.

எனவே ஆளுக்கு ஆள் ஆழமான பரிசோதனை செய்யப்பட்ட பின்பு அவர் அவருக்கெனச் சிறப்பான விதத்தில் ஒரு தடுப்பு மருந்தேற்றும் திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டி வரலாம். பின்பு அவரை உலகினில் உலாவரவிட்டு எய்ட்ஸ் நோயை வாங்குகிறாரா இல்லையா என்றெல்லாம் துரத்தித் துரத்தி ஆராய்வது சாத்தியமற்றதே!

எனவே உலகில் மனிதன் உள்ளவரை எய்ட்ஸும் நிலைக்கும் என்பதே தற்போதைக்குப் பலரதும் கருத்தாக உள்ளது.

★

(முற்றும்)

## இழுபறிகளுக்கு..

(XII ஆம் பக்கத் தொடர்)

லட்சுமி ஜகதீசன் உட்பட 21 பேர் மீது மேலும் விசாரணை நடத்தப்படவேண்டும் தேவைப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது ஜுனை குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவேண்டும் என்றும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஜெயின் ஆணைக்குழுவின் அறிக்கை அரசியலில் சிக்கி, நலிந்து சிதைந்த நிலையிலேயே வெளிவந்திருக்கிறது என்றும்—

ஆணைக்குழு அது அமைக்கப்பட்ட நோக்கங்களை எட்டவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 28 லட்சம் முட்டைகளை அழித்துவிட முடிவு!

தமிழ் நாட்டில் சேலம் பகுதியில் குளிர்சாதனப் பாதுகாப்புக் கூடத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள சுமார் 28 லட்சம் கோழி முட்டைகளை அழித்துவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தின் சில மாவட்டங்களில் சத்துணவுக் கூடங்களில் முட்டைகளைச் சாப்பிட்ட குழந்தைகளில் பலருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதற்கு சேலம் அருகில் உள்ள குளிர்பதனப் பாதுகாப்புக் கூடத்தில் வைக்கப்பட்டிருந்த முட்டைகள் தான் காரணம் எனக் கருதப்படுகிறது. அக்கூடத்தில் இன்னும் 28 லட்சம் முட்டைகள் உள்ளன. அந்த முட்டைகள் அனைத்தையும் அழித்து விடுவது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த முட்டைகள் அனைத்தும் நிலத்தில் பள்ளம் தோண்டி புதைக்கப்படும். இப் பணியை நிறைவேற்றுவதற்காக முட்டை உற்பத்தியாளர்கள் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது

குழந்தைகள் வாந்தி எடுக்கக் காரணமாகக் கூறப்படும் முட்டைகளின் மாதிரிகளை மைசூரில் உள்ள மத்திய உணவுப் பொருள் தொழில்நுட்ப ஆய்வு மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சேலம் வந்து எடுத்துச் சென்றுள்ளனர். குளிர்பதனப் பாதுகாப்புக் கூடத்தில் இருக்கும் முட்டைகளின் மாதிரிகளையும் அவர்கள் ஆய்விற்காக கொண்டு சென்றுள்ளனர். இந்த ஆய்வின் முடிவு வருவதற்கு பல நாள்கள் ஆகலாம் என்று கால்நடை அறிவியல் மருத்துவப் பல்கலையின் துணைவேந்தர் டாக்டர் எஸ். சண்முகசுந்தரம் தெரிவித்தார்.

முட்டைகளை சாதாரண தட்பவெப்ப நிலையில் 21 நாள்களும், குளிர்பதனப் பாதுகாப்புக் கூடத்தில் மூன்று மாதங்களுக்கும் தரம் குறையாமல் வைத்திருக்க முடியும்.

## அறிவிப்புடன் வரும் யமன்

ஒருவன் சாவு வருவதை நினைத்து மிகவும் அச்சம் கொண்டான்; இறப்புக்குத் தலைவனான யமனைக் குறித்துக் கடுந்தவம் செய்தான்.

அவன் முன் தோன்றிய யமன், ''உனக்கு என்னவரம் வேண்டும் கேள்?'' என்றான்.

''தாங்கள் திடுதிப்பென்று என் முன் தோன்றி என் உயிரை எடுத்துச் செல்லக் கூடாது மூன்று முறையாவது தாங்கள் வரப்போவது குறித்து எனக்கு முன் அறிவிப்புத் தரவேண்டும். அதற்குள் என் குடும்பத்துக்கான வேலைகளை முடித்து விடுவேன். பிறகு தாங்கள் வந்து என் உயிரை எடுத்துச் செல்லுங்கள். இதுதான் நான் கேட்கும் வரம்'' என்றான்.

''அப்படியே செய்கிறேன்'' என்று சொல்லி மறைந்தான் யமன்.

பல ஆண்டுகள் கழிந்தன. திடீரென்று ஒரு நாள் அவன் முன் தோன்றிய யமன், 'உன் ஆயுள் இன்றோடு முடிந்து விட்டது என்னோடு புறப்படு' என்றான்.

அதிர்ச்சியடைந்த அவன், ''மூன்று முறை தங்கள் வருகை பற்றி எனக்கு முன் அறிவிப்புத் தருவதாக வாக்களித்த தாங்கள் திடீரென்று என் முன் தோன்றி, 'உன் ஆயுள் இன்றோடு முடிந்து விட்டது' என்று சொல்வது சரியா?'' என்று கேட்டான்.

'மூன்றுமுறை உனக்கு முன் அறிவிப்புக் கொடுத்து விட்டுத்தானே வருகிறேன்?'' என்றான் யமன்.

''எப்பொழுது முன் அறிவிப்புத் தந்தீர்கள்?'' என்று கேட்டான் அவன்.

''நான் வருவதன் அறிகுறியாக முதலில் உன் கூலமுடிகளை நரைக்கச் செய்தேன் இரண்டாவதாக, உன் தலைமுடிகள் எல்லாம் கொட்டி வழுக்கை அமையும்படி செய்தேன். மூன்றாவதாக உன் தோல் சுருங்கும்படி செய்தேன். ஆனால் நீயோ நான் அறிவிப்புத் தரவில்லை என்று சொல்கிறாய்'' என்றான் யமன்.

தான்தான் யமனின் முன் அறிவிப்புகளைப் புரிந்து கொள்ளவில்லை என்று உணர்ந்த அவன் யமனுடன் சென்றான். ★

## செம்மணி ஆராய்வுக்கு...

(II ஆம் பக்கத் தொடர்)

எனவே உறவினர்கள் சடலங்களைத் தோண்டும்போது அந்த இடத்தில் இருந்தால் கொலையுண்டவர்களை இனம் கண்டு கொள்வது சிறிது இலகுவாக அமையும், எனக் கருதப்படுகிறது.

இதேபோன்று புதைகுழிகளைத் தோண்டுதல், உடற்கூற்றியல் முறையில் சடலங்கள் அல்லது அவற்றின் எச்சங்களை இனங்காணுதல் ஆகிய பணிகள் எவ்வளவு விரைவில் ஆரம்பிக்கப்பட முடியுமோ அவ்வளவு கெதியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதனைக் கருத்திற்கொண்டு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தமது பணிகளை றொக்கட் வேகத்தில் விரைவுபடுத்த வேண்டும். இல்லையேல் அக்குழு பாடுபடுவது பயனற்றதாகிப் போகக்கூடும். மறுபக்கத்தில் கண்துடைப்புக்காகச் செய்யப்பட்ட காரியம் ஆகியும் விடலாம். மனித உரிமைகளைப் பேணுவதில் அக்கறையுள்ளவர்கள், நீதித்துறையைச் சேர்ந்தவர்கள், மக்கள் நலனில் அக்கறை கொண்ட அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இப்பணிகளின் போது உடனிருப்பது நல்லது.

அப்போதுதான் உண்மையும் நீதியும் நிலைநாட்டப்படும் விதத்தில் மனித உரிமைகள் குழு செயலாற்றுகிறது; ஆற்றும் என்ற நம்பிக்கை குடாநாட்டு மக்களுக்கு உண்டாகும்.

★ ★ ★

சப்பாத்துக்கு ஏற்ற கால்

தென்னிலங்கையில் மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. அதற்கு வகை செய்யும் விதத்தில் அவசரகாலச் சட்டம் நாடு முழுவதும் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இந்த இரண்டு உத்தரவுகளையும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பிரகடனப்படுத்தினார்.

மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படும்; அதன் பொருட்டு அவசரகாலச் சட்டம் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்படும்: எனபதெல்லாம் ஏற்கனவே திட்டமிடப்பட்ட அலுவல்கள். இந்தச் செயற்பாட்டைச் சரியாக நோக்கின் இதுகாலுக்கு ஏற்ற சப்பாத்தைத் தைக்காமல், சப்பாத்துக்கு அளவாக காலை வெட்டும் கெட்டித்தனமாகும்.

மாகாண சபைத்தேர்தல்களுக்கு முகங்கொடுக்க ஆளும் கட்சி அஞ்சுகிறது. அதன் மூலம் தனது பலவீனம் வெளிப்பட்டுவிடும் என்று பயப்படுகிறது. தேர்தலை நடத்தி பலவீனத்தை வெளிப்படுத்தி விட்டால் அரசியல் வீழ்ச்சி ஏற்படும் சாத்தியம் நிறையவும் உண்டு. அதனைத் தவிர்க்கவே மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன

ஐ.தே. கட்சியும் இப்படிக் காரணம் கூறுவதனால் அது தவறானது என்று சொல்வதற்கில்லை. தேர்தல் ஒத்திவைப்புக்கு உண்மைக் காரணம் அதுவேதான்.

சப்பாத்துக்கு ஏற்றாற்போல் காலை வெட்டியது போதாது என்று, மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் அலுவலிலும் அரசாங்கம் ஈடுபட்டிருப்பது இன்னொரு வேடிக்கை ஆகும்.

தென்னிலங்கையில் தேர்தலை நடத்துவதனால் அதற்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும்; இல்லையேல் குளறுபடியும் மோசடியும் தில்லுமுல்லும், நிறைந்த தேர்தலே மிஞ்சும் என்றும் அரசாங்க சார்பில் தெரிவிக்கப்படுகிறது. தேர்தலுக்காக முப்பதாயிரம் படையினரை வடக்கு—கிழக்கு யுத்த களத்திலிருந்து தெற்கே அழைப்பதால் போரில் அரசு வெற்றி அடைவது தடைப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்போதைய நிலையில்— வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை முன்னெடுத்துச் செல்லப்படும் வேளையில் படை வாபஸ் உசிதமானதல்ல என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கூறியிருக்கிறார். ஆனால் இந்த வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையில் அரசாங்கம் எப்போது வெல்லும் என்பது அமைச்சருக்கும் தெரியாது; அரசுக்கும் தெரியாது; எவருக்குமே தெரியாது. இப்படி இருக்கையில் அரசு போரில் வென்ற பின்னர் தான், புலிகளை பலவீனப்படுத்திய பின்னர்தான், தேர்தலை நடக்க முடியும். போரே இப்போதைக்கு முக்கியம் என்று மூத்த அமைச்சர்கள் பலரும் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர்.

இவர்களின் கூற்றுகளையும் நடவடிக்கைகளையும் நோக்கினால் மாகாணசபைத் தேர்தலோ, வேறு எந்தத் தேர்தலோ ஆகக்குறைந்தது இன்னும் இரண்டுவருடங்களிலாவது நடக்கும் என்று கூற முடியாது. இதனை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அரசின் அறிவிப்பும் அமைந்திருக்கிறது. அதாவது காலவரையறையின்றி மாகாண சபைத் தேர்தல் ஒத்திப்போடப்பட்டிருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது.

காலவரையறையற்ற தேர்தல் ஒத்திவைப்பால், போர் காலவரையின்றி நடைபெறும் என்பது தெளிவாகிறது அதே போன்று போரில் எப்போது வெற்றிகிட்டும் என்பது குறித்து கால அட்டவணை எதுவும் வகுக்கப்படாததால் தேர்தல் எதுவும் இப்போதைக்கு நடக்காது என்ற கருத்து மறுபக்கத்தில் தெளிவாகிறது. இந்தப் பின்னோக்குத் தாக்க வாய்ப்பாட்டை (Reversible Reaction Formula) அரசாங்கம் மனதில் ஆழமாக இருத்தி தேர்தல்களைத் தூரத்தள்ளி வைக்கத் திட்டமிட்டுச் செயலாற்றுகிறது.

மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைப்பதனை ஜனாதிபதி சந்திரிகாமனதார விரும்பவில்லை என்றும் அவருடைய கொள்கை அணுகுமுறை வகைக்கு அது மாறுபட்டது என்றும் அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் கருதுகின்றன. அவருக்குப் பின்னால் உள்ள சிலர் அவரை இந்த வழி செல்ல நிர்ப்பந்தித்ததாலேயே அவர் தனது போக்கை மாற்றிக்கொண்டார் என்றும் சொல்லப்படுகிறது.

இதனை உள்நோக்கி ஆராய்ந்தால், தேர்தல்களை நடத்துவதால் தமது எதிர்கால அரசியல் சாய்ந்து போகலாம் என்ற சிந்தனை சந்திரிகாவுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு சிங்கள மக்களுக்காகத்தானும் எதனையும் பெரிதாகச் சாதித்து விடவில்லை என்ற கருத்தே அரசியல் விமர்சகர்கள் மத்தியில் நிலவுகிறது. அப்படியிருந்தும் எதிர்தரப்பில் வல்லமையான தலைவர் ஒருவர் இல்லாத குறைபாட்டினால் தொடர்ந்து சந்திரிகாவே தென்னிலங்கையில் முன்னணி அரசியல் தலைவியாக நீடிக்கும் வாய்ப்புண்டு என்பதும் நிதர்சனமானதே.

தேர்தல்களை நடத்தி, தமது இந்த அரசியல் அந்தஸ்தைக் குறைத்து விட சந்திரிகா விரும்பமாட்டார். அதனால் தேர்தலை ஒத்தி வைக்கும் பக்கப்பாட்டுக்கு அவர் தலைசாய்த்திருக்க வேண்டும்.

சிங்களமக்களின் 'போர்த் தலைவன்' என்று தென்னிலங்கையில் சில சாரரால் வர்ணிக்கப்படும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் மனகசப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுவருகின்றது.

அழைப்பு அனுப்பியும் ரத்வத்தையின் 60ஆவது பிறந்தநாள் விழாக் கொண்டாட்டத்துக்கு ஜனாதிபதி செல்லவில்லை. நள்ளிரவுக்குப் பின்னரும் அவருக்காகக் காத்திருந்துவிட்டுக் குறிப்பிட்ட நிகழ்வு சோபையிழந்து முடிவுற்றதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்கத்தின் தீர்வுப் பொதிக்கு எதிரான போக்கை அனுருத்த நாடி இருப்பதாகச் சந்திரிகா கருதுவதே இந்த மனக்கசப்புக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

எனினும் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு எல்லாரையும் விட சந்திரிகாவுக்கு உதவியவர் அனுருத்ததான். போரையும், தேர்தலையும் தொடுத்துக்காட்டி தேர்தல் ஒத்திவைப்பதை சிங்கள மக்களிடம் நியாயப்படுத்திக் காட்டியவரும் அவரே. ஆகையால் ஜனாதிபதிக்கும் ரத்வத்தைக்கும் இடையிலான மனக்கசப்புத் தற்காலிகமானதே— நிரந்தரமானதல்ல என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது. தமது தம்பி அனுராவை ஆளுங்கட்சியுள் சேர்த்துப் பிரதமர் பதவி வழங்கப்போவதாக ரத்வத்தைக்குப் பயம் காட்டுகிறாரே அன்றி, அவரைத் தூரவிட்டால் தமக்கு ஆபத்தாகிவிடும் என்றும் சந்திரிகா கருதுவதாகச் சொல்லப்படுகிறது.

★

## மாடும் சுண்டெலி....

(IX ஆம் பக்கத் தொடர்)

நிலத்தைக் கிளறியது; கத்தியது. பின் களைத்துப் போய்ப் படுத்து விட்டது.

சுண்டெலி, ஓட்டைக்கு வெளியே எட்டிப் பார்த்துச் சொன்னது: ''ஐயா மாடே! நீங்கள் பெரிய ஆள்தான்; ஆனால் என்னைப் போல் சின்னன் சிறியவர்களாலும் சில நேரங்களில் உங்களை வெல்ல முடியும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுபறிகளுக்கு மத்தியில் வெளியாகி இருக்கும்

# ஜெயின் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை!

## ஜெயலலிதாவை சாந்தப்படுத்தவே கருணாநிதியை விசாரிக்கக் குழு

நீண்ட நாள்களாக எதிர்பார்க்கப்பட்டுவந்த ஜெயின் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கடந்த வாரம் இந்திய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பதவியில் உள்ள அரசையே கவிழ்க்கும் அளவுக்கு இந்திய வரலாற்றில் அரசியல் சர்ச்சைகளில் சிக்கிக்கொண்ட "பெருமை" ஜெயின் ஆணைக்குழுவுக்கே உண்டு.

12 தடவைகள் இதன் கால எல்லை நீடிக்கப்பட்ட நிலையில் இறுதியாக கடந்த 31 ஆம் திகதி இறுதி அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

### இடைக்கால அறிக்கை

ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க



கருணாநிதி

முன்னர் இடைக்கால அறிக்கை ஒன்றை தயாரித்து கையளித்தது.

1997 ஓகஸ்ட் 28ஆம் திகதி குஜ்ரால் தலைமையிலான அப்போதைய ஐக்கிய முன்னணி அரசிடம் இடைக்கால அறிக்கை கையளிக்கப்பட்டு நவம்பர் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படமுன்னரேயே அதன் விவரங்கள் கசிய ஆரம்பித்தன.

அதனை வைத்தே தி.மு.க.வை ஐக்கிய முன்னணி அரசில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஐக்கிய முன்னணி அரசுக்கு காங்கிரஸ் நெருக்கடி கொடுத்தது.

சீதாராம் கேசரியின் தவறான அரசியல் அணுகுமுறையால் இறுதியில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. பல கோடி ரூபா செலவில் இந்த ஆண்டு மார்ச் மாதம் தேர்தல் நடத்தப்பட்டது. இடைக்கால அறிக்கை சமர்ப்பிப்பதில் ஏன் அவசரம் காட்டப்பட்டது என்ற கேள்வி இன்னும் எழுப்பப்பட்டு வருகிறது.

### முரண்பாடுகள்

ஆனால் இடைக்கால அறிக்கை வெளியானபோது ஏற்பட்ட சலசலப்பு இறுதி அறிக்கையின்போது இல்லை என்றே கூறவேண்டும்.

இடைக்கால அறிக்கைக்கும் இறுதி அறிக்கைக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளே இதற்குக் காரணம்.

விடுதலைப்புலிகளுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதியும் அவரது அரசும் ஆதரவு அளித்ததாக இடைக்கால அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. ஆனால் இறுதி அறிக்கையில் அப்படி இல்லை.

பல விடயங்கள் குறித்து தமிழக முதல்வர் கருணாநிதி விசாரிக்கப்பட வேண்டும் என்று மட்டுமே இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பாரதூரமான குற்றச்சாட்டு இல்லை.

விசாரணை நடந்த காலத்தில் ஜெயின் ஆணைக்குழு முன் தமிழக முதல்வர் கருணாநிதியும் சாட்சியம் அளித்தார். தாம் மட்டும் அல்ல தமிழ்நாட்டில் பதவியில் இருந்த ஒவ்வொரு அரசாங்கமும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக இருந்ததாக அப்போது அவர் தெரிவித்தார். ஆனால் பத்மநாபா கொலையின் பின்னர் விடுதலைப்புலிகள் சம்பந்தமான தனது அணுகு முறையில் மாற்றம் ஏற்பட்டது என்று அவர் கூறினார்.

இறுதி அறிக்கையில் கருணாநிதி சம்பந்தமாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை நோக்கும்போது கருணாநிதியின் சாட்சியத்தை ஆணைக்குழு ஓரளவு ஏற்றுக்கொண்டுவிட்டது போன்றே தெரிகிறது.

### காங்கிரஸின் நிலை

இடைக்கால அறிக்கையை வைத்து பெரும் அரசியல் புயலையே கிளப்பியது காங்கிரஸ்.

ஆனால் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது அது மௌனம் சாதித்தது. உடனடியாக கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

சோனியாகாந்தி தலைமையில் காங்கிரஸின் அரசியல் குழு கூடி நீண்டநேரம் விவாதித்த பின்னர் இறுதி அறிக்கையை ஏற்பதாக அறிவிக்கப்பட்டது.

எனினும் இறுதி அறிக்கையை வைத்து பாரதீய ஜனதா அரசினால் தயாரிக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கையை காங்கிரஸ் நிராகரித்து விட்டது.

இந்த ஆண்டு மார்ச் 7 ஆம் திகதி இறுதி அறிக்கையை நீதிபதி ஜெயின் அரசிடம் சமர்ப்பித்திருந்தார். இதனை வைத்தே நடவடிக்கை அறிக்கையை அரசு தயாரித்து இரண்டு அறிக்கைகளையும் ஒன்றாக கடந்த 31 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது

### ராஜீவ் கொலை

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ்நாட்டில் உள்ள ஸ்ரீபெரும்புதூருக்கு தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொள்ளச் சென்ற சமயம் 1991 மே மாதம் கொலை செய்யப்பட்டார்.

பெண் தற்கொலைக்குண்டுதாரி ஒருவரே இந்தக் கொலைக்குக் காரணம் என்றும் —

இலங்கையில் தனிநாடு ஒன்றுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளே இந்தக் கொலையைச் செய்தனர் என்றும் — இந்திய புலனாய்வுத்துறையினர் தெரிவித்தனர்.

இந்தக் கொலை தொடர்பாக பலர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு கடந்த பெப்ரவரியில் இலங்கையர், இந்தியர் உட்பட 26 பேருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.



ஜெயலலிதா

1991 தேர்தலில் பதவிக்கு வந்த நரசிம்மராவ் அரசு நீதிவிசாரணைகளை ஒரு புறம் நடத்திய சமயம் இந்த கொலைக்கு பின்னணியில் உள்ள சதி குறித்து விசாரணை நடத்த ஓர் ஆணைக்குழுவை நியமித்தது. அதுவே ஜெயின் ஆணைக்குழு. நீதிபதி மிலாம்சாண்ட் ஜெயின் தலைமையில் இது அமைக்கப்பட்டது.

கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கை ஒன்பது தொகுதிகளைக் கொண்டது.



சந்திரசுவாமி

### சந்திரசுவாமி மீது குற்றச்சாட்டு

இறுதி அறிக்கையில் சந்திரசுவாமி மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

புரூணி நாட்டின் சுல்தான், முன்னாள் ஹொலிவூட் நடிகை எலிஸபெத் ரெய்லர், சவூதி ஆயுதவிற்பனை மன்னன் அனான் காசோகி ஆகிய பெரும் புள்ளிகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர் சந்திரசுவாமி.

தற்பொழுது பல மோசடிக் குற்றச்சாட்டுக்களின் பேரில் அவர் விசாரணையை எதிர்நோக்கி உள்ளார்.

ராஜீவ் கொலைசெய்யப்பட்டதில் சந்திரசுவாமியின் [illegible] விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஜெயின் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அனைத்துச் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள், சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்த்தால் ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு சந்திரசுவாமி உடந்தையாக இருந்திருக்கலாம் என்ற சந்தேகத்துக்கு இடமிருப்பதாகவும் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முன்னாள் பிரதமர்கள் மீது குற்றச்சாட்டு இல்லை

இதேவேளை முன்னாள் இந்தியப் பிரதமர்கள் வி. பி. சிங், சந்திரசேகர், பி. வி. நரசிம்மராவ் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுக்களை ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையில் நிராகரித்துவிட்டது. குற்றச்சாட்டுக்கள் கற்பனை பண்ணிக் கூட பார்க்கமுடியாதவை என்று ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வி. பி. சிங் நீண்டகாலமாக ராஜீவ்காந்தி மீது கடும் குரோதம் கொண்டிருந்தார் என்றும்—

ஸ்ரீ பெரும்புதூரில் ராஜீவின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க அப்போதைய பிரதமர் சந்திரசேகர் தவறி இருந்தார் என்றும்—

நரசிம்மராவ் சில தகவல்களை மூடி மறைக்க முயன்றார் என்றும் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவர்கள் மூவருக்கும் ராஜீவ் கொலையுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தம் இருக்கலாம் என்ற சாரப்பட இடைக்கால அறிக்கையில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

### ஜெயலலிதா ஏமாற்றம்

ஜெயின் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையைப் பயன்படுத்தி தி. மு. க. அரசைக் கலைக்கும் தனது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்த காத்திருந்த தமிழ்நாடு முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு இறுதி அறிக்கை ஓரளவு ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

எனினும் கருணாநிதி மீது விசாரணை நடத்தும் வாய்ப்பை பாரதீய ஜனதா அரசு தக்கவைத்திருப்பது ஜெயலலிதாவைச் சமாதானப்படுத்தவே என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆணைக்குழு அறிக்கை சம்பந்தமான அரசின் நடவடிக்கை அறிக்கையில் பல்துறைக் கண்காணிப்புக் குழு (Multi Disciplinary Monitoring Agency) ஒன்று கருணாநிதி மீதான நடவடிக்கை குறித்து முடிவு செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மீதான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களில் நீதிமன்றத் தீர்ப்பு வெளியாக முன்னர் கருணாநிதி அரசைக் கலைப்பதில் ஜெயலலிதா தீவிரம் காட்டிவருகிறார். ஆனால் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சியும் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸின் சமதாக் கட்சியும் தி. மு. க. அரசைக் கலைக்கும் எந்த ஒரு முடிவுக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதால் தி. மு. க. அரசு கலைப்பு உடனடியாக சாத்தியமானது அல்ல என்றே கருதப்படுகிறது.

இவற்றைக் கருத்தில் கொண்டே அரசமைப்பைப் பயன்படுத்தி தி. மு. க. அரசைக் கலைக்கப்போவதில்லை என்று உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி தெரிவித்து வருகிறார். தி. மு. க. அரசைக் கலைப்பதை விடுத்து வேறு விடயங்களில் ஜெயலலிதாவை சமாதானப்படுத்துவதிலேயே பாரதீய ஜனதா தலைவர்கள் அக்கறை காட்டி வருகின்றனர்.



ராஜீவ் காந்தி

### சுப்பிரமணியசுவாமி ஒத்துழைக்கவில்லை

ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமிக்கும் சந்திரசுவாமிக்கும் இடையிலான உறவுகள் குறித்தும் ஆணைக்குழு கேள்வி எழுப்பி உள்ளது.

விசாரணையின்போது சுப்பிரமணியசுவாமி ஒத்துழைக்கவில்லை என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தனது அறிக்கை மீது அரசு எத்தகைய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆணைக்குழு எதுவும் குறிப்பிடவில்லை. எனவே ஆணைக்குழுவின் சந்தேகத்துக்குள்ளான தனிநபர்கள், அமைப்புகள் தொடர்பாக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை முடிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கவுமே பல்துறை கண்காணிப்புக் குழுவை அமைக்க பாரதீய ஜனதா அரசு முடிவு செய்தது.

இந்த கண்காணிப்புக்குழு கருணாநிதியை மட்டும் அல்ல முக்கிய சந்தேகநபரான சந்திரசுவாமியையும் விசாரணை செய்யும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் தமிழர்களை ஒட்டுமொத்தமாகக் குற்றஞ்சாட்டி இருந்தது. ஆனால் இறுதி அறிக்கையில் இதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் ராஜீவ் கொலையை எவரும் செய்திருக்க முடியாது என்று இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஒட்டுமொத்தமாக தமிழர்கள் மீது குற்றம் சுமத்தும் நோக்குடன் அவ்வாறு தெரிவிக்கப்படவில்லை என்று இறுதி அறிக்கையில் சமாதானம் கூறப்பட்டுள்ளது.

### 21 பேர் மீது விசாரணை நடத்த பரிந்துரை

### முன்னாள் அமைச்சர் சுப்பு

(XI ஆம் பக்கம் பார்க்க)

உலகம்

என்.பி.சீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org